# புதிய ஜனநாயகம்

மே 2015
ரூ.10.00



## குற்றவாளி ஜெயாவுக்கு ஆறுதல் -

# ‘தத்து இருக்க பயமேன்!’





# ஆற்று மணல் கொள்ளையர்களை விரட்டியடித்த வீரம் செறிந்த போராட்டம்!

‘‘**கா**விரி பெருக்கெடுத்தால் கொள்ளுமிடம் கொள்ளிடம்’’ என்று அழைக்கப்பட்ட கொள்ளிடம் ஆறு, மணல் கொள்ளையால் இன்று தனது மணலை இழந்து, வெறும் களிமண் தரையாகி விட்டது. இருப்பினும், இதற்கு விதிவிலக்காக அன்பில்-மங்கம்மாள்புரமும், கூகூரும் உள்ளன. தஞ்சை, நாகை மாவட்டங்களின் விவசாயத்திற்கு ஆதாரமாய் விளங்கும் கல்லணை கம்பீரமாய் வீற்றிருப்பது இந்த ஊர்களில் படிந்துள்ள 100 அடி ஆழம் கொண்ட மணலாலான அடித்தளத்தின் மீதுதான். இந்த அடித்தளத்தையும் சுரண்டி கல்லணையையே அழிக்கத் துடிக்கின்றனர், மணற்கொள்ளையர்கள்.

போலீசு மற்றும் அதிகார வர்க்கத்தின் ஒத்துழைப்போடு நடராசபுரம் அருகிலுள்ள படுகை கிராமத்திலிருந்து சுமார் 300 மீட்டர் தூரத்தில் கொள்ளிடம் ஆற்றில், குவாரி அமைக்கக் கீற்றுக் கொட்டகை போட்டார்கள் மணல் கொள்ளையர்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இந்த ஊருக்குக் கிழக்கே உள்ள குவாரிகளில் மணல் அள்ளிக் கொண்டு, ஒரு நாளைக்கு சுமார் 1500 முதல் 2500 லாரிகள் வரை இந்த ஊர் வழியே வந்து போனதால் சாலைகள் குண்டும் குழியுமாக மாறிப் போனதோடு, பலர் படுகாயமடைந்து பலியாகியதால் மணல் லாரிகளை மறித்துப் போராடிய இக்கிராம மக்கள், இப்போது மீண்டும் தங்கள் ஊருக்கு அருகிலேயே மணல் குவாரிகள் அமைக்க முயற்சிப்பதை எதிர்த்தும் கொட்டகையைப் பிரிக்கக் கோரியும் கடந்த மார்ச் 20-ஆம் தேதியன்று தாசில்தாரிடம் பேச்சுவார்த்தை நடத்தி மனு கொடுத்தனர். கீற்றுக் கொட்டகையை அப்புறப்படுத்துவதாக அதிகாரிகள் ஏற்றுக் கொண்டதை எழுத்துபூர்வமாகவும் பெற்றுக்கொண்டனர். இருப்பினும், எழுதிக் கொடுத்த அதிகாரிகள் அதை நடைமுறைப்படுத்தாததோடு, தகரக் கொட்டகையும் ஆழ்துளைக் கிணறும் அமைத்துக் கொள்ள மணற்கொள்ளையர்களுக்கு அனுமதியளித்தனர்.

அதிகாரிகள் எழுதிக் கொடுத்ததை அதிகாரிகளே மதிக்கவில்லை என்பதோடு, மக்களுக்கு எதிராகவும் செயல்பட்டதைக்கண்டு அன்பில் - மங்கம்மாள்புரம், கூகூர், ஆனந்திமேடு, சாத்தமங்கலம், வழுதியூர், நடராசபுரம், மேட்டாங்காடு, கோவிந்தபுரம், கொன்னக்குடி ஆகிய கிராம மக்கள் வெகுண்டெழுந்து, ‘‘கொள்ளிடம் ஆற்று நல பாதுகாப்புச் சங்க’’மாக அணிதிரண்டனர். மணல் குவாரியை அகற்றக் கோரி முற்றுகைப் போராட்டத்துக்கு அறைகூவல் விடுத்த இச்சங்கத்தினர், இந்திய கம்யூனிஸ்டு கட்சியையும் விருத்தாச்சலம் - கார்மாங்குடி வெள்ளாற்றில் மணல் குவாரியை இழுத்து மூடிய முன்னுதாரணமிக்க போராட்டத்தை வழிநடத்திய மக்கள் உரிமைப் பாதுகாப்பு மையத்தினரையும் அழைத்திருந்தனர்.



மார்ச் 31-ஆம் தேதி காலை 9 மணிக்கு நெடுஞ்சாலையில் ஆயிரக்கணக்கில் குவிந்து இப்பகுதிவாழ் மக்கள் முற்றுகைப் போராட்டத்தை நடத்தியபோது, முன்னணியாளர்களைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்த டி.எஸ்.பி, தாசில்தார், ஆர்.டி.ஓ; பொதுப் பணித்துறை அதிகாரிகள், சட்ட விரோத கொட்டகையை அகற்ற மேலதிகாரிகளிடம் கேட்டுச்

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்...

புதிய ஜனநாயகம்

மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு

தொகுதி: 30 இதழ்: 7

மே 2015

உள்நாடு

தனி இதழ்: ரூ.10.00

ஆண்டு சந்தா: ரூ.120.00

வெளிநாடுகள்

(வான் அஞ்சலில்)

ஆண்டு சந்தா: US $ 20

அட்டை வடிவமைப்பு: முகிலன்

தொடர்பு முகவரி:

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.

மின்னஞ்சல்:
puthiyajananayagam@gmail.com

தொலைபேசி: 94446 32561

அரசு ஒப்பந்த வேலைகள் (OUTSOURCING):

# மக்கள் பணத்தைக் கொள்ளையிடும் குறுக்கு வழிகள்

பொள்ளாச்சி வட்டாட்சியர், கோட்டாட்சியர் அலுவலக அரசு வாகன ஓட்டுநர்கள் கடந்த மாதம் போராட்டத்தில் குதித்தனர். அதற்கு அவர்கள் சொன்ன காரணத்தைக் கேட்ட அரசியல் அறியாத மக்கள் பலருக்கும் இப்படியெல்லாம் நடக்குமா என்று வியப்பானதாக இருக்கும். அரசியல் அறிந்தவர்களோ இதெல்லாம் சகஜமப்பா என்று எடுத்துக் கொள்வார்கள். அரசு அலுவலகங்களுக்கென்று நன்கு ஓடும் நிலையில் அரசு வாகனங்கள் இருந்தபோதும், அதிகாரிகள் அவற்றைப் பயன்படுத்தாமல் வெளியாருக்குச் சொந்தமான வாகனங்களை ஒப்பந்த சேவை அடிப்படையில் அமர்த்திக் கொள்கிறார்கள். இதனால் பணி எதுமின்றி தாங்கள் சும்மாகவே இருப்பதாகவும், பிற்காலத்தில் இதையே காரணங்காட்டித் தமது வேலை பறிக்கப்படும் என்று அஞ்சுவதாகவும் பொள்ளாச்சி அரசு வாகன ஓட்டுனர்கள் போராட்டத்தில் குதித்துள்ளனர். பொள்ளாச்சி அரசு வாகன ஓட்டுநர்கள் எழுப்பியிருக்கும் இந்தப் பிரச்சினை அரசின் எல்லாதுறைகளுக்கும் பொருந்தும். போலீசு, தொலைத் தொடர்புத்துறை (பி.எஸ்.என்.எல்.), மின்துறை போன்றவற்றிலும் இதே கதைதான்!

இதனால், அரசுக்கோ இரட்டை நட்டம். வேலை வழங்கப்படாத அரசு வாகன ஓட்டுநர்களுக்கு ஊதியம் மற்றும் தனியார் வாகனங்கள் ஒப்பந்த சேவைக்காக அமர்த்துவதால் செலவு என்று மக்கள் பணம் வீணடிக்கப்படுகின்றன. மக்கள் நலப் பணிகளுக்காகவும் இலவசமாகவும், குறிப்பாக விவசாயிகளுக்கு மானியமாகவும், கடன்-வட்டி தள்ளுபடியாகவும் அரசுப் பணம் செலவழிக்கப்படுவது குறித்து மண்டை வீங்கிப்போகும் பார்ப்பனியக் குட்டி முதலாளிய அறிவுஜீவிகள் இந்த வகையிலான அரச ஒப்பந்தச் சேவைகள் அமர்த்தம் (OUTSOURCING) காரணமாக நாட்டிலேயே மிகப்பெரும் கொள்ளையாக மேலிருந்து கீழ்வரை கட்டமைக்கப்பட்டிருப்பது குறித்துக் கண்டுகொள்வதே கிடையாது.

அரசுப் பணிகளில் ஒப்பந்தச் சேவைகள் அமர்த்தம் (OUTSOURCING) என்பது நமது நாட்டில் புதிதல்ல; காலனிய காலத்திலேயே புகுத்தப்பட்டதுதான். முக்கியமாக முதலாம், இரண்டாம் உலகப் போர்களின் போதே ஏகாதிபத்தியங்களின் நாடுபிடிக்கும் போர்களில் இராணுவத்திற்கான ஒப்பந்தச் சேவைகளில் ஈடுபட்ட இந்தியத் தரகு முதலாளிகள் தோன்றி, அப்போதே கோடி கோடியாக செல்வங்களைக் குவித்தனர். இவர்கள் மத்தியிலிருந்து நவீன இந்தியாவின் ஆளும் வர்க்கமாகத் தரகு முதலாளிகள் வலுப்பெற்றனர்.

காலனிய ஏகாதிபத்தியங்களின் தேவைக்காகக் கொண்டுவரப்பட்ட ஒப்பந்தச் சேவைகள் அமர்த்தமுறை (OUTSOURCING) அவர்கள் புகுத்திய தனியார்மயம்-தாராளமயம்-உலகமயமாக்கம் ஆகிய புதிய பொருளாதாரக் கொள்கையின் ஒரு பகுதியாக 1980களில் பன்முகமானதாக விரிவாக்கப்பட்டு, உள்நாட்டில் ஒப்பந்தச் சேவைகள் அமர்த்தமுறையோடு (OUTSOURCING) வெளிநாடுகளில் அயலக ஒப்பந்தச் சேவை அமர்த்தம் (OFFSHORING) என்று விரிவாக்கப்பட்டது. பொதுவில், ஒப்பந்தச் சேவை அமர்த்தம் எதுவானாலும் கார்ப்பரேட் நிறுவனங்களின் உற்பத்தி மற்றும் பிற செலவுகளைக் குறைத்து இலாபங்களைப் பெருக்கிக் கொள்வதற்காக செய்யப்படுவது.

குறிப்பாக, உலகின் மக்கள்தொகை மிகுந்த இரு பெரும் நாடுகளான இந்தியா, சீனா உள்ளிட்ட கீழை நாடுகள் மலிவான உழைப்புச் சந்தையைப் பெற்றுள்ளன. ஏராளமான மனிதவள ஆதாரங்களையும் உற்பத்தித் திறனையும் கொண்டுள்ளன. இந்தியாவும் சீனாவும், ஒவ்வொரு ஆண்டும் 2,00,000 பொறியாளர்கள் மற்றும் அறிவியல் பட்டதாரிகளை உருவாக்கு

கின்றன. மேலும், இரண்டு நாடுகளும் குறைந்த செலவு பிடிக்கும் ஒப்பந்தச் சேவையளிக்கும் நாடுகளாக உள்ளன. ஆகவே, இங்கு வெளிநாடுகளின் பன்னாட்டுத் தொழில் நிறுவனங்களுக்கும் உள்நாட்டுக் கார்ப்பரேட் தொழில் நிறுவனங்களுக்கும் அயலக ஒப்பந்தச் சேவை அமர்த்தமுறையோடு (OFF SHORING) உள்நாட்டில் ஒப்பந்தச் சேவைகள் அமர்த்தமுறையும் (OUTSOURCING) முக்கியமானவையாகி விட்டன. இதனால், பல்வேறு வகையிலான சிறிய, பெரிய புதிய தரகு முதலாளிகள் தோன்றிக்கொண்டே இருக்கின்றனர். மேலும், ஏகாதி பத்தியங்களுக்கு சேவகஞ்செய்யும் சமூக ஆதரவு சக்தி களும் பெருகிக்கொண்டே போகின்றன.

ஏகாதிபத்தியங்கள், அவற்றின் ஏகபோகக் கார்ப் பரேட் நிறுவனங்கள், அயல்நாடுகளிலும் உள் நாட்டிலும் இலாப நோக்கத்தில் ஒப்பந்தச் சேவைகளை அமர்த்திக்கொள்வதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், மக்களின் நலனுக்காக, மக்கள் சேவைகளுக் காக செயல்படுவதாகச் சொல்லிக்கொள்ளும் அரசுகள் எதற்காக, எந்த நோக்கில் வெளியில் தனியாரிடம், அந் நியரிடம் ஒப்பந்தச் சேவைகள் அமர்த்திக் கொள்ள வேண்டும்? மக்களுக்கான நலன்கள், சேவைகள் செய் வதை நோக்கமாகக்கொண்டோ, தனது அரசு செலவு களைக் குறைப்பதற்காகவோ இவ்வாறு செய்யவில்லை. அரசுப் பணத்தை, மக்கள் சொத்தை ஒப்பந்தச் சேவை களுக்காக அரசு அமர்த்தும் தனிநபர்கள் அல்லது நிறு வனங்களும், இவ்வாறான ஒப்பந்தங்கள் போடும் அமைச்சர்களும் அரசு அதிகாரிகளும் கொள்ளையடிப் பதற்காகவே இந்த ஒப்பந்த முறை எல்லா அரசுத் துறை களுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது.

நமது நாட்டில் பார்ப்பன குட்டி முதலாளிய அறிவு ஜீவிகளின் அவதாரக் கடவுள், ராஜாஜி எனப்படும் சிறீ மான் ராஜகோபாலாச்சாரியார். அமெரிக்கத் தாசனான இவர், 1950-களிலேயே தனியார்மயம், தாராளமயம் கொள்கைக்காக வாதாடி, பார்ப்பன - பனியா கும்பலின் ஆதரவு பெற்ற (இன்றைய பா.ஜ.க.வின் பொருளாதாரப் பதிலி) சுதந்திரா கட்சியைத் தொடங்கி, நிலைநாட்ட எத் தணித்தவர். நேருவின் கலப்புப் பொருளாதாரக் கொள்கையைக் கடுமையாகச் சாடினார். காங்கிரசு ஆட்சியை லைசென்ஸ்-பர்மிட்-கோட்டா ராஜ்ஜியம் என்று ஏளனம் செய்தார். சோவியத் ஒன்றியத்தின் உதவி யுடன் வந்த அரசுத் துறைத் தொழில்களை வெள்ளை யானைகளைக் கட்டி மேய்க்கும் வேலை என்று கேலி பேசினார். எதற்கு? எல்லாம் பார்ப்பன-பனியா-மார்வாரி -பார்சி தரகு முதலாளிகளின் கொள்ளைக்கு முழுமையாகத் திறந்து விடவேண்டும் என்பதற்காக! எல்லாம் தனியார்மயமாக்க வேண்டும் என்பதற்காக!



ஒப்பந்தச் சேவைகள் அமர்த்தம் என்ற முறையின் கீழ் நடக்கும் குடிநீர் வியாபாரக் கொள்ளை

இப்போது அதனால்தான் தனியார்மயமாக்கம் அதற்குமேலே போய் நாலுகால் பாய்ச்சலில் நடக்கிறது. அரசுத்துறை தொழில்கள் எல்லாம் பார்ப்பன - பனியா - மார்வாரி - பார்சி தரகு முதலாளிகளின் கொள்ளைக்குத் தாரைவார்க்கப்படுகின்றன. அரச ஒப்பந்தச் சேவைகள் அமர்த்தம் (OUTSOURCING) என்பது இப்போது பல பரிமாணங்களைக் கொண்டதாகவும் பூதாகரமான தாகவும் எங்கும் விரவி ஆண்டுக்குப் பல ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு மக்கள் பணத்தை விழுங்கி ஏப்பம் விடுவதாகவும் வளர்ந்து விட்டது. தனியார்மயம், தாராள மயம், உலகமயமாக்கம் முதலிய புதிய பொருளாதாரக் கொள்கை புகுத்தப்பட்டபிறகு கட்டுமான மறுசீரமைப்பு, சீர்திருத்தங்கள் என்ற பெயரில் அரசின் மக்கள் நலப் பணிகள் அனைத்துக்கும் மூடுவிழாக்கள் நடத்தப்படுகின்றன. இருந்தாலும், நமது நாட்டில் ஜனநாயகம் என்ற பெயரில் சட்டமன்ற, நாடாளு மன்ற அமைப்பு முறைகளும் ஓட்டுக் கட்சி அரசியலும் இன்னமும் நீடிக்கின்றன. ஆகவே தான், மக்களின் அடிப்படைத் தேவைகளான குடி யிருப்பு, கழிப்பிடம், உணவு-குடிதண்ணீர், அடிப் படைக் கல்வி, சுகாதாரம், மருத்துவம், சாலை-நடைபாதை, இடுகாடு, இயற்கைப் பேரிடர்-போர்கள் நிகழும்போது நிவாரணங்கள், கொள்ளை நோய்கள் தாக்கும்போது தடுப்பு நடவடிக்கைகள் போன்ற குறைந்தபட்ச மக்கள் நலச்சேவைகளை, தேவைகளை செய்து கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் அரசு இருக்கிறது.

தனியார் முதலாளிகளின் கொள்ளைக்காக ஒப்பந்தச் சேவை மூலம் நடக்கும் ஆதார் அடையாள அட்டை தயாரிக்கும் பணி



ஆனால், புதிய பொருளாதாரக் கொள்கை புகுத்தப்பட்ட பிறகு, பொதுவில் அரசுப் பணிகளுக்கும், குறிப்பாக மேற்கண்டவாறன மக்கள் நலப் பணிகளுக்கும், அடிப்படைத் தேவைகளுக்குமான பழைய அரசுக் கட்டுமான அமைப்புகள் எல்லாம் சிறுகச் சிறுகக் கலைக்கப்படுகின்றன. ஆட்குறைப்பும் வேலைச் சுமை ஏற்றமும் செய்யப்படுகின்றன. அல்லது புதிதாக வேலைக்கு ஆட்சேர்ப்பதில்லை; பல அரசுப் பணிகளுக்கான இடங்கள் காலியாக விடப்படுகின்றன. பல அரசுப் பணிகளுக்கு ஆட்சேர்ப்புக்கே தடை விதித்துள்ளனர். மேல்மட்ட அதிகார வர்க்கம், போலீசு, இராணுவம், துணை இராணுவம் முதலிய அரச வன்முறை அமைப்புகள் தவிர, பிற எல்லாதுறைகளிலும் எலும்புக்கூடு போன்ற வலைப் பின்னலாக அரசு மாற்றப்படுகின்றது. இந்த நிலையில், இனி மேற்கண்ட மக்கள் நலச் சேவைகளை, மக்களின் அடிப்படைத் தேவைகளை செய்து கொடுப்பது எந்த அமைப்புகள்?! இந்தக் கேள்விக்குப் பதிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதுதான், அரச ஒப்பந்தச் சேவைகள் அமர்த்தம் என்ற முறை.

ஆவின் பால் ஊழல் பேர்வழி வைத்தியநாதன்.



குடிதண்ணீர் தேடி மக்கள் தெருத் தெருவாய் அலைந்து கடைசியில் காலிக் குடங்களோடு சாலை மறியலில் இறங்கி தடியடிபட்டுக் கலைகிறார்கள். செய்தியாளர்கள் கேட்டால், மந்திரிகள் சொல்கிறார்கள்: ‘தெருவுக்குத் தெரு லாரிகளில் குடிதண்ணீர் சப்ளை செய்ய ஏற்பாடாகியுள்ளது.’’ குடம் தண்ணீர் ஒரு ரூபாய், இரண்டு ரூபாய்க்காவது கிடைத்ததே என்று அன்றைய பொழுதுக்குப் பெருமூச்சு விடும் மக்களுக்குத் தெரியாது; இதெல்லாம் அரசின் ஒப்பந்தச் சேவைகள் அமர்த்தம் என்ற முறையின் கீழ் ஏற்பாடாகியுள்ளது. ஒருபுறம், பழைய குடிநீர்த் திட்டங்கள் பாழடைந்து போகின்றன. அவற்றைச் சரிசெய்து பராமரிப்பதற்கான நிதி ஒதுக்கீடுகளும் முயற்சிகளும் ஏதுமில்லை. புதிய திட்டங்களுக்கான ஏற்பாடுகளுமில்லை. மறுபுறம், ஆளும் கட்சிப் பொறுக்கி வியாபாரிகள் - முதலாளிகள் முதல் அந்நிய கார்ப்பரேட் வரை தனியார் தண்ணீர் வியாபாரிகளின் கொள்ளை கொடிகட்டிப் பறக்கிறது.

கிராமப்புறங்களில் இருந்து அரசின் ஆவின் பால் நிறுவனத்துக்கு லோடுகள் எடுத்துவரும் ஒப்பந்தச் சேவைக்கு ஆளுங்கட்சிப் பிரமுகர் வைத்தியநாதன் அமர்த்தப்பட்டான். பால் லோடுகள் எடுத்துவரும் வழியில் அவன் ஆட்களை வைத்து ஒரு நாளுக்குப் பல இலட்சம் லிட்டர் வீதம் பத்தாண்டுகளாகப் பாலைத் திருடி வெளிக்கம்பெனிக்கு விற்றுவிட்டு, ஆவின்பாலில் தண்ணீரைக் கலந்து பல ஆயிரம் கோடி ரூபாய் கொள்ளையடித்துள்ளான். (அவன் பிடிபட்டு உச்சநீதிமன்றத்துக்கு பிணை கோரிப்போன வழக்கில் லோடு லாரி ஓட்டுநர்தான் குற்றவாளி என்று அரசே வாதாடியது.) தமிழ்நாட்டில் ஆற்றுமணல் தொழிலை ஏகபோகமாக அரசே எடுத்துக்கொண்ட பிறகு, மணல் வாருவதையும் லோடுசெய்வதையும் தமிழகத்தின் ஏகபோக ஆற்றுமணற் கொள்ளை மஃபியா தலைவர்களான ஆறுமுகசாமியும் படிக்காசுவும் அரச ஒப்பந்தச் சேவைக்கு அமர்த்தப்பட்டிருக்கின்றனர். அவர்கள் அரசு அனுமதியை மீறி ஆற்று மணலைக் கொள்ளையிட்டு பலமடங்கு விலைக்கு விற்று அம்மாவுக்குக் கப்பமும் கட்டுகின்றனர்.

இவை ஒருசில எடுத்துக்காட்டுகள்தாம். இன்னும் அதிர்ச்சியூட்டும் ஏராளமான அரசு ஒப்பந்தச் சேவை அமர்த்தங்கள் நடக்கின்றன. வாக்காளர் சேர்ப்பு, வாக்காளர் அடையாள அட்டைகள், பட்டியல் தயாரிப்பு, ஆதார் அடையாள அட்டை தாயாரிப்பு, கட்டணக் கழிப்பறைகள் நடத்துவது, டாஸ்மாக் பார்கள் நடத்துவது, நகரங்களில் குப்பை அள்ளுவது முதல் வங்கிகளில் தானியங்கி பணம் வழங்கு இயந்திரங்களுக்கு ரொக்கப் பணம் லோடுசெய்வது (அதிலும் ஒப்பந்தச் சேவைகள் அமர்த்தம் செய்யப்பட்ட நிறுவனங்கள், கள்ளநோட்டுக்களை வைக்கின்றன) வரை பலப்பல அரசுப் பணிகளுக்கும் ஒப்பந்தச் சேவை அமர்த்தங்கள் நடக்கின்றன. அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளில் நடத்துநர்கள் பயணச்சீட்டு வழங்கப் பயன்படுத்தும் கையடக்க இயந்திரங்கள்கூட நாள் வாடகை அடிப்படையில் ஒப்பந்த சேவை அமர்த்தம் செய்யப்பட்டுள்ளது. அது பழுதானால்கூட அதற்கும் ஒப்பந்த சேவை அமர்த்தம் செய்யப்பட்டுள்ளது. அம்மாதிரியான பயணச்சீட்டு வழங்கு இயந்திரங்கள் கால்நூற்றாண்டுக்கு முன்பே கோவை ஜி.டி.நாயுடு கண்டுபிடித்துப் பயன்படுத்தியிருக்கிறார். பயணச்சீட்டு வழங்கு இயந்திரங்களைச் சொந்தமாக வாங்குதைவிடப் பன்மடங்கு தொகையை ஆண்டாண்டு சேவை ஒப்பந்ததாரர்களுக்கு அரசு கொட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு பெரிய அளவுக்குப் பேசப்பட்ட காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி ஏற்பாட்டு ஊழல்கள் இந்த வகையிலானவைதாம். அப்போட்டியின்போது ஏ.சி.க்கள், நாற்காலிகள், மின்விசிறிகள் அவற்றின் முழுவிலையைவிடக் கூடுதலான நாள் வாடகைக்கு ஒப்பந்தச் சேவை அடிப்படையில் அமர்த்தப்பட்டன. இதனால் ஐயாயிரம் கோடி ரூபாய் வரை ஊழல்கள் நடந்தன.

இம்மாதிரியான ஒப்பந்தச் சேவைகளுக்கு அரசு அமர்த்தும் செலவுத் தொகையை வைத்து அவற்றுக்கான எல்லாச் சாதனங்களையும் சொந்தமாக வாங்கிக் கொள்ளவும் முடியும். பல இலட்சம் பேருக்கு அரசு வேலையளிக்கவும் முடியும். இதெல்லாம் அரசு அதிகாரத்தை மக்களே கைப்பற்றிகொள்ளும்போது மட்டுமே நடக்கும். மக்கள் நலனுக்கு எதிராகக் கொள்ளையடிப்பதையே குறிக்கோளாகக் கொண்டிருக்கும் பெரும் கார்ப்பரேட் தரகு முதலாளிகளிடம் அதிகாரம் இருக்கும்வரை நடக்காது. •

# உச்சநீதி மன்றம்:

# மனுவின் மறுஅவதாரம்!

## - சொத்துக்குவிப்பு வழக்கு உணர்த்தும் உண்மைகள்

**க**ர்நாடகா உயர்நீதி மன்றத்தில் நடந்து வரும் ஜெயா-சசி கும்பல் மீதான சொத்துக்குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் அரசு வழக்குரைஞராக பவானி சிங்கைத் தமிழக அரசு நியமித்ததை ரத்து செய்யக் கோரி தி.மு.க. பொதுச் செயலர் அன்பழகன் உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்திருந்த மேல்முறையீட்டை விசாரித்த மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு (டிவிஷன் பெஞ்ச்) அவ்வழக்கில் நீதி வழங்கப்பட்டதைப் போல ஒரு ஜோடனையைக் காட்டியிருக்கிறதேயொழிய, உண்மையில் அந்த அமர்வு பணம், அதிகாரம், பார்ப்பன சாதி செல்வாக்கு கொண்ட குற்றவாளியான ஜெயாவிற்குச் சாதகமான தீர்ப்பைத்தான் அளித்திருக்கிறது.

''பவானி சிங்கின் நியமனம் சட்டப்படி தவறானது. மேல்முறையீட்டு வழக்கில் அரசு வழக்குரைஞரை நியமிக்கும் அதிகாரம் தமிழக அரசின் இலஞ்ச ஒழிப்பு துறைக்குக் கிடையாது. அந்த அதிகாரம் கர்நாடகா அரசுக்குத்தான் உள்ளது. தமிழக அரசு மேல்முறையீட்டு வழக்கில் பவானி சிங்கை அரசு வழக்குரைஞராக வைத்துக் கொள்வதில் அதீத ஆர்வம் காட்டியிருக்கிறது'' எனக் குறிப்பிட்டு பவானி சிங்கின் நியமனத்தை ரத்து செய்துள்ள அந்த அமர்வு, தமது தீர்ப்பில் ஐந்து உத்தரவுகளைப் பிறப்பித்து, அதில் ஒன்றாக, ''சட்டத்திற்குப் புறம்பாக அவசர அவசரமாக வழக்கை விசாரித்த நீதிபதி, இது ஊழல் தொடர்பான வழக்கு என்பதைக் கவனிக்கத் தவறக் கூடாது'' எனக் கூறியிருக்கிறது.

அரசு வழக்குரைஞரும் சட்டப்படி நியமிக்கப்படவில்லை, வழக்கு விசாரணையும் சட்டப்படி நடக்கவில்லை எனக் கூறும் இந்தத் தீர்ப்பின் தர்க்கரீதியான முடிவு, ''இந்த வழக்கில் வேறொரு அரசு வழக்குரைஞரை, வேறொரு நீதிபதியை நியமித்து மறுவிசாரணை நடத்தப்பட வேண்டும்'' என்பதாகத்தான் இருந்திருக்க வேண்டும்; இருந்திருக்க முடியும். ஆனால், அந்த அமர்வு பொது அறிவுக்கு எதிரான, சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் மறுவிசாரணை நடத்தத் தேவையில்லை என்ற முடிவை அறிவிக்கிறது.

உச்சநீதி மன்றத்தில் அன்பழகன் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுவை இந்த அமர்வுக்கு முன் விசாரித்த இரண்டு நீதிபதிகளுள் ஒருவரான நீதிபதி மதன் லோகூர், பவானி சிங்கின் நியமனத்தை ரத்து செய்து, இவ்வழக்கை மறுவிசாரணை செய்ய வேண்டும் என்று தனது தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தார். ''நீதிபதி லோகூரின் முடிவை நாங்கள் ஏற்கவில்லை'' என்றும் டிவிஷன் பெஞ்ச் தனது தீர்ப்பில் அறிவித்திருக்கிறது.

சொத்துக் குவிப்பு வழக்கின் மேல்முறையீட்டிலும் பவானி சிங்தான் அரசு வழக்குரைஞராகத் தொடர வேண்டும் என ஜெயா கும்பல் விரும்பியதற்கு, அவர் குற்றவாளிகள் தரப்புக்கு விலை போனார் என்பது தவிர வேறு காரணம் கிடையாது. குற்றவாளிகள் தரப்பு தமது மேல்முறையீட்டு வழக்கில் தமக்கு எதிராக - அதாவது அரசு வழக்குரைஞராக யார் வாதாட வேண்டும் என்பதைச் சட்டவிரோதமாக நியமித்துக் கொண்டதோடு, இம் மேல்முறையீட்டு வழக்கில் கர்நாடகா அரசை எதிர்வாதியாகச் சேர்க்காமலும் தவிர்த்துள்ளனர்.

சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் மறுவிசாரணை தேவையில்லை என உத்தரவிட்டுள்ள உச்சநீதி மன்ற டிவிஷன் பெஞ்ச் நீதிபதிகள் ஆர்.கே.அகர்வால், பிரஃபுல்லா சி.பந்த் மற்றும் தீபக் மிஸ்ரா.





மேல்முறையீட்டு வழக்கில் அரசு வழக்குரைஞர் பவானி சிங் நியமனத்தை ரத்து செய்து, அவ்வழக்கை மறுவிசாரணை செய்ய வேண்டுமென உத்தரவிட்ட உச்சநீதி மன்ற நீதிபதி மதன் லோகூர்.

தற்பொழுது கர்நாடக அரசால் அரசு வழக்குரைஞராக நியமிக்கப்பட்டுள்ள ஆச்சார்யா, நீதிபதி குமாரசாமியிடம் தாக்கல் செய்துள்ள எழுத்துபூர்வமான வாதத்தில், ‘‘இந்த வழக்கை நடத்தியது கர்நாடகா அரசு. எனவே, வழக்கின் தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீட்டுக்குப் போவது என்றால் எதிர்மனுதாரராக கர்நாடகா அரசைச் சேர்த்து அவர்களது பதிலை வாங்கியிருக்க வேண்டும். ஆனால், கர்நாடக அரசுக்குத் தெரியாமல் மேல்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்து விசாரணையை முடித்திருக்கிறார்கள். எனவே, இந்த மேல்முறையீட்டு மனுவே செல்லாது’’ என்றும் சொல்லியிருக்கிறார்.

தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளான ஜெயா கும்பல் மேல்முறையீட்டு வழக்கைச் சட்டவிரோதமாகவும் சதித்தனமாகவும் நடத்தி வந்துள்ளது. இதற்கு கர்நாடகா உயர்நீதி மன்றமும் தலையாட்டியிருக்கிறது என்பதுதான் இதன் பொருள். ஆனால், உச்சநீதி மன்ற டிவிஷன் பெஞ்சோ, பவானி சிங்கைத் தமிழக அரசு நியமனம் செய்தது சட்டப்படி செல்லுமா, செல்லாதா என்பதைத் தாண்டி, ஜெயாவின் இந்த கிரிமனல்தனங்களுக்குள் தலையிட மறுத்துவிட்டது.

சிறப்பு நீதிமன்றத்திலும், மேல்முறையீட்டு வழக்கிலும் பவானி சிங் எப்படியெல்லாம் குற்றவாளிகள் தரப்புக்குச் சாதகமாக நடந்துகொண்டார் என்பது ஊரறிந்த உண்மை. ஆனால், கர்நாடக உயர்நீதி மன்ற நீதிபதிகளும், உச்சநீதி மன்ற நீதிபதிகளும் இந்த உண்மையைப் பார்க்க மறுத்து சட்டத்திற்குள் தங்கள் முகத்தைப் புதைத்துக் கொண்டார்கள். வழக்கு விசாரணைக்கு இடைக்கால தடைவிதிக்கக்கூட மறுத்துவிட்டு, பவானி சிங் அரசு வழக்குரைஞராகத் தொடரும் அநீதியை அனுமதித்து வந்தனர். பவானி சிங்கின் நடத்தை குறித்து நாங்கள் கருத்துக் கூற விரும்பவில்லை என வெளிப்படையாகவே அறிவித்தது, உச்சநீதி மன்றத்தின் டிவிஷன் பெஞ்ச்.

> **சிறப்பு நீதிமன்றத்திலும், மேல்முறையீட்டு வழக்கிலும் பவானி சிங் எப்படியெல்லாம் குற்றவாளிகள் தரப்புக்குச் சாதகமாக நடந்துகொண்டார் என்பது ஊரறிந்த உண்மை. ஆனால், கர்நாடக உயர்நீதி மன்ற நீதிபதிகளும், உச்சநீதி மன்ற நீதிபதிகளும் இந்த உண்மையைப் பார்க்க மறுத்து சட்டத்திற்குள் தங்கள் முகத்தைப் புதைத்துக் கொண்டார்கள்.**

ஆச்சார்யா தாக்கல் செய்துள்ள எழுத்துபூர்வமான வாதத்தின்படி பார்த்தால், கர்நாடகா உயர்நீதிமன்றத்தில் நடந்து வரும் மேல்முறையீட்டு விசாரணையை மட்டுமல்ல, ஜெயா-சசி கும்பலுக்கு உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்டிருக்கும் பிணையையும் ரத்து செய்ய வேண்டியிருக்கும். ஏனென்றால், உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி தத்து தலைமையிலான அமர்வு, கர்நாடகா அரசின் வாதங்களைக் கேட்டு ஜெயா கும்பலுக்குப் பிணை வழங்கவில்லை. உச்சநீதிமன்றத்தின் இந்த இரண்டு முடிவுகளுமே பொது அறிவுக்கோ, சட்டபூர்வ வாதங்களுக்கோ இடமின்றி, கட்டப் பஞ்சாயத்து முறையிலேயே எடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.



உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி தத்து தலைமையில் உள்ள நீதிபதிகள் நியமனக் குழுவால் சந்தேகத்திற்கிடமான முறையில் கர்நாடகா உயர்நீதி மன்றத்திலிருந்து ஒரிசா உயர்நீதி மன்றத்திற்கு மாற்றப்பட்ட கர்நாடகத் தலைமை நீதிபதி வகேலா.

மேல்முறையீட்டு வழக்கை மறுவிசாரணை செய்யத் தேவையில்லை என உத்தரவிட்டுள்ளதற்கு, ஜெயா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு நீண்ட காலமாக நிலுவையில் இருப்பதை ஒரு காரணமாக உச்சநீதி மன்ற நீதிபதிகள் காட்டியுள்ளனர். உச்சநீதிமன்றத்தின் இந்த அக்கறை முதலைக் கண்ணீரைவிட மோசடியானது. ஏனென்றால், ஜெயா-சசி கும்பல், சொத்துக் குவிப்பு வழக்கில் தாம் தண்டிக்கப்படுவோம் என்ற அச்சம் காரணமாகவே, அவ்வழக்கில் விரைந்து தீர்ப்பு வந்துவிடக் கூடாது என்ற நோக்கில் வழக்கை இழுத்தடித்தது. இப்பொழுது தண்டனையிலிருந்து விரைந்து தப்பித்து



சொத்துக் குவிப்பு வழக்கில் தமக்கு எதிராக அளிக்கப்பட்ட தீர்ப்பை ரத்து செய்யக் கோரி கர்நாடகா உயர்நீதி மன்றத்தில் ஜெயா-சசி கும்பல் தொடுத்துள்ள மேல்முறையீட்டு வழக்கை விசாரித்து வரும் நீதிபதி குமாரசாமி.

மீண்டும் முதலமைச்சர் நாற்காலியில் குந்த வேண்டும் என்பதற்காகவே மேல்முறையீட்டு வழக்கை விரைந்து முடிக்க எத்தனிக்கிறது. இந்த இரண்டு நிலைமையிலும் உச்சநீதி மன்றம் ஜெயாவின் அல்லக்கையாகவே நடந்து வருகிறது.

சொத்துக் குவிப்பு வழக்கை பெங்களூருக்கு மாற்றி உத்தரவிட்ட தீர்ப்பில், “இந்த வழக்கை தினந்தோறும் விசாரிக்க வேண்டும்; இரண்டு ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும்” என்றெல்லாம் நிபந்தனைகளை விதித்திருந்தது, உச்சநீதி மன்றம். ஜெயா கும்பல் இந்த நிபந்தனைகளை மீறி வழக்கை இழுத்தடித்த பல்வேறு சந்தர்ப்பங்களில், அவருக்கு ஆதரவாக பல தீர்ப்புகளை அளித்த உச்சநீதி மன்றம், இதன் மூலம் தான் விதித்த நிபந்தனைகளைத் தானே குப்பையில் வீசியது. சிறப்பு நீதிமன்றத்தில் ஜெயா தண்டிக்கப்பட்ட பிறகு, அவருக்குப் பிணையும் வழங்கி, அவரது மேல்முறையீட்டு மனுவை 90 நாட்களுக்குள் முடித்துக் கொடுக்கும் ஏஜெண்டாகச் செயல்பட்டது. இந்த 90 நாள் கெடுவைக் காட்டியே மேல்முறையீட்டு வழக்கில் ஜெயா கும்பல் செய்துள்ள அத்துணை முறைகேடுகளும் பூசி மெழுகப்பட்டன. சட்டவிரோதமான முறையில்தான் மேல்முறையீட்டு மனு மீதான விசாரணை நடைபெற்றுள்ளது என்பது நிரூபணமான பிறகும், வழக்கை மறுவிசாரணையின்றி முடித்துக் கொடுக்க கூச்சநாச்சமின்றி ஆளாய்ப் பறக்கிறது. “வழக்கைத் தாமதப்படுத்துவது நீதியை மறுப்பதாகும் என்பது போல வழக்கை அவசர அவசரமாக விசாரித்து முடிக்க உத்தரவிடுவது நீதியைப் புதைப்பதற்குச் சமமானது” என்கிறார், முன்னாள் சென்னை உயர் நீதி மன்ற நீதிபதி சந்துரு.

“இதுவொரு ஊழல்வழக்கு என்பதை நினைவில் கொண்டு நீதிபதி குமாரசாமி அச்சமின்றியும் ஊசலாட்டமின்றியும் தீர்ப்பு எழுத வேண்டும்” எனத் தமது தீர்ப்பில் அறிவுரை வழங்கியிருக்கும் நீதிபதிகள், ஊழல் குறித்து ஒரு நீண்ட பிரசங்கமே நடத்தியுள்ளனர். ஊருக்கு உபதேசம் செய்துள்ள உச்சநீதி மன்றம் இச்சொத்துக்குவிப்பு வழக்கில் எப்பொழுதுமே அப்படி கறாராக, நேர்மையாக நடந்துகொண்டதில்லை. குற்றவாளி ஜெயா பாப்பாத்தி என்பதாலேயே, தீர்ப்பு என்ற பெயரில் அவரது கிரிமினல் குற்றங்களுக்குப் பரிகாரம் செய்யும் புரோகிதராகத்தான் உச்சநீதி மன்றம் நடந்து வருகிறது.



சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டிக்கப்பட்ட ஜெயா-சசி கும்பலுக்கு விசுவாசமாக நடந்துகொண்ட வழக்குரைஞர் பவானி சிங்.

குறிப்பாக, சிறப்பு நீதிமன்றத்தில் பவானி சிங் அரசு வழக்குரைஞராக நியமிக்கப்பட்டதை கர்நாடகா உயர்நீதி மன்ற நீதிபதி வகேலா ரத்து செய்ததை எதிர்த்து ஜெயா கும்பல் உச்சநீதி மன்றத்தில் தொடுத்த வழக்கில், அவர் விரும்பியபடியே பவானி சிங்கின் நியமனத்தை உறுதிப்படுத்தியது, நீதிபதி சௌஹான் அமர்வு. சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு, சிறைக்கு அனுப்பப்பட்ட ஜெயாவிற்கு 21 நாட்களில் பிணை வழங்கி அவருக்குப் பரிகாரம் அளித்தார் தலைமை நீதிபதி தத்து. மேல்முறையீட்டு வழக்கில் சட்டவிரோதமாக பவானி சிங் நியமிக்கப்பட்டதை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பரிகாரமாக மேல்முறையீட்டு வழக்கில் மறுவிசாரணை தேவையில்லை என்ற சலுகை ஜெயா கும்பலுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

**உச்சநீதி மன்றம்தான் மக்களின் விடிவெள்ளியாகக் காட்டப்படுகிறது. அப்படியான நம்பகத்தன்மைக்கே வேட்டு வைத்துக்கொள்ளும் வகையில், சொத்துக்குவிப்பு வழக்கில் சுயமுரண்பாடான, மழுப்பலான, சட்டம்–நீதிமன்ற நெறிமுறைகளுக்கு எதிரான தீர்ப்புகளை அளித்து வருகிறது, உச்சநீதி மன்றம்.**

‘‘மேல்முறையீட்டு வழக்கில் அரசு வழக்குரைஞர் இல்லாமல் நீதிபதி குமாரசாமியைத் தீர்ப்பெழுத அனுமதிப்பது சட்டப்படியான நடைமுறை கிடையாது’’ என வாதிடுபவர்களின் வாயை அடைக்கும் விதத்தில், ‘‘அதுதான் அன்பழகனையும், கர்நாடகா அரசையும் எழுத்துப்பூர்வமாக வாதத்தை முன்வைக்க அனுமதித்திருக்கிறோமே’’ என்ற பரிகாரத்தைக் காட்டுகிறது, உச்சநீதி மன்றம்.

ஜெயா, 1991-96 -இல் தமிழக முதல்வராக இருந்த பொழுது, தனது வருமானத்தை மீறி முறைகேடான வழிகளின் மூலம் 66 கோடி ரூபாய் அளவிற்குச் சொத்துக்களை வாங்கிக் குவித்தார் என்பதுதான் இந்த வழக்கு. ஜெயா-சசி கும்பல் தண்டிக்கப்படுவதற்கு முன்பும், தண்டிக்கப்பட்ட பிறகும் இந்த வழக்கிலிருந்து விடுபடுவதற்கு நேர்மையான வழிகளைப் பின்பற்றியதேயில்லை. பல்வேறு குறுக்கு வழிகள், முறைகேடுகள், சட்டவிரோதமான நடவடிக்கைகள், குதர்க்கமான வழக்குகள் ஆகியவற்றின் வழியாக இந்த வழக்கையே குழிதோண்டிப் புதைக்க முயன்றார், முயன்று வருகிறார். இதற்காக அவர் செலவழித்த, செலவழித்து வரும் தொகையைக் கணக்கிட்டால், அது இந்த 66 கோடி ரூபாயைவிட நிச்சயம் பல மடங்கு தேறும். இப்படி வழக்கை இழுத்தடிக்கவும், குழிதோண்டிப் புதைக்கவும் கோடிகோடியாகச் செலவழிக்க அவருக்குப் பணம் எங்கிருந்து வருகிறது என்ற கேள்வியை முன்நிறுத்தினாலே, ஜெயா கும்பல் அடித்திருக்கும் கொள்ளையின் பரிமாணத்தைப் புரிந்துகொண்டுவிடலாம்; அவரைக் குற்றவாளியென்றே தீர்மானித்துவிடலாம்.

இந்தச் சட்டவிரோத, குறுக்குவழிகளுக்கு அப்பால் இந்த வழக்கிலிருந்து விடுபட அவர் தெய்வத்தையும், ஜோசியத்தையும் நம்புகிறார். இங்கேயும் இலஞ்சத்தைக் (பணத்தை) கொட்டிதான் தெய்வத்தைத் தன் பக்கம் இழுக்க முயலுகிறது, ஜெயா கும்பல். அவரது ‘வேண்டுதலுக்கு’ தெய்வம் வருகிறதோ இல்லையோ, அவரைக் காக்க தெய்வ ரூபத்தில் உச்சநீதி மன்ற நீதிபதிகள் குதித்திருக்கிறார்கள். ஓட்டுக்கட்சிகளும், அரசின் பிற உறுப்புகளும் சீரழிந்து மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்ட நிலையில், உச்ச நீதிமன்றம்தான் மக்களின் விடிவெள்ளியாகக் காட்டப்படுகிறது. அப்படியான நம்பகத்தன்மைக்கே வேட்டு வைக்கும் வகையில், ஜெயாவைக் காப்பாற்றும் நோக்கில் சொத்துக் குவிப்பு வழக்கில் சுயமுரண்பாடான, மழுப்பலான, சட்டம் - நீதிமன்ற நெறிமுறைகளுக்கு எதிரான தீர்ப்புகளை அளித்து வருகிறது, உச்சநீதி மன்றம்.



சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் அரசு வழக்குரைஞராக நியமிக்கப்பட்டுள்ள ஜெயாவின் சிம்ம சொப்பனமான மூத்த வழக்குரைஞர் ஆச்சார்யா.

இதற்கும் மேலாக, ‘‘இலஞ்சம், ஊழல், முறைகேடுகள் மூலமாக சொத்துக்குவித்த வழக்குகளில், குற்றவாளிகளுக்குச் சாதகமாக அவரது சொத்து மதிப்பில் 20 சதவீதம் வரை நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்து கொள்ளலாம் என்று உச்சநீதி மன்றம் கூறியிருக்கிறது. இந்தச் சலுகையைப் பயன்படுத்திக் கொண்டு ஆயிரக்கணக்கான அதிகாரிகள் ஊழல் வழக்கில் தண்டிக்கப்படாமல் ஏற்கெனவே தப்பித்துள்ளனர்’’ எனச் சுட்டிக்காட்டுகிறார், முன்னாள் சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி சந்துரு. இந்த முன்மாதிரியைப் பயன்படுத்தி, ஜெயாவையும் உச்சநீதி மன்றம் வழக்கிலிருந்தும் தண்டனையிலிருந்தும் விடுதலை செய்யக்கூடும்.




பிராமணன் கொடிய குற்றம் செய்தவன் ஆயினும் அவனைக் கொலை செய்யாமலும், துன்பப்படுத்தாமலும் அவனுக்குப் பொருளைக் கொடுத்து அயலூருக்கு அனுப்ப வேண்டும்’’ என்கிறது மனுநீதி. சொத்துக்குவிப்பு வழக்கில் இந்தப் பார்ப்பன நீதிப்படிதான் உச்சநீதி மன்றம் நடந்து வருகிறது என்பதை இவ்வழக்கில் அடுத்தடுத்து அது தரும் தீர்ப்புகளே எடுத்துக்காட்டுகின்றன.

● செல்வம்

# ‘தத்து இருக்க பயமேன்!’

சிறப்பு நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்ட ஜெயா-சசி கும்பலுக்கு 21-ஆவது நாளிலேயே நிபந்தனையற்ற பிணை அளித்து, சிறையிலிருந்து போயசு தோட்டத்துக்கு அனுப்பி வைத்தது, உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி தத்து அமர்வு. இந்த வழக்கின் எதிர்த்தரப்பான கர்நாடகா அரசின் வாதங்களைக் கேட்காமலும்; ஜெயாவிற்குப் பிணை வழங்க மறுத்த கர்நாடகா உயர்நீதி மன்ற நீதிபதி சந்திரசேகராவின் வாதுரைகளுக்குப் பதிலேதும் சொல்லாமலும் நீதிபதி தத்து தன்னிச்சையாக, கட்டப் பஞ்சாயத்து முறையில் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளுக்குப் பிணை வழங்கினார்.

ஜெயா-சசி கும்பல் பிணை கோரி மட்டும்தான் உச்சநீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்தது. ஆனால், நீதிபதி தத்துவோ அவர்களின் மேல்முறையீட்டு மனுவை விரைந்து முடிக்குமாறு கர்நாடக உயர்நீதி மன்றத்திற்கு உத்தரவிட்டு, பார்ப்பன ஜெயாவிற்குத் தனிச் சலுகை காட்டினார்.

இந்தப் பிணை, சட்டத்திற்கும் நீதிமன்ற நெறிமுறைகளுக்கும் எதிரானது என ராஜீவ் தவான் உள்ளிட்ட பல மூத்த வழக்குரைஞர்கள் வெளிப்படையாகவே விமர்சித்துள்ளனர். மேலும், சென்னையைச் சேர்ந்த டிராபிக் ராமசாமி, ஜெயாவிற்குப் பிணை வழங்குவதற்கு ஏறத்தாழ நூறு கோடி ரூபாய் இலஞ்சப் பணம் கைமாறியிருக்கிறது என்ற குற்றச்சாட்டை நீதிபதி தத்துவிடமே முன்வைத்தார்.

இப்படிபட்ட விமர்சனங்கள், சந்தேகங்கள் நீதிபதிகள் மீது எழுப்பப்படும்பொழுது அவ்வழக்கை விசாரிப்பதிலிருந்து தாமே விலகிக் கொள்வது மரபாகப் பின்பற்றப்படுகிறது. ஆனால், தலைமை நீதிபதி தத்துவோ ஜெயா-சசிக்குப் பிணை வழங்கிய பிறகும், அவர்களது பிணை மனுவை முடித்து வைக்காமல், அதனை நீட்டித்து அடுத்தடுத்து உத்தரவுகளைப் பிறப்பித்து வருகிறார்.

ஆசிரியர் நியமன ஊழல் வழக்கில் தண்டிக்கப்பட்ட அரியானா மாநில முன்னாள் முதல்வர் ஓம் பிரகாஷ் சௌதாலாவிற்கு வழங்கப்பட்ட பிணை, அவர் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார் என்பது உறுதியானவுடனேயே டெல்லி உயர்நீதி மன்றத்தால் ரத்து செய்யப்பட்டது. சொத்துக்குவிப்பு வழக்கில் பிணையில் வந்திருக்கும் ஜெயாவோ போயசு தோட்டத்திலிருந்தபடியே தமிழக அரசை ஆண்டு வருகிறார். இந்த பினாமி ஆட்சி குறித்து அசைக்க முடியாத ஆதாரங்கள் இருந்தும், அவரது பிணையை ரத்து செய்ய மறுத்து வருகிறார், தத்து.

பவானி சிங்கை நீக்கக் கோரும் அன்பழகன் மனுவை விசாரித்து வந்த நீதிபதிகள் மதன் லோகூர்-பானுமதி அமர்வு 15.4.2015 அன்று தீர்ப்பை வெளியிட இருந்த நேரத்தில், அதற்கு மூன்று நாட்கள் முன்னதாக 12.4.2015 ஞாயிறு அன்று கர்நாடக உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி வகேலாவை ஒரிசா உயர்நீதி மன்றத்திற்கு மாற்றி உத்தரவிட்டது, நீதிபதி தத்து தலைமையில் அமைந்துள்ள நீதிபதிகள் குழு. தேசிய நீதித்துறை நியமன கமிசனுக்கான அறிவிக்கை 13.04.2015 அன்று வெளியிடப்படவிருந்த நிலையில், தேசிய நீதிபதிகள் நியமன ஆணையத்தை எதிர்த்த வழக்கை 15.4.2015 அன்று உச்சநீதி மன்றம் விசாரிக்கவிருந்த நிலையில் வகேலா அதிரடியாக மாற்றப்பட்டுள்ளார்.

ஜெயாவின் ஏஜெண்டாகச் செயல்பட்டு வரும் உச்சநீதி மன்றத் தலைமை நீதிபதி தத்து.



சிறப்பு நீதிமன்றத்தில் பவானி சிங் அரசு வழக்குரைஞராக நியமிக்கப்பட்டதை ரத்து செய்து தீர்ப்பளித்தவர் நீதிபதி வகேலா. மேலும், மேல்முறையீட்டு வழக்கில் பவானி சிங் அரசு வழக்குரைஞராகத் தமிழக அரசால் நியமிக்கப்பட்டது சட்டப்படி தவறானது என்றும் கருத்து தெரிவித்திருந்தார். இவை அனைத்தும் அவரது மாறுதல் உள்நோக்கத்துடன், அதாவது ஜெயாவின் மேல்முறையீட்டு வழக்கில் அவர் இடையூறாக இருக்கக் கூடாது என்ற திட்டத்துடன் செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை உறுதிப்படுத்துகின்றன.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வது தொடர்பான வழக்கு உள்ளிட்ட 30 வழக்குகள் அரசியல் சாசன அமர்வு விசாரணைக்காக உச்சநீதி மன்றத்தில் ஆண்டுக்கணக்கில் கிடப்பில் உள்ளன. ஆனால், நீதிபதிகள் லோகூர்-பானுமதி அமர்வு பவானி சிங் நியமனம் தொடர்பான வழக்கில் மாறுபட்ட தீர்ப்பை வெளியிட்ட அடுத்த 24 மணி நேரத்திற்குள்ளாகவே (16.04.2015) இவ்வழக்கை 21.04.2015 அன்று டிவிஷன் பெஞ்ச் விசாரிக்கும் என்ற அறிவிப்பை வெளியிடுகிறது, உச்ச நீதிமன்றம். அதற்கடுத்த இரண்டாவது நாளில் (18.04.2015) அந்த அமர்விற்கான நீதிபதிகளின் பெயர்கள் அறிவிக்கப்படுகின்றன. ‘‘முக்கியமான ஒருவரே உச்சநீதி மன்ற பதிவாளர் அலுவலகத்துக்குச் சென்று நேரடியாக ஏற்பாடுகளைச் செய்தார்’’ என தி.மு.க. தலைவர் கருணாநிதி சூசகமாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த முக்கியமான நபர் தலைமை நீதிபதி தத்துவைத் தவிர வேறு யாராக இருக்க முடியும்?

தலைமை நீதிபதி தத்து, தான் ஓய்வு பெற்றுப் போவதற்குள் சொத்துக்குவிப்பு வழக்கை ஜெயாவிற்குச் சாதகமாக முடித்துக் கொடுக்கும் உள்நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறார் என்பதற்கு இவையெல்லாம் அசைக்க முடியாத ஆதாரங்களாக உள்ளன. அந்த நம்பிக்கையில்தான் ஜெயா-சசி கும்பல் போயசு தோட்டத்து பங்களாவில் பதுங்கிக் கிடக்கிறது.

• குப்பன்

# “தோழர் லெனின் காட்டிய வழியில் மக்கள் அதிகாரத்தை நிறுவுவோம்!”

## - புரட்சிகர அமைப்புகளின் அறைகூவல்.










நமது நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகக் கட்டுமானங்கள் அனைத்தும் தீராத, நிரந்தரமான நெருக்கடியில் சிக்கி ஒட்டுமொத்த கட்டமைவும் நாட்டுக்கும் மக்களுக்கும் வேண்டாத சுமையாகிப் போய்விட்ட நிலையில், “தோழர் லெனின் காட்டிய வழியில் தொழிலாளி வர்க்கம் ஓரணியில் திரண்டு இன்றை மக்கள்விரோத அரசியலமைப்பை வீழ்த்தி உழைக்கும் மக்களின் அதிகாரத்தை நிறுவுவோம்!” எனச் சூளுரைத்து, பாட்டாளி வர்க்க ஆசான் தோழர் லெனின் பிறந்த நாளான ஏப்ரல் 22-ஆம் தேதியன்று, தமிழகமெங்கும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, மக்கள் கலை இலக்கியக் கழகம் ஆகிய அமைப்புகள் தாங்கள் செயல்பட்டுவரும் பகுதிகளில் இனிப்புகள் வழங்கி கொடியேற்றி, புதிய உத்வேகத்துடன் விழாக்களை நடத்தின.

தோழர் லெனின் பிறந்தநாளில், வேலூரில் மாநகர் - மாவட்ட சாலையோர வணிகர்கள் மற்றும் சிற்றுண்டி வணிகர்கள் நலச்சங்கம் தொடங்கப்பட்டு, சங்கக் கொடியேற்று விழா நடந்தது. அன்று மாலை தோட்டப்பாளையத்தில் இன்றைய அரசியல் சூழலில் லெனின் ஏன் நமக்கு அவசியமாகிறார் என்பதை உணர்த்தி ம.க.இ.க. தெருமுனைக் கூட்டத்தை நடத்தியது. சென்னை - சேத்துப்பட்டு பகுதியில் ம.க.இ.க. சென்னைக் கிளை தோழர்கள், உழைக்கும் மக்களை அணிதிரட்டி பறையோசை முழக்கத்துடன் தோழர் லெனினது 146-வது பிறந்தநாளைக் கொண்டாடி தெருமுனைக் கூட்டத்தை நடத்தினர்.

கோவையில் பு.ஜ.தொ.மு. சங்கக் கிளைகளில் கொடியேற்றி, இனிப்புகள் வழங்கி, லெனின் உருவம் தாங்கிய மிகப் பெரிய பதாகையுடன் வாயிற் கூட்டங்களுடன் லெனினது பிறந்தநாள் விழாவைக் கொண்டாடிய தொழிலாளர்கள், இறுதியாக சி.ஆர்.ஐ. நிறுவனத்தின் கதவடைப்புக்கு எதிராகத் தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் தொழிலாளர்களுடன் இணைந்து ஆலை வாயிலில் லெனின் பிறந்தநாளை அரசியல் ஆர்ப்பாட்டமாக நடத்தினர்.

திருவள்ளூர் மாவட்ட பு.ஜ.தொ.மு. சார்பில் கிளைச் சங்கங்களில் கொடியேற்றுவிழாவுடன் இனிப்புகள் வழங்கி ஆலை வாயிற் கூட்டங்கள் நடத்தப்பட்டு, அதைத் தொடர்ந்து கைப்பந்தாட்டப் போட்டியும் நடத்தப்பட்டது. பின்னர், பட்டாபிராமில் தொழிலாளர்கள் தமது குடும்பத்துடன் பங்கேற்ற விழா, தோழர் லெனினது வழியில் பாட்டாளி வர்க்கம் புரட்சிப் பாதையில் தொடர்ந்து முன்னேற சூளுரைப்பதாக அமைந்தது.

புதுச்சேரியில் லெனின் உருவம் பொறித்த முகமூடி யணிந்த தோழர்கள் செங்கொடிகளுடன் அணிவகுத்து நிற்க, தொழிலாளர்களின் ஆரவாரமான வரவேற்புடன் பு.ஜ.தொ.மு. தோழர்கள் சங்கக் கிளைகளில் கொடியேற்றி, ஆலை வாயிற் கூட்டங்களை நடத்தினர்.

உலகில் முதன்முதலாக தொழிலாளர்களின் சோசலிச ஆட்சியை நிறுவிய தோழர் லெனினை ஏன் பாட்டாளி வர்க்கம் கொண்டாட வேண்டும் என்பதை உணர்த்தி, தோழர் லெனினது வழியில், நம் நாட்டிலும் சோவியத் பாணியிலான மக்கள் அதிகார மன்றங்களைக் கட்டியமைக்க அறைகூவிய இந்த விழாக்கள், உழைக்கும் மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைப்பதாக அமைந்தன.

- பு.ஜ. செய்தியாளர்கள்

## செம்மரக் கடத்தல்:

# ஆந்திர அரசின் இரட்டை வேடம்!

**செம்மரம் கடத்தும் உரிமை அரசுக்கு மட்டுமே உரியது எனக் காட்டுவதற்குத்தான் இருபது தமிழர்களைப் படுகொலை செய்திருக்கிறது, சந்திரபாபு நாயுடு அரசு.**

திருப்பதி சேஷாச்சலம் வனப்பகுதியில் மலைவாழ் மக்கள் இருபது பேரை மிகவும் கொடூரமான முறையில் படுகொலை செய்திருக்கிறது ஆந்திர போலீசு. அவர்களைப் பேருந்தில் வைத்துக் கைது செய்து, தோலைத் தீயால் சுட்டுக் கருக்கி, உறுப்புகளைச் சிதைத்து, மிகவும் வக்கிரமான முறைகளிலெல்லாம் சித்திரவதை செய்து, பின்னர்தான் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் என்பதும் மறைக்கவியலாத வண்ணம் நிரூபணமாகியிருக்கின்றது.

கொல்லப்பட்டவர்களது உறுப்புகள் சிதைக்கப்பட்டிருப்பதாகட்டும், அவர்களது உடலில் உள்ள குண்டுக்காயங்களாகட்டும், உடல்களுக்கு அருகில் மிகவும் அலட்சியமாக வீசப்பட்டிருக்கும் (ஏற்கெனவே கைப்பற்றப்பட்ட) செம்மரக் கட்டைகளாகட்டும், இந்த போலி மோதல் கொலை குறித்து ஆந்திர போலீசு அளித்த கட்டுக்கதையாகட்டும்; அனைத்திலும் வெளிப்பட்ட செய்தி ஒன்றுதான் - ''அப்படித்தான் செய்வோம், எங்களை யார் என்ன புடுங்க முடியும்'' என்று எல்லா சட்டபூர்வ நிறுவனங்களுக்கும், சமூகத்துக்கும் போலீசு விடுத்திருக்கும் சவால்தான் அந்தச் செய்தி.

ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகளை விஞ்சும் ஆந்திரப் போலீசின் இந்த நடவடிக்கைக்கு எதிரான கண்டனங்கள், நீதி விசாரணை மற்றும் சி.பி.ஐ. விசாரணைக்கான கோரிக்கைகள் நீதிமன்றப் பரிசீலனையில் இருக்கின்ற அதே வேளையில், இப்படி ஒரு படுகொலையை நடத்தி பாடம் கற்பித்தாலன்றி, செம்மரக் கடத்தலைத் தடுக்க வியலாது என்று கூறி இந்த வெறியாட்டத்தை நியாயப்படுத்துகிறது ஆந்திர அரசு.

இன்னொருபுறம், எந்தக் குற்றத்தைத் தடுப்பதற்காக என்று கூறிக்கொண்டு இந்தப் படுகொலையை ஆந்திர அரசு நியாயப்படுத்தி வருகிறதோ, அந்தக் குற்றத்தை, அதாவது செம்மரக் கடத்தலை, சட்டபூர்வமாகவே அனுமதிக்க வேண்டும் என்றும், செம்மரக் கடத்தலுக்கு எதிரான தடையை நீக்கிவிட வேண்டும் என்றும், செம்மரம் வெட்டுதல், விற்பனை, ஏற்றுமதி ஆகியவற்றை சட்டபூர்வமாக அனுமதிப்பதன் மூலம் மட்டும்தான் இந்தக் கடத்தலை தடுக்க முடியும் என்றும் ஆந்திர வனத்துறை அமைச்சர் போஜ்ஜல கோபாலகிருஷ்ண ரெட்டி கூறியிருக்கிறார். (டைம்ஸ் ஆப் இந்தியா, 11.4.2015)

''செம்மர விற்பனையையும், ஏற்றுமதியையும் அனுமதிக்க வேண்டும்'' என்று கூறுவதுடன் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. ''அருகி வரும் தாவர இனம் என்ற பட்டியலிலிருந்தே செம்மரத்தை நீக்கி விட வேண்டும்'' என்றும் கோரியிருக்கிறார். சேஷாசலம் படுகொலை நடந்த மூன்றே நாட்களில் வருகிறது ஆந்திர அமைச்சரின் இந்த அறிக்கை.

ஆந்திர போலீசால் சித்திரவதை செய்யப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்ட தமிழக பழங்குடியினத் தொழிலாளர்கள்.



இதுதான் செம்மரக் கடத்தல் குறித்த ஆந்திர அரசின் நிலை என்றால், 20 உயிர்களை ஏன் கொடூரமாகப் பறிக்க வேண்டும்? இந்தப் படுகொலையும் அமைச்சரின் அறிக்கையும் முரண்பட்டவை போலத் தோன்றுகின் றன. ஆனால், இந்த இரண்டுக்குமிடையே முரண்பாடு இல்லை என்பதே உண்மை.

•••

**செம்**மரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை இந்திய அரசுக்கோ, ஆந்திர அரசுக்கோ கடு களவும் இல்லை. எப்போதும் இருந்ததுமில்லை. அருகி வரும் தாவர இனங்கள் மற்றும் விலங்கினங்களின் சர் வதேச வர்த்தகம் தொடர்பான ஒப்பந்தந்தத்தில் (The Convention on International Trade in Endangered Species of wild fauna and flora (CITES – சைட்ஸ்) இந்தியா உள்ளிட்ட 179 நாடுகள் கையொப்பமிட்டிருக்கின்றன. மேற்கூறிய ஒப்பந்தத்தால் தடை செய்யப்பட்டுள்ள தாவர வகைகளில் செம்மரமும் ஒன்று.


சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் ஆந்திர போலீசாரால் உயிரோடு கடத்திச் செல்லப்பட்டதை நேரில் கண்ட சாட்சிகள் (இடமிருந்து) இளங்கோ மற்றும் சேகர்.

எனவே தவிர்க்கவியலாமல் 1998 முதல் இந்தியா செம்மரக் கட்டைகளின் ஏற்றுமதியைத் தடை செய்திருக்கிறது. இதன்படி அரசுக்கு சொந்தமான காடுகள், தனியாருக்கு சொந்தமான நிலங்கள் ஆகிய எங்கிருந்தும் செம்மரங்களை வெட்டி ஏற்றுமதி செய்வது குற்றமாகும்.

இந்திய கைவினைப் பொருட்களின் ஏற்றுமதியை ஊக்கு விக்கும் பொருட்டு செம்மரத்தினால் செய்யப்பட்ட கைவினைப் பொருட்களின் உள்நாட்டு விற்பனை மற்றும் ஏற்றுமதியை மட்டும் மைய அரசு அனுமதித்திருக்கின்றது.

இது சட்டப்படி உள்ள நிலை. ஆனால் நடைமுறையோ வேறு. செம்மரக் கடத்தல் ஒருபுறம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. மறுபுறம், கைவினைப் பொருட்கள் என்று இந்திய அரசால் முறை கேடாக சான்றிதழ் அளிக்கப்பட்டு, செம்மரக் கட்டைகள் ஏற்று மதி செய்யப்படுவதாக ‘சைட்ஸ்‘ சந்தேகித்தது. மேலும், அவ் வாறு கைவினைப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாக இருந் தாலும் கூட, மேற்படி தாவர இனம் அருகி வரும் இனம் என்ப தால், அது முற்றிலுமாக அழிந்து படாமல் புதிதாக வளர்ப்பதற்கு என்ன முயற்சி மேற்கொள்ளப்பட்டது (Non - Detriment Finding (NDF) என்பது குறித்து சோதிப்பதற்கும் இந்திய அரசு தவறிவிட்ட காரணத்தினால், ஜூன் 2010 முதல் இந்தியாவிலிருந்து செம்மரப் பொருள் ஏற்றுமதியை முற்றிலுமாகத் தடை செய்தது ‘சைட்ஸ்.’

தடை விதிக்கப்பட்ட கணம் முதல் இந்த தடையை அகற்று வதற்குத் தீவிரமாக முயன்ற மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றி வைக்கப்பட் டிருக்கும் 11,806 டன் செம்மரக் கட்டைகளை ஏற்றுமதி செய்ய ‘சைட்ஸ்’ சிடம் அனுமதி பெற்றுத் தந்தது. இதன் அடிப்படை யில் பறிமுதல் செய்து வைத்திருக்கும் 8584 டன் செம்மரக் கட்டை களை ஏற்றுமதி செய்வதற்கு ஆந்திர அரசு அனுமதிக்கப்பட்டது.

சென்ற ஆண்டில் மட்டும் சர்வதேச ஏலத்தில் செம்மரங்களை விற்று ஆந்திர அரசு ஈட்டிய தொகை சுமார் ரூ.1000 கோடி. இந்த ஆண்டு 3500 டன் செம்மரக்கட்டைகளை ஆந்திர அரசு சர்வதேச ஏலத்தில் விற்பனை செய்ய இருக்கிறது. இவையன்றி ஆந்திர அரசிடமிருந்து பாபா ராம்தேவ் சுமார் ரூ.207 கோடி மதிப்புள்ள செம்மரக் கட்டைகளை ஏலமெடுத்திருக்கிறார். இதுவரை பணம் கொடுக்கவில்லை. அவற்றை சர்வதேசச் சந்தையில் அதிக விலைக்கு விற்று லாபம் பார்ப்பதுதான் ராம்தேவின் நோக்கம் என்ற சந்தேகத்தையும் ஆந்திர அதிகாரிகள் வெளியிட்டிருக்கின்றனர்.

சீனா மட்டும் ஆண்டுக்கு 3000 டன் செம் மரத்தை கொள்முதல் செய்கிறது. ஜப்பான், கொரியா போன்ற மற்ற நாடுகளின் கணக்கு தனி. அதி உயர்தர செம்மரத்தின் விலை டன்னுக்கு ரூ.1.5 கோடி, உயர்தரம் ரூ.55 லட்சம், சாதாரணத் தரம் ரூ.35 லட்சம் என்று கூறப்படுகிறது.

வனத்துறை ஆவணங்களின் படி 2002 முதல் செம்மரக் கடத்தலுக்காக 12,300 வழக்கு கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 18,703 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். 12,863 டன் கட்டைகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. ஒரு கட்டை கைப்பற்றப்பட்டதாகக் கணக்கு காட்டப்பட்டால், கணக்கில் வராமல் ஒதுக்கப் படுபவை குறைந்தது பத்து கட்டைகளாக இருக்கும் என்பது இத்துறை சார்ந்த அதிகாரி கள் கூறும் தகவல்.

கடத்தப்படும் கட்டைகளை மடக்கிப் பிடிப் பவர்கள் ஆந்திர அரசின் வனத்துறை மற்றும் போலீசு மட்டுமல்ல. தமிழக-கர்நாடக போலீசு, மத்திய வருவாய் உளவுத்துறை, சுங்கத்துறை, துறைமுகம் உள்ளிட்ட எல்லா மிருகங் களுக்கும் இந்த வேட்டையில் பங்கு உண்டு. இவர்களெல்லாம் தாங்கள் கைப்பற்றும் கட்டைகளை, ஆந்திர அரசிடம் ஒப்படைக் காமல், தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்துக் கொள்கின்றனர்.

•••

செம்மரக் கடத்தல் மூலம் மஃபியாக்கள், அரசியல்வாதிகள், அதிகார வர்க்கத்தினர் கோடிக்கணக்கில் வருவாய் ஈட்டுகிறார்கள் என்பது தெரிந்த செய்தி. ஆந்திர அரசும் தனது நிதி வருவாய்க்கு செம்மர விற்பனையை நம்பியிருக்கிறது என்பது நாம் கவனிக்கத் தவறும் செய்தி.

ஆந்திர விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி அறிவித்திருக்கும் சந்திரபாபு நாயுடு, ‘‘கடத்தல்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டிருக்கும் செம்மரத்தை சர்வதேசச் சந்தையில் ஏலம் விட்டு, கிடைக்கும் பணத்தில்தான் விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி தர இயலும்’’ என்று வெளிப்படையாகவே பேசியிருக்கிறார்.

அதாவது, ஆந்திர அரசுக்கு வருவாய் வேண்டுமென்றால் செம்மரம் விற்க வேண்டும். தற்போதுள்ள தடையின் காரணமாக அரசு வெளிப்படையாக செம்மரம் வெட்டி விற்க முடியாது. கடத்தல்காரர்கள் சட்டவிரோதமாக செம்மரம் வெட்டினால், அதனைக் கைப்பற்றி விற்றுத்தான் பணமாக்க முடியும். அப்படித்தான் சென்ற ஆண்டு சுமார் ரூ.1000 கோடி ஈட்டப்பட்டிருக்கிறது. கடத்தல் நடந்தால்தானே அரசு கைப்பற்ற முடியும், விற்றுக் காசாக்க முடியும்? எனவே செம்மரக் கடத்தலில் ஆந்திர அரசு மறைமுகக் கூட்டாளியல்ல, நேரடிக் கூட்டாளி என்பதே உண்மை.

ஆந்திர அரசு எந்த அளவுக்கு செம்மரம் விற்ற காசைச் சார்ந்து இருக்கிறதோ, அந்த அளவுக்கு கடத்தலைத் தடுக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பது போலவும் நடிக்கிறது. இது கஞ்சா வியாபாரியிடம் மாமூலும் வாங்கிக் கொண்டு, கேசு போட்டு உள்ளேயும் தள்ளும் போலீசின் நடத்தையைப் போன்றது.

இது, இவ்விசயத்தின் ஒரு பரிமாணம் மட்டுமே. இதன் இன்னொரு பரிமாணம்தான் மையமானது. இந்திய ஆளும் வர்க்கங்கள் அமல்படுத்திவரும் மறுகாலனியாக்க கொள்கை, இயற்கை வளங்களையும் கனிம வளங்களையும் பொதுச்சொத்துகளையும் தனியார்மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. இதே கொள்கை காரணமாக, முதலாளி வர்க்கத்துக்கு அடுக்கடுக்காக வரிச் சலுகைகள் வழங்கப்படுவதால், மத்திய-மாநில அரசுகளின் வருவாய் குறைந்து கொண்டே வருகிறது.

சந்திரபாபு நாயுடு சொல்வது போல, விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி தருவதற்கு மட்டுமல்ல; அரசு ஊழியர்களுக்கு மாதாந்திர சம்பளம் தருவதற்கே இயலாத திவால் நிலையை பல மாநில அரசுகளும் எய்தி விட்டன. இந்த திவால் நிலையைக் காட்டித்தான் நிலக்கரி, இரும்புக் கனிம வயல்கள் முதல் பொதுத்துறை நிறுவனங்கள் வரையிலான அனைத்தையும் அடிமாட்டு விலைக்கு பன்னாட்டு நிறுவனங்களுக்கு விலைபேசுவதை நியாயப்படுத்துகின்றன மத்திய-மாநில அரசுகள். ஆற்று மணல் கொள்ளை முதல் டாஸ்மாக் வரையிலான எல்லா அநியாயங்களும் இந்த ‘நியாயத்தின்’ மீதுதான் நிற்கின்றன.

செம்மரத்தை வெட்டுவதற்கும், அதனைச் சர்வதேச சந்தையில் விற்பதற்கும் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கக் கோரியுள்ள ஆந்திர மாநில வனத்துறை அமைச்சர் கோபால கிருஷ்ண ரெட்டி.



20 பேரின் படுகொலையை நியாயப்படுத்திப் பேசிய அமைச்சரின் அதே நாக்கு அருகிவரும் தாவரம் என்ற பட்டியலிலிருந்தே செம்மரத்தை நீக்குமாறு வெட்கமே இல்லாமல் பேசுகிறதே, இதன் பொருள் என்ன? செம்மரத்தை வெட்டிக் காசு பார்ப்பதில் கடத்தல்காரர்களை விடவும், சந்திரபாபு நாயுடு தீவிரமாக இருக்கிறார் என்பதே இதன் பொருள்.

‘‘அரசுக்கான வருவாய் ஆதாரம்’’ என்ற பெயரில் இயற்கைவளக் கொள்ளைகள் அனைத்தையும் நியாயப்படுத்திக் கொண்டே, மறுபுறம் அரசுக்குச் சேர வேண்டிய வருவாயை கார்ப்பரேட் முதலாளிகளும் மஃபியாக்களும் அதிகார வர்க்கமும் ஆளும் கட்சிகளும் கூட்டு சேர்ந்து கொள்ளையிடுகின்றனர். அம்பானி விழுங்கியுள்ள கோதாவரி எண்ணெய் வயலில் தொடங்கி, கிரானைட், தாதுமணல், ஆற்றுமணல் கொள்ளை வரை இதுதான் நடக்கிறது. செம்மரக் கடத்தலில் நடப்பதும் இதுதான்.

ஆந்திர மாநிலத்தில் செம்மரக் கடத்தலில் ஈடுபட்டிருக்கும் ரெட்டி மற்றும் கம்மா நாயுடு சாதிகளைச் சேர்ந்த மஃபியாக் கும்பல்கள், ஒய்.எஸ்.ஆர். காங்கிரசு, காங்கிரசு, தெலுங்கு தேசம் ஆகிய கட்சிகளில் அவர்கள் பெற்றிருக்கும் செல்வாக்கு, அவர்களுக்கிடையிலான கோஷ்டி மோதலின் வரலாறு, காங்கிரசு முதல்வர் ராஜசேகர் ரெட்டியின் ஆட்சிக்காலத்தில் செம்மரக் கடத்தல் மஃபியாவின் தலைவனான ராமச்சந்திர ரெட்டியே வனத்துறை அமைச்சராக இருந்து செம்மரம் கடத்தியது என்பன போன்ற விவரங்களை வாசகர்கள், ‘‘வினவு தளம்’’ வெளியிட்டுள்ள கட்டுரையில் காணலாம். [http://www.vinavu.com/2015/04/10/red-sanders-smuggling-kamma-reddy-mafia-war/]

தற்போது மொரிசியஸில் கைது செய்யப்பட்டிருக்கும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரசை சேர்ந்த கங்கி ரெட்டி, மஸ்தான் வலி, தெலுகு தேசம் கட்சியைச் சேர்ந்த புல்லட் சுரேஷ், செம்மரக் கடத்தல் முன்னாள் எம்.பி. சவுந்திரராஜன் என்று தெற்கு ஆந்திரா, வடக்கு தமிழகம் மற்றும் கர்நாடகத்தைச் சேர்ந்த பல ஓட்டுக்கட்சி கிரிமினல்களும், சங்கரராமன் கொலை வழக்கின் முக்கியக் குற்றவாளியான அப்பு போன்ற தொழில்முறைக் கிரிமினல்களும் செம்மரக் கடத்தல் வலைப்பின்னலில் அங்கம் வகிக்கின்றனர்.

பொதுவாக, அரசு அதிகாரத்தைப் பயன்படுத்தி பொதுச்சொத்தைக்

கொள்ளையிடுவதில் ஓட்டுக் கட்சிகளிடையே வேறுபாடில்லை. அதேநேரத்தில், என்னென்ன முறைகளில், எந்தெந்தத் துறைகளில், எந்த அளவுக்குக் கொள்ளையடிப்பது என்பது போன்ற விவகாரங்களில் ஓட்டுக் கட்சிகளுக்கிடையே சில வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்த வேறுபாட்டின் அடிப்படையில்தான் ''ஊழலற்ற நல்லாட்சி'' என்று கட்சிகள் தங்களை முன்நிறுத்திக் கொள்கின்றன.




**ஆந்திர அரசு எந்த அளவுக்கு செம்மரம் விற்ற காசைச் சார்ந்து இருக்கிறதோ, அந்த அளவுக்கு கடத்தலைத் தடுக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டிருப்பது போலவும் நடிக்கிறது. இது கஞ்சா வியாபாரியிடம் மாமூலும் வாங்கிக் கொண்டு, கேசு போட்டு உள்ளேயும் தள்ளும் போலீசின் நடத்தையைப் போன்றது.**

''ஏ.டி.எம். திருடர்கள், கள்ள நோட்டுப் பேர்வழிகள், செம்மரக் கடத்தல்காரர்கள் போன்ற கிரிமினல்கள்தான் ஒய்.எஸ்.ஆர். காங்கிரசு கட்சி முழுவதும் நிரம்பியிருக்கிறார்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் இவர்கள் லார்டு வெங்கடாசலபதியையே திருடி விடுவார்கள்'' என்று சமீபத்தில் பேசியிருந்தார் சந்திரபாபு நாயுடு.

அது மிகையல்ல. ஒய்.எஸ்.ஆர் காங்கிரசு என்பது அ.தி.மு.க. வுடன் ஒப்பிடத்தக்க ஒரு மஃபியாக் கும்பல்தான். செம்மரக் கடத்தலில் முக்கியப் பங்கு வகிப்போரும் அக்கட்சியினர்தான். எனவே சேஷாசலம் தாக்குதல் மூலம், ராமச்சந்திர ரெட்டி உள்ளிட்ட செம்மரக் கடத்தல் பிரமுகர்களைத் தன்னிடம் சரணடைய வைப்பதும் அக்கட்சியைப் பலவீனப்படுத்துவதும் நாயுடுவின் திட்டமாக இருக்கக்கூடும்.

ஆனால், இந்தப் படுகொலையின் பின்புலத்தில் உள்ள அரசியலாக நாம் கவனிக்க வேண்டிய முதன்மையான விசயம் இதுவல்ல. ''செம்மரம் கடத்தும் ஏகபோக உரிமை அரசுக்கு மட்டுமே உரியது'' என்பதுதான் இந்தப் படுகொலை மூலம் நாயுடு அரசு கூறும் செய்தி.

நாயுடு அரசு கோரியுள்ளவாறு, செம்மரத்தை வெட்டுவதன் மீதான தடை நீக்கப்படுமானால், அதனை ஆந்திர அரசு சட்டபூர்வமாகவே வெட்டி விற்பனை செய்யும். நீக்கப்படவில்லையானால், கடத்தல்காரர்கள் மூலம் மரத்தை வெட்ட அரசே ஏற்பாடு செய்யும். பின்னர், அதில் ஒரு பகுதியைக் கைப்பற்றி ஏலம் விட்டுக் காசாக்கிக் கொள்ளும். அதேநேரத்தில், கடத்தலைத் தடுத்து செம்மரங்களைக் காப்பாற்றுவதில் அரசு முனைப்பாக இருப்பதாகக் காட்டும் பொருட்டு, அவ்வப்போது ஏழைகள் சிலரை ஆந்திர போலீசு சுட்டுக் கொல்லும்; சிறை பிடிக்கும்.

•••

மலைவாழ் மக்களைப் பொருத்தவரை, வளர்ச்சி என்ற பெயரில் அரசு காடுகளை அழித்தாலும் சரி, வனப்பாதுகாப்பு - வனவிலங்குப் பாதுகாப்பு என்ற பெயரில் காடுகளைக் காப்பாற்ற முனைந்தாலும் சரி, அதன் நோக்கம் மலைவாழ் மக்களை வெளியேற்றுவதாகவே இருக்கிறது. இந்தக் கத்தி இரண்டு பக்கமும் மலைவாழ் மக்களை வெட்டுகிறது.

மலைவாழ் மக்களைப் பொருத்தவரை, காடுகளைத் தங்களது வாழ்வின் ஆதாரமாகவும், வாழ்க்கையிலிருந்து பிரிக்கவொண்ணாத அங்கமுமாகவே அவர்கள் கருதி வந்திருக்கிறார்கள். செம்மரம் முதல் சந்தன மரம் வரை அனைத்திலும் பணம் காய்த்துத் தொங்குவதைப் பார்த்த முதலாளித்துவம்தான் அவற்றை வெட்டிக் காசாக்குகிறது.

இவ்வாறு ஏற்கெனவே அழிக்கப்பட்ட சவ்வாது மலைக் காடுகளின் மைந்தர்கள்தான், இன்று செம்மரம் வெட்டுவதற்குக் கூலிக்காரர்களாக அமர்த்தப்பட்டவர்கள். நாளை செம்மர ஏற்றுமதியின் மீதான தடையை நீக்குவதில் சந்திரபாபு நாயுடு ஒருவேளை வெற்றி பெறலாம். அப்போதும் திறமை வாய்ந்த மரம் வெட்டிகளைத் தேடி தரகர்கள் சவ்வாது மலைக் கிராமங்களுக்கு வருவார்கள்.

மலைவாழ் மக்களை இந்த விஷவலையில் சிக்காமல் தடுக்க வேண்டுமானால், சவ்வாது மலையின் மீது தங்களுடைய அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கு அவர்களை நாம் பயிற்றுவிக்க வேண்டும்.

• சூரியன்

## முத்ரா வங்கித் திட்டம்:

# கந்துவட்டிக் கும்பலுக்குச் சிவப்புக் கம்பளம்!

**குறுந்தொழிலுக்கு நிதியுதவி அளிப்பது என்ற போர்வையில் கந்துவட்டித் தொழிலை அமைப்புரீதியாகத் திரட்டி,பராமரிக்கத் திட்டம் தீட்டியிருக்கிறது, மோடி அரசு.**

கடந்த ஓராண்டு கால ஆட்சியில் பிரதமர் மோடி இரண்டு விசயங்களைத்தான் திரும்பத் திரும்பச் செய்து வருகிறார். ஒன்று, வெளிநாடு செல்வதற்கு விமானம் ஏறிக் கொண்டிருக்கிறார். இல்லையென்றால், அதாவது தப்பித் தவறி அவர் உள்நாட்டில் இருந்தாலோ புதுப் புது திட்டங்களை அறிவித்து வருகிறார். இந்த வகையில், கடந்த ஏப்ரலில் பிரதமர் மோடி முத்ரா வங்கியைத் திறந்துவைத்த கையோடு, பிரான்சுக்குச் செல்ல விமானம் ஏறினார்.

ஜன்தன் யோஜ்னா, கிளீன் இந்தியா, மேக் இன் இந்தியா, பேட பாச்சாவோ என்ற ஆரவாரத் திட்டங்களின் வரிசையில் ''முத்ரா வங்கி''த் திட்டம் வந்திருக்கிறது. நாடெங்குமுள்ள கோடிக்கணக்கான குறுந்தொழில்கள் மற்றும் தள்ளுவண்டிக் கடை, பெட்டிக்கடை, பூக்கடை, ஆட்டோ ஓட்டுவது உள்ளிட்ட சிறு வியாபாரிகள், சுயதொழில் முனைவோருக்குத் தேவைப்படும் கடனுதவியைக் குறைந்த வட்டியில் அளித்து, அவர்களைக் கந்துவட்டியின் பிடியிலிருந்து மீட்பதுதான் முத்ரா திட்டத்தின் நோக்கம் என்று விளக்கமும் அளிக்கப்பட்டிருக்கிறது.

குறுந்தொழில் வளர்ச்சி குறித்து இதற்கு முன்பிருந்த ஆட்சியாளர்கள் யாரும் இந்த அளவிற்குச் சிந்தித்தது இல்லையென்றும், இது மோடிக்கே உரிய செயல் பாணியென்றும் இந்து மதவெறிக் கும்பல் இத்திட்டம் குறித்து துதிபாடி வருகிறது. குறிப்பாக, சுதேசி விழிப்புணர்வு இயக்கத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டுப் பார்ப்பனரான எஸ்.குருமூர்த்தி, ''இந்தியாவைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் கொண்டு வந்திருக்கும் திட்டமிது; இந்தியப் பொருளாதாரத்தின் புதிர்களுக்கான விடையிது; இந்த மண்ணுக்கேற்றதும், மதிநுட்பமும் நிறைந்த இத்திட்டம் ஆட்டத்தின் போக்கையே மாற்றக் கூடியது'' என்றெல்லாம் புல்லரிக்கும் அளவிற்கு எழுதி வருகிறார்.

நாடெங்குமுள்ள 5.8 கோடி குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுள் மூன்றில் இரண்டு பங்கு தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்களால் நடத்தப்படுவதாகவும், முத்ரா வங்கி கடன் வழங்குவதில் இவர்களுக்குதான் முன்னுரிமை கொடுக்கும் என்றும் அறிவித்துள்ள மோடி அரசு, இதன் மூலம் தன்னை ஒடுக்கப்பட்ட சாதிகளைச் சேர்ந்தவர்களின் தோழனாகவும் காட்டிக் கொள்ள முயலுகிறது.

முத்ரா திட்டத்தின் யோக்கியதையைப் பற்றித் தெரிந்து கொள்ளும் முன், இது குறித்து புனையப்படும் கட்டுக்கதைகளைத் தான் முதலில் தோலுரிக்க வேண்டியிருக்கிறது. குறு மற்றும் சிறு தொழில்களின் வளர்ச்சிக்காக முதல்முறையாகவும் தனிச்சிறப்பான முறையிலும் உருவாக்கப்பட்ட திட்டமாக முத்ரா முன்னிறுத்தப்படுவது கடைந்தெடுத்த பொய், மோசடி. இதற்கு முன்பாகவே, இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி (சிட்பி), விவசாயம் மற்றும் கிராமப்புற வளர்ச்சிக்கான தேசிய வங்கி (நபார்டு), தாழ்த்தப்பட்டோர் நிதியுதவி மற்றும் வளர்ச்சிக்கான தேசிய கழகம், பழங்குடியினர் நிதியுதவி மற்றும் வளர்ச்சிக்கான தேசிய கழகம், பிற்படுத்தப்பட்ட சாதியினர் நிதியுதவி மற்றும் வளர்ச்சிக்கான தேசிய கழகம் உள்ளிட்ட பல்வேறு மைய அரசின் அமைப்புகளும்,

முத்ரா வங்கியைத் திறந்து வைக்கும் பிரதமர் நரேந்திர மோடி.



மாநில அரசின் அமைப்புகளும் குறு மற்றும் சிறு தொழில்களின் வளர்ச்சியை மையப்படுத்தி பல ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகின்றன. மேலும், இத்தொழில் துறையில் வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கு குறு, சிறு மற்றும் மத்திய தர தொழில் வளர்ச்சி சட்டம் என்ற பெயரில் தனித்தொரு சட்டம் உருவாக்கப்பட்டிருப்பதோடு, இத்தொழில்துறை எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகப் பல்வேறு கமிட்டிகளும் அமைக்கப்பட்டு, ஆலோசனைகளும் பெறப்பட்டுள்ளன.



குறு நிதி நிறுவனங்களின் அத்துமீறல்களையும் அடாவடித் தனங்களையும் கண்டித்தும், அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் ஹைதராபாத்திலுள்ள ரிசர்வ் வங்கிக் கிளையின் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தும் கிராமப்புற பெண்கள். (கோப்புப் படம்)

இத்துணை அமைப்புகள், கமிட்டிகளுக்குப் பிறகும் குறு மற்றும் சிறு தொழில்களுக்கு வங்கிக் கடன் கிடைப்பது குதிரைக் கொம்பாக உள்ளது என்பதுதான் கசப்பான உண்மை. நாடெங்குமுள்ள 5.8 கோடி குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுள் வெறும் 4 சதவீத நிறுவனங்களுக்குத்தான் வங்கிக் கடன் கிடைத்திருப்பதையும், மற்றவர்கள் கடனுக்குக் கந்துவட்டிக் கும்பலை நம்பியிருப்பதையும் அரசின் புள்ளிவிவரங்களே ஒப்புக் கொள்கின்றன.

''குறுந்தொழில்களுக்கு ஒதுக்கப்படும் கடன் தொகையை வங்கி நிர்வாகம் திட்டமிட்டே சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்குக் கொடுப்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ளன. இத்தகைய தில்லுமுல்லுகளை அரசும் கண்டு கொள்வதில்லை'' எனக் குற்றஞ்சுமத்துகிறார், தமிழ்நாடு குடிசை மற்றும் குறுந்தொழில் கூட்டமைப்பின் தலைவர் ஏ.எஸ்.கண்ணன். குறிப்பாக, கடந்த காங்கிரசு ஆட்சியில் குறு மற்றும் சிறு தொழில்களுக்கு எந்தவிதமான ஈடும் கேட்காமல் ஒரு கோடி வரை கடன் கொடுக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு, அது பெருமளவில் நடைமுறைப் படுத்தப்படாமல் மோடி ஆட்சியிலும் கிடப்பில் போடப்பட்டிருப்பதை அம்பலப்படுத்தும் அவர், ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ள கடன் திட்டங்களை நியாயமாகவும் விரைவாகவும் நடைமுறைப்படுத்த முயலாமல், புதிதாக முத்ரா திட்டத்தை அறிவித்திருப்பது மோடியின் விளம்பர அரசியல்தான் எனக் குறிப்பிடுகிறார்.

நாடெங்குமுள்ள 5.8 கோடி குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுள் மூன்றில் ஒரு பங்கு உற்பத்தியிலும், மற்றொரு பங்கு வர்த்தகத்திலும், மீதமுள்ளவை சேவைத்துறையிலும் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிறுவனங்களுக்கு வங்கிக் கடன் கிடைக்கவில்லை என்பது மட்டும் அவற்றின் நசிவுக்குக் காரணமல்ல. குறிப்பாக, உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கு ''ஜாப் ஆர்டர்'' கிடைப்பதுதான் இன்று பெரும் சவாலாக உள்ளது.

தமிழ்நாடு குடிசை மற்றும் குறுந்தொழில் கூட்டமைப்பின் தலைவர் ஏ.எஸ்.கண்ணன்.



கார்ப்பரேட் நிறுவனங்களும், பொதுத்துறை நிறுவனங்களும் தமது உற்பத்தியில் 20 முதல் 30 சதவீத வேலைகளை குறு மற்றும் சிறு நிறுவனங்களிடம் கொடுத்து வாங்க வேண்டும் எனக் கோரிக்கை வைக்கப்பட்டாலும், அதனை முழுமையாக நடைமுறைப்படுத்தும் நிலையில் பொருளாதார நிலையும் இல்லை. அரசின் பொருளாதாரக் கொள்கையும் குறு, சிறு நிறுவனங்களுக்கு ஆதரவாக இல்லை. குறிப்பாக, உற்பத்தித்துறையில் நுழையும் பன்னாட்டு நிறுவனங்கள் தமது வேலைகளை, தமக்குச் சொந்தமான துணை நிறுவனங்களிடமே கொடுத்து வாங்கிக் கொள்கின்றன; அல்லது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்கின்றன. பொருளாதார மந்தம், தேக்கம் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஆதரவான அரசின் தொழிற்கொள்கை ஆகியவை காரணமாக ஜாப் ஆர்டர் கிடைக்காமல், குறு மற்றும் சிறு நிறுவனங்கள் மூடப்படும் அபாயத்தை எதிர்கொண்டு நிற்கின்றன. இந்த நிலையில் முத்ரா திட்டத்தை குருமூர்த்தி உள்ளிட்ட இந்து மதவெறிக் கும்பல் சர்வரோக நிவாரணியாக முன்னிறுத்துவது புண்ணுக்கு புனுகு தடவும் ஜால வித்தைக்கு ஒப்பானதாகும்.

சிறு மற்றும் குறு நிறுவனங்களுக்கு ஏறத்தாழ நான்கு இலட்சம் முதல் ஐந்து இலட்சம் கோடி ரூபாய் வரை கடன் தேவைப்படுவதாகப் பொருளாதார நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், முத்ரா வங்கியோ வெறும் 20,000 கோடி ரூபாய் முதலீட்டில்தான் தொடங்கப்படுகிறது. இதனை ஒரு இலட்சம் கோடி ரூபாய் வரை அதிகரிக்கலாம் என்ற வாக்குறுதிதான் அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவொருபுறமிருக்க, மோடி அரசு பதவிக்கு வந்தவுடன் தயாரித்த (கடந்த ஆண்டு) பட்ஜெட்டில் சிறுதொழில்



தமிழ்நாடு குடிசை மற்றும் குறுந்தொழில் சங்கத்தினர் தடையில்லா மின்சாரம் வழங்குவதை உறுதி செய்யக் கோரி கோயம்புத்தூர் மின்வாரிய அலுவலகத்தை முற்றுகையிட்டு நடத்திய ஆர்ப்பாட்டம். (கோப்புப் படம்)

களின் வளர்ச்சிக்காக 10,000 கோடி ரூபாய் ஒதுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்ட திட்டம் நடைமுறைக்கே வரவில்லை என சிறுதொழில் சங்கங்கள் குறிப்பிடுகின்றன. இவையெல்லாம் முத்ரா வங்கித் திட்டமும் மற்றுமொரு சவடால் அறிவிப்பு தவிர வேறில்லை என்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றன.

இதற்கு அப்பால், முத்ரா வங்கித் திட்டம் குறுந்தொழில்களுக்கு, உதிரித் தொழில்களை நடத்திவரும் அடித்தட்டு மக்களுக்கு உதவுவது என்ற போர்வையில் நாடெங்குமுள்ள கந்துவட்டி மற்றும் லேவாதேவி கும்பலை அமைப்பாகத் திரட்டுவதையும், அவர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கிடைப்பதை உத்தரவாதப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுதான் தயாரிக்கப்பட்டிருக்கிறது. முத்ரா வங்கி குறுந்தொழில்களுக்கும், சிறு வியாபாரிகளுக்கும் நேரடியாகக் கடன் வழங்காது. அவ்வங்கி உள்ளூர் அளவில் செயல்படும் ''முதலீட்டாளர்களை'' - அதாவது கந்துவட்டிக் கும்பலையும், சிட்பண்ட் போன்ற குறுநிதி நிறுவனங்களையும் தன்னிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கோரும். இப்படி பதிவு செய்துகொண்டவர்களுக்கு முத்ரா வங்கி கடன் வழங்கும். அவர்கள் பயனாளிகளைத் தேடிப் பிடித்துக் கடன் கொடுப்பார்கள். கடன் கொடுப்பதையும், அதனை வட்டியோடு வசூலிப்பதையும் முறைப்படுத்தும் போலீசாக முத்ரா வங்கி செயல்படும்.

''தாம்பரத்தில் ஒரு சிறு வணிகருக்குக் கடன் தர வேண்டும் என்றால், அப்பகுதியில் கடன் கொடுத்து வாங்கும் கந்து வட்டிக்காரர்களுக்குத்தான் பயனாளிகளைத் தெரியும். உதாரணத்துக்கு, கரூர் போன்ற பகுதிகளில் 3 ஆயிரம் பேர் சேர்ந்து கரூர் பைனான்சியர்கள் சங்கத்தை அமைத்து 40 ஆண்டுகளாக நல்ல முறையில் கடன் கொடுத்து வாங்குகின்றனர். அது போன்ற லட்சக்கணக்கான பைனான்சியர்களை நாடு முழுவதும் கண்டறிந்து முத்ரா பதிவு செய்யும். இதுதான் நாட்டைப் புரிந்துகொண்டவர்களால் இந்தியக் கண்ணோட்டத்துடன் உருவாக்கப்பட்ட திட்டம்'' என்கிறார், எஸ்.குருமூர்த்தி.

# குறுந்தொழிலுக்குச் சாவுமணி!

சிறுதொழில் பட்டியலில் இருந்து ஊறுகாய், மெழுகுவர்த்தி, ஊதுவத்தி, தீக்குச்சி, பூட்டு, ரொட்டி, நோட்டுப் புத்தகங்கள், ஸ்டீல் பீரோ, சேர், ஷட்டர், அலுமினிய பாத்திரங்கள் உள்ளிட்ட 20 பொருட்களை நீக்கி உத்தரவிட்டுள்ளது மைய அரசு. இதனால் இத்தொழில்களை இனி கார்ப்பரேட் நிறுவனங்களே நேரடியாக மூலதனமிட்டுத் தொடங்க முடியும். நோட்டுப் புத்தகங்கள், பென்சில்கள் போன்றவற்றை சிறுதொழில் நிறுவனங்களிடமிருந்து கொள்முதல் செய்து, தங்களின் பெயரில் விற்பனை செய்து வரும் ஐ.டி.சி. உள்ளிட்ட தரகு முதலாளித்துவ நிறுவனங்களுக்கு இந்த அறிவிப்பு பெரும் கொள்ளைக்கான வாய்ப்பைத் திறந்துவிட்டுள்ளது. இதுகாறும் இத்தொழிலை நடத்திவரும் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் இனி கார்ப்பரேட் நிறுவனங்களோடு போட்டியிட வேண்டிய கட்டாயத்திற்குள், இக்கட்டுக்குள் தள்ளப்பட்டுள்ளன. மிக முக்கியமாக, வேலைவாய்ப்பின்மையும், வேலை இழப்பும் கோலோச்சிவரும் நேரத்தில் வெளிவந்துள்ள இந்த அறிவிப்பு, ஏதாவது கைத்தொழில் செய்து பிழைத்துக் கொள்ளலாம் என்ற நினைப்பில் நிரந்தரமாகவே மண்ணை அள்ளிப் போட்டுவிட்டது.

தமிழகத்தில் சிவகாசி, விருதுநகர், சாத்தூர், கோவில்பட்டி பகுதிகளில் சிறுதொழில்களாக நடந்துவரும் தீக்குச்சி, பட்டாசு, நோட்டுப் புத்தகங்கள் தயாரிப்பு; தர்மபுரி மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி, பாலக்கோடு, மாரண்ட அள்ளி, பென்னாகரம் பகுதிகளில் நடந்துவரும் பர்னிச்சர்கள் தயாரிக்கும் தொழில்; திருப்பூர், கும்பகோணம், சென்னை, மதுரை, மானாமதுரை பகுதிகளில் நடந்துவரும் எவர்சில்வர் பட்டறை தொழில்; தமிழகத்தின் பல பகுதிகளில் குடிசைத் தொழிலாக நடந்துவரும் ஊறுகாய், ஊதுவத்தி, மெழுகுவர்த்தி தயாரிப்பு - ஆகியவை அனைத்தும் மைய அரசின் அறிவிப்பினால் பெரும் அழிவைச் சந்திக்க வேண்டிய அபாயத்தில் நிறுத்தப்பட்டுள்ளன.

''சிறுதொழில் தயாரிப்புகளில் பெரிய நிறுவனங்கள் ஈடுபடும்பொழுது நுகர்வோருக்குச் சற்றுக் குறைவான

குருமூர்த்தியின் வார்த்தைகளில் குறுந்தொழில் முனைவோரின் நலன் இருப்பதற்கான சுவடுகூடத் தென்படவில்லை. முத்ரா வங்கி உள்ளூர் பைனான்சியர்களுக்குக் குறைந்த வட்டியில் கடன் கொடுக்குமாம். அவர்கள் அதனை மைய அரசுகூறும் வட்டி வீதத்தில் உள்ளூர் தொழில்முனைவோருக்குக் கொடுத்து, அவர்களைக் கைதூக்கி விடுவார்களாம். கேப்பையிலிருந்து நெய் வழிகிறது என அவர்கள் கூறுவதை நம்புவதற்கு நாமென்ன அவ்வளவு இளிச்சவாயார்களா?

**முத்ரா வங்கி உள்ளூர் கந்துவட்டிக் கும்பலுக்கு குறைந்த வட்டியில் கடன் கொடுக்குமாம். அவர்கள் அதனை மைய அரசு கூறும் வட்டி வீதத்தில் உள்ளூர் தொழில்முனைவோருக்குக் கொடுத்து, அவர்களைக் கைதூக்கி விடுவார்களாம். கேப்பையிலிருந்து நெய் வழிகிறது என அவர்கள் கூறுவதை நம்புவதற்கு நாமென்ன அவ்வளவு இளிச்சவாயர்களா?**

முத்ரா திட்டம் என்பது கந்துவட்டித் தொழிலைச் சட்டபூர்வமாக்குகிறது. அவர்களின் தொழிலுக்குப் பாதுகாப்பும் உத்தரவாதமும் அளிக்க முன்வருகிறது. குறு நிதி நிறுவனங்கள் என்ற போர்வையில் செயல்பட்டு வரும் பலதரப்பட்ட பிளேடு கம்பெனிகள் மற்றும் கந்துவட்டித் தொழிலில் கொடிகட்டிப் பறக்கும் கவுண்டர், தேவர், வடநாட்டு பனியா, மார்வாரி உள்ளிட்ட ஆதிக்க சாதியினரின் சுரண்டலும், அத்துமீறல்களும் கட்டுக்கு அடங்காமல் தொடருவதற்கான வாய்ப்புகளைத் திறந்து விடுகிறது என்பதைத் தாண்டி இத்திட்டம் குறுந்தொழில்களுக்கோ, அதில் ஈடுபட்டுள்ள அடித்தட்டு மக்களுக்கோ எந்தவிதமான பாதுகாப்பையும் அளிக்கவில்லை. அவர்களுக்கு உதவ ஒரு சிறு துரும்பையும் கிள்ளிப் போடவில்லை.

அடித்தட்டு மக்களுக்குக் கடனுதவி அளித்து, அவர்களைக் கைதூக்கி விடுவது என்ற 'நல்ல' நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ரிசர்வ் வங்கியின் கண்காணிப்பின் கீழ் குறு நிதி நிறுவனங்கள் இறக்கிவிடப்பட்டன. இதற்காக அந்நிறுவனங்களுக்கு தேசிய வங்கிகளிலிருந்து பணமும் கொட்டித்தரப்பட்டது. ஆனால், அதன் பலன்? குறு நிதி நிறுவனங்கள் கந்துவட்டி மாஃபியாக்களாக மாறி, ஏழைகளை, விவசாயிகளைத் தற்கொலைக்குத் தள்ளிவிட்டதைத்தான் ஆந்திராவிலும், ஒரிசாவிலும் கண்டோம். இத்துயரத்தை, கொடுமையை முத்ரா வங்கித் திட்டம் தேசியமயமாக்கக்கூடும்.

● திப்பு

---

விலையில் பொருட்கள் கிடைக்கலாம். ஆனால், ஆயிரக்கணக்கான சிறுதொழில்கள் அடியோடு மூடப்படும். வருங்காலத்தில் குறிப்பிட்ட சில நிறுவனங்கள் மட்டுமே நாட்டில் சொந்த தொழில் செய்ய முடியும் என்ற கட்டாயம் இந்த அறிவிப்பினால் ஏற்படவும் வாய்ப்புள்ளது'' என எச்சரிக்கிறார், இந்திய தொழிற்கூட்டமைப்பின் சேலம் பகுதி தலைவர் ராஜேஷ்குமார்.



குடிசைத் தொழிலாக நடந்துவரும் மெழுகுவர்த்தி தயாரிப்பு.

இதுவொருபுறமிருக்க, குறுந்தொழில்களின் முதலீட்டு வரம்பை ரூ.20 இலட்சத்திலிருந்து 50 இலட்சமாகவும், சிறு தொழிற்சாலைகளுக்கான முதலீட்டு வரம்பை ரூ.5 கோடியிலிருந்து ரூ.10 கோடியாகவும், நடுத்தர தொழில்களின் முதலீட்டு வரம்பை ரூ.10 கோடியிலிருந்து ரூ.20 கோடியாகவும் உயர்த்தியிருக்கிறது, மைய அரசு. இந்த அதிரடி உயர்வின் மூலம் குறு, சிறுதொழில் என்ற அடிப்படைக்கே வேட்டு வைத்து, கந்துவட்டிக்கு கடன் வாங்கி தொழில் செய்துவரும் சாதாரண தொழில்முனைவோரை அத்துறையிலிருந்து அப்புறப்படுத்துவதற்கான சதியை அரங்கேற்றியிருக்கிறது.

இப்படியொரு இரட்டைத் தாக்குதலை குறுந்தொழில் மீது தொடுத்துவிட்டு, முத்ரா வங்கியின் மூலம் கடன் கொடுத்து குறுந்தொழிலையும், அதனை நடத்திவரும் அடித்தட்டுப் பிரிவினரையும் கைதூக்கிவிடப் போவதாக மோடியும் அவரது பரிவாரங்களும் விளம்பரம் செய்துவருவது எத்தகையதொரு பித்தலாட்டம்!

●

### மலியானா படுகொலை வழக்கு:

# முசுலீம்களைக் கொன்ற கரங்கள் நீதியையும் கொல்கின்றன!

**மோசடியான முதல் தகவல் அறிக்கை, 28 ஆண்டு காலமாக வழக்கு இழுத்தடிப்பு போன்ற சதிகளின் மூலம் முசுலீம்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதி திட்டமிட்டு மறுக்கப்படுகிறது.**

**உ**த்திரப்பிரதேசத்தின் ஹாசிம்புரா மற்றும் மலியானா கிராமங்களில் 1987 மே 18 முதல் 23 வரை இந்துவெறியர்களும் அரசும், போலீசும், பிரதேச ஆயுதப் படை(PAC)எனும் துணை ராணுவப்படையும் கைகோர்த்துக் கொண்டு முஸ்லிம்கள் மீது நடத்திய காட்டுமிராண்டித்தனமான நரவேட்டையானது, நாட்டையும் மக்களையும் உலுக்கிய ஒரு கொடூர நிகழ்வாகும். 1987 மே 23-ஆம்தேதியன்று மலியானா கிராமத்தில் 73 முஸ்லிம்கள் பிரதேச ஆயுதப்படையினராலும், இந்துவெறி பாசிச பயங்கரவாதிகளாலும் சுட்டுக் கொல்லப்பட்டும் தீயிட்டு எரிக்கப்பட்டும் படுகொலை செய்யப்பட்டனர். ஆனால் 28 ஆண்டுகளுக்குப் பின்னரும் குற்றவாளிகளைத் தண்டிக்கக்கூட இந்திய அரசும் நீதித்துறையும் முன்வரவில்லை.

உ.பி.யின் மீரட் மாவட்டத்திலுள்ள ஹாசிம்புராவில் 42 அப்பாவி இசுலாமியரைப் பச்சைப் படுகொலை செய்த பிரதேச ஆயுதப் படையினர், மீரட்டின் அருகிலுள்ள மலியானா கிராமத்தைச் சுற்றிவளைத்தனர். குடியிருப்புகளை விட்டு எவரும் வெளியேறிச் செல்ல முடியாதபடி இந்துவெறி குண்டர்கள் தடுப்பரணாக நின்றனர். அன்று தொழுகை முடிந்து வெளியே வந்த இசுலாமியரைக் குறிவைத்த ஆயுதப் படையினர், கண்ணிமைக்கும் நேரத்தில் 20-க்கும் மேற்பட்டோரைச் சுட்டுக் கொன்றனர். பீதியில் மிரண்டு சிதறி ஓடியவர்களைத் துரத்திச் சுட்டுக்கொண்டே சென்றது ஆயுதப்படை. மொட்டை மாடிகளில் இருந்து பறந்து வந்த தோட்டாக்கள் தப்பியோடியவர்களைக் குறிவைத்துத் தாக்க, அவர்கள் இரத்த வெள்ளத்தில் துடிதுடித்து மாண்டு போயினர். அதைத் தொடர்ந்து இந்துவெறி குண்டர்கள் வீடுகளின் மீது மண்ணெண்ணையை ஊற்றி ஒளிந்திருந்த மக்களை உயிருடன் எரித்துக் கொன்றனர். அவர்களது கையில் அகப்பட்டவர்கள் அரிவாளால் வெட்டப்பட்டு எரியும் நெருப்பில் தூக்கிவீசப்பட்டனர்.

இப்படுகொலையை மறைக்க, கொல்லப்பட்டவர்கள் அனைவரும் மூட்டைகளாகக் கட்டப்பட்டு காசியாபாத்தின் மேல்கங்கையாற்றிலும், ஹிண்டான் நதியிலும் வீசப்பட்டனர். இருப்பினும், கொல்லப்பட்டோரின் பிணங்கள் சாட்சியங்களாக அடுத்த இரண்டு நாட்களில் ஆறுகளில் மிதக்கத் தொடங்கின. இறந்து போனவர்கள் 73 பேர் என அன்றைய உ.பி. அரசு தெரிவித்தாலும், நூற்றுக்கும் மேற்பட்ட பிணங்களைப் பார்த்ததாக மீனவர்களும் கிராம மக்களும் உறுதிப்படுத்தினர்.

‘‘எங்கள் கிராமத்தைச் சுற்றிலும் இந்துக்கள் நிறைந்த கிராமங்கள் உள்ளன. அவர்கள் கிராமத்தின் ஐந்து நுழைவுப் பாதைகளிலிருந்தும் தாக்கினர். இதனால் நாங்கள் எந்தத் திசையிலும் தப்பியோட முடியாதபடி சிக்கிக் கொண்டோம். அவர்கள் எனது கால்களையும் கைகளையும் அடித்து உடைத்துவிட்டனர். அவர்கள்

உ.பி. மாநில பிரதேச ஆயுதப் படை மலியானா கிராம முசுலீம்கள் மீது நடத்திய தாக்குதலின் பொழுது தப்பிப் பிழைத்த (இடமிருந்து) முஜிபுர் ரஹ்மான், பாபுதீன் மற்றும் உஸ்மான் அன்சாரி.



எனது பெற்றோரை கட்டிலில் கட்டிப்போட்டு உயிரோடு எரித்துக் கொன்றதை நான் பார்த்தேன்'' என்று மிரட்சியுடன் கூறும் முகம்மது நவாப், ''பிரதேச ஆயுதப் படையையோ, போலீசையோ குற்றம் சாட்டினால் இந்தப் படுகொலை பற்றி விசாரணையோ, நீதியோ கிடைக்காது என்று ஆட்சியாளர்கள் எங்களை எச்சரித்தார்கள். படுகொலைகளுக்குப் பிறகு போலீசார் தயாரித்த முதல் தகவல் அறிக்கையில் இப்படுகொலையை முன்னின்று நடத்திய ஆயுதப்படையினரின் பெயர் திட்டமிட்டு மறைக்கப்பட்டது. 95 இந்துமத வெறியர்கள் குற்றவாளிகளாகவும், கலவரத்தை நேரில் பார்த்த 75 இசுலாமியர்கள் சாட்சியங்களாகவும் சேர்க்கப்பட்டு போலீசாரால் தயாரிக்கப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் நாங்கள் கையெழுத்திடுமாறு நிர்ப்பந்திக்கப்பட்டோம்'' என்கிறார்.




இப்படுகொலைகளைக் கண்டித்து பொதுக்கருத்தும் பொதுமக்கள் நிர்ப்பந்தமும் வலுத்ததால், அன்றைய உ.பி. முதல்வர் வீர்பகதூர்சிங், ஓய்வுபெற்ற நீதிபதி ஜி.எல்.சிறீவத்சவா தலைமையில் ஒரு விசாரணைக் குழுவை அமைத்தார். அக்குழு மீரட் நகரத்தில் தனது விசாரணையைத் துவக்கிய சமயத்தில், இப்படுகொலையின் மிக முக்கிய சாட்சியான ரிக்சா தொழிலாளி மாஷால்லா மீது திருட்டுக் குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பின்னர், போலீசாரால் கொடூரமாகச் சித்ரவதை செய்யப்பட்டு சிறைக் கொட்டடியில் கொலை செய்யப்பட்டார். சிறீவத்சவா குழுவின் விசாரணையின்போது அவர் உயிரோடிருந்தால், பிரதேச ஆயுதப் படையினரின் கொலைவெறியாட்டம் அம்பலமாகியிருக்கும் என்கிறது ''சனநாயக உரிமைக்கான மக்கள் அமைப்பு'' வெளியிட்டுள்ள அறிக்கை. சிறீவத்சவா குழு தனது அறிக்கையை 1989-லேயே சமர்ப்பித்த போதிலும், இன்றுவரை வெளியிடப்படாமல் திட்டமிட்டு மறைக்கப்பட்டு வருகிறது.

1987 முதல் இன்றுவரை, ஒப்பிற்கு கூட அரசுதரப்பில் வழக்குரைஞர் நியமிக்கப்படாததால், இவ்விசாரணை ஓரடிகூட முன்னே நகரவில்லை. வழக்கு விசாரணை 2010-இல் மீரட் நகர நீதிமன்றத்திற்கு வந்தபொழுது, முதல் தகவலறிக்கை காணாமல் போய்விட்டதாக போலீசார் தெரிவித்தனர். முதல் தகவலறிக்கை இல்லாததைச்சாக்காக வைத்து இவ்வழக்கை மேற்கொண்டு விசாரிக்க மறுத்தது மீரட் அமர்வு நீதிமன்றம். முதல் தகவலறிக்கையில் ஆயுதப் படையினர் குற்றவாளிகளாகச் சேர்க்கப்படாமல் தப்புவிக்கப்பட்டதைப் போலவே, இப்போது முதல் தகவல் அறிக்கையையே காணவில்லை என்று கூறி, அதில் குற்றம் சாட்டப்பட்ட இந்துவெறி குண்டர்கள் தப்புவிக்கப்பட்டுள்ளனர்.

முதல் தகவல் அறிக்கை இல்லாததைக் காரணம் காட்டியே விசாரணை முடக்கப்பட்டு வந்த சமயத்தில், இவ்வழக்கு விரைவு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. முதல் தகவலறிக்கைக்குப் பதிலாக, தனிநபர்களின் சாட்சியங்களை அடிப்படையாக வைத்து வழக்கை விசாரிக்க முடிவு செய்யப்பட்டது. இருப்பினும், ஆண்டுக்கு ஒரு சாட்சியம் என இரண்டாண்டுகளில் மொத்தம் இரண்டு பேரின் சாட்சியங்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. மொத்தமுள்ள 75 பேரின் வாக்குமூலத்தைப் பதிவு இன்னும் எத்துணை ஆண்டுகளாகுமோ, தெரியவில்லை. கால்நூற்றாண்டிற்கும் மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கிற இவ்வழக்கில், இதுவரை 800 நாட்கள் விசாரணைக்காக அறிவிக்கப்பட்டு மொத்தத்தில் மூன்று பேரின் வாக்குமூலங்கள் மட்டுமே பெறப்பட்டுள்ளன.

**ஹாசிம்புரா வழக்கிலாவது 'நீதி' விசாரணை நடத்தப்படுவதைப் போன்ற பாவனைகள் இருந்தன. ஆனால், மலியானா வழக்கு விசாரணையில், அந்த குறைந்தபட்ச பாவனைகூட இல்லாமல், விசாரணை குற்றவாளிகளுக்குச் சாதகமாக குழிதோண்டிப் புதைக்கப்படுகிறது.**

# குஜராத்:

# அரசமைப்பையே குற்றக்கும்பலாக்கும் சட்டம்!

கடந்த மார்ச் மாத இறுதியில் குஜராத் சட்டமன்றத்தில் ஒரு கருப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டு, அரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அச்சட்டத்தின் பெயர் ''குஜராத் பயங்கரவாத மற்றும் அமைப்புரீதியான குற்றங்களைக் கட்டுப்படுத்தல் சட்டம் (GCTOC)''. தடா, பொடா மற்றும் ஊபா போன்ற கருப்புச் சட்டங்களின் வரிசையில் களமிறக்கப்பட்டிருக்கும் இந்தச் சட்டத்தைப் பற்றிப் பார்ப்பதற்கு முன்னர், இச்சட்டத்தின் தோற்றப் பின்னணியைப் பார்ப்போம்.

குஜராத்தில் கடந்த 2002-ஆம் ஆண்டு பெருந்திரளான அப்பாவி இஸ்லாமியர்களைக் கொன்று குவித்து வெறியாட்டம் போட்ட மோடி கும்பல், அதன் தொடர்ச்சியாக பல நூறு இஸ்லாமியர்களைத் தீவிரவாதிகளாகச் சித்தரித்துக் கைது செய்து பல போலி மோதல் கொலைகளையும் அரங்கேற்றியது. அக்காலகட்டத்தில்தான் பல்வேறு அப்பாவி இஸ்லாமியர்கள் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். பொடா சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் பல்வேறு தரப்பினரும் நடத்திய போராட்டங்களின் விளைவாக 2004-ஆம் ஆண்டில் மத்திய அரசால் பொடா சட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. அதன் பின்னர் பொடாவிற்கு சற்றும் குறையாத விதிகளைக் கொண்டதொரு கருப்புச்சட்டத்தை ''குஜராத் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் கட்டுப்படுத்துதல் சட்டம்'' என்ற பெயரில் இயற்றியது மோடி அரசு. இச்சட்டம் முறையே 2004, 2008 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளில் அரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்ட போதிலும், அவரால் நிராகரிக்கப்பட்டு திருப்பியனுப்பட்டது. இந்நிலையில் தற்போது இந்தச் சட்டம் நான்காவது முறையாக புதிய அவதாரமெடுத்து அரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலத்திலுள்ள அக்சர்தாம் கோவில் தாக்குதல் வழக்கில் பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, பல ஆண்டு சிறைவாசத்துக்குப் பின் ஒன்றுமறியா நிரபராதிகள் என உச்சநீதி மன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட முசுலீம்கள். (கோப்புப் படம்)



இக்கொலைவெறியாட்டத்தில் தனது குடும்பத்தில் மூவரைப் பறிகொடுத்துள்ள முகம்மது யாகூப், ''இன்றைய ஒட்டுமொத்த அரசியல் அமைப்பே கூட்டு சேர்ந்து கொண்டு எங்களுக்கு கிடைக்க வேண்டிய நீதியை நீர்த்துப்போகவும், மறுக்கவும், தாமதிக்கவும் செய்கின்றன; அதுவும் நாங்கள் முசுலீம்கள் என்பதால் அவை திட்டமிட்டு நடத்தப்படுகின்றன'' என்று குமுறுகிறார். அலாவுதீன் சித்திக் என்கிற அப்பகுதி வழக்குரைஞர், பாதிக்கப்பட்ட முஸ்லிம்களின் சார்பாக வழக்கை இன்றுவரை நடத்தி வருகிறார். ''தேவையற்ற காரணங்களால் ஏற்படுகிற தாமதமே நீதியைச் சாகடிக்க வாய்ப்பாக அமைந்து விடுகிறது. இப்படுகொலை நடந்தபொழுது நேரில் கண்ட சாட்சியங்கள், இறந்தவர்களின் உறவினர்கள் - என சுமார் 25 முதல் 30 பேர் முக்கிய சாட்சிகளாக இருந்தபோதிலும், விசாரணை முடங்கிக் கிடக்கிறது. அரசுதரப்பிலும் ஒரு வக்கீல் கூட நியமிக்கப்படவில்லை'' என விரக்தியுடன் கூறுகிறார்.

உ.பி. ஆட்சியாளர்களால் ஒரு புனிதப் பசுவாகப் பராமரிக்கப்படும் பிரதேச ஆயுதப் படை (PAC) என்ற துணை ராணுவப் படையானது, இந்து வெறியும் சாதிவெறியும் ஆணாதிக்க வெறியும் கொண்ட ஒரு சட்டபூர்வ வன்முறைக் கும்பலாகவே இன்னமும் நீடித்து வருகிறது. கைப்புண்ணிற்குக் கண்ணாடி தேவையற்றதைப் போல, பிரதேச ஆயுதப் படையினராலும் இந்து வெறி குண்டர்களாலும் நடத்தப்பட்ட இப்பச்சைப்படுகொலையில் ஒட்டுமொத்த விசாரணையும் திட்டமிட்டு ஒழிக்கப்பட்டு கொலைகாரர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர். ஹாசிம்புரா வழக்கிலாவது 'நீதி' விசாரணை நடத்தப்படுவதைப் போன்ற பாவனைகள் இருந்தன. ஆனால் மலியானா வழக்கு விசாரணையில், அந்த குறைந்தபட்ச பாவனைகூட இல்லாமல் கொலைகார ஆயுதப்படையினரும், காவிக் கிரிமினல்களும் தப்புவிக்கப்பட்டு, இந்தியாவில் சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்களல்ல என்பதை ஆட்சியாளர்கள் மீண்டும் நிரூபித்துக் காட்டியுள்ளனர்.

● அன்பு

காலாவதியான தடா மற்றும் பொடா போன்ற ஆள்தூக்கிச் சட்டங்களுக்கு எந்த வகையிலும் குறைவில்லாமல் இயற்றப் பட்டிருக்கும் இந்தச் சட்டத்தின்படி, போலீசார் சந்தேகப்படும் எவருடைய தொலைபேசியையும் ஒட்டுக்கேட்ப தோடு, மின்னஞ்சல்களையும் நோட்ட மிட்டு அவற்றை ஆதாரமாகக் காட்டலாம். எஸ்.பி. பதவிக்கு குறையாத தகுதி உள்ள போலீசு அதிகாரியின் முன்னிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் அளிக்கும் வாக்குமூலம் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படும். அதாவது, குற்றம் சாட்டப்பட்டவரை சித்திரவதை செய்து பெறப்படும் வாக்குமூலம் நீதிமன்றத்தில் சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படும். கிரிமினல் சட்டவிதிகளின் படி 90 நாட்களுக்குள் விசாரணையை முடிக்க வேண்டும் என்பதற்கு மாறாக, இச்சட்டப்பிரிவின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளில் கைது செய்யப்படுபவர்களைக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமலேயே போலீசின் விசாரணையில் 180 நாட்கள் வரை வைத்திருக்கலாம்.




விசாரணைக் காலம் முடிந்த பின்னர் இயல்பாகவே பிணை வழங்கப்படும் என்று எதிர்பார்த்து இச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் மனு செய்ய முடியாது. இக்குற்ற வழக்கை விசாரிக்கும் நீதிபதியிடம் பிணை கோருவதற்கான காரணங்களைத் தெரிவித்து, அவருக்கு அது ஏற்புடையதாக இருந்தால் மட்டுமே பிணை வழங்கப்படும். இல்லையேல், குற்றம் சாட்டப்பட்டவர் வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைபட்டுக் கிடக்க வேண்டும்.

தீவிரவாதத்தைத் தடுத்து நாட்டு மக்களைக் காப்பாற்றக் கொண்டுவரப்பட்டதாக கூறப்படும் தடா சட்டத்தின் கீழ் குஜராத்தில் 1993-க்கு முன்பு வரை மட்டுமே சுமார் 19,263 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் யாரும் குண்டு வெடிப்பில் ஈடுபட்ட தீவிரவாதிகள் அல்லர். மாறாக, நர்மதை அணை எதிர்ப்புப் போராட்டம் மற்றும் பல்வேறு போராட்டங்களில் பங்கேற்ற விவசாயிகளும், மலைவாழ் மக்களும், தொழிலாளர்களும், சிறுபான்மையினரும் தான். தடா பரிசீலனைக் கமிட்டியின் ஆய்வறிக்கையின்படி இந்தியா முழுக்க தடாவின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் சுமார் 75,000 பேர். ஆனால், இவர்களில் குற்றம் நிரூபிக்கப்பட்டவர்கள் சுமார் 750 பேர் மட்டுமே.

இந்நிலையில் குஜராத்தில், இந்து வெறி பாசிச மோடியின் ஆட்சியில் பொடா சட்டம் எப்படிச் செயல்பட்டிருக்கும் என்பதைச் சொல்லவே தேவையில்லை. கோத்ரா இரயில் எரிப்பு, அக்சர்தாம் கோவில் மீதான தாக்குதல் வழக்கு, ஹரேன் பாண்டியா கொலை வழக்கு ஆகியவற்றில் பொடா சட்டம் ஏவப்பட்டது. அனைத்து வழக்குகளிலும் சம்பவம் நடந்த இடத்தைச் சுற்றி இருந்த அப்பாவி சிறுவர்கள் உள்ளிட்ட பல நூறு இஸ்லாமியர்களைக் கைது செய்து பல ஆண்டு காலம் சிறையில் அடைத்தது மோடி அரசு. பல்வேறு வழக்குகளில் உச்ச நீதிமன்றமும் இதனைச் சுட்டிக் காட்டி கண்டித்துள்ளது. பொடா சட்டம் குஜராத்தில் நடைமுறையில் இருந்த 2002-2004 காலகட்டத்தில் அச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 240 பேர்களில் 239 பேர் இஸ்லாமியர்கள். மீதி இருந்த ஒருவர் சீக்கியர். ஆனால் 3 நாட்களில் 1,500க்கும் அதிகமான இஸ்லாமியர்களை வெட்டியும் எரித்துக் கொன்றும் வெறியாட்டம் போட்ட எந்த இந்து பயங்கரவாதியின் பக்கமும் திரும்பவில்லை இந்தப் பொடா.

எனவே, தற்போது புதிய பெயரில் கொண்டுவரப்பட்டுள்ள இக்கருப்புச் சட்டத்தின் உண்மையான நோக்கத்தை கடந்தகால தடா, பொடா சட்டங்களின் அனுபவத்திலிருந்து எவரும் புரிந்து கொள்ள முடியும். சிறுபான்மை இஸ்லாமியர்களையும், மறுகாலனியாதிக்கத்துக்கும் கார்ப்பரேட் கொள்ளைக்கும் எதிராகப் போராடும் உழைக்கும் மக்களையும் ஒடுக்கும் இந்துத்துவ போலீசு ராஜ்ஜியமாக குஜராத் மாற்றப்பட்டுள்ளதையே இப்புதிய கருப்புச் சட்டம் மீண்டும் நிரூபித்துக் காட்டுகிறது.

● கதிர்



மாட்டுக்கறி: பார்ப்பன மதவெறி
- புதிய கலாச்சாரம் வெளியீடு
ரூ.20.00
தொடர்புக்கு:
044 - 2371 8706
99411 75876, 97100 82506
vinavu.com

# “பகத் சிங், ஏகாதிபத்திய எதிர்ப்பு சோசலிசப் புரட்சியாளனே தவிர, தீவிர தேசியவாதி அல்ல!”

**ப**கத்சிங்கின் 84-வது நினைவு தினத்தையொட்டி சென்னைஐ.ஐ.டி. மாணவர்கள் ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்திய பேராசிரியர் சமன்லால் அவர்களிடம் எடுக்கப்பட்ட நேர்காணலைச் சுருக்கித் தருகிறோம். பேராசிரியர் சமன் லால் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் இந்திய மொழியியல் துறையில் 31 வருடங்கள் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இந்திய விடுதலை வரலாற்றில் புரட்சியாளர்களின் பங்கு திட்டமிட்டு மறைக்கப்படுவதற்கு எதிராக, புரட்சியாளர்களின் வரலாற்றை வெளிக்கொண்டுவருவதில் முக்கியப் பங்காற்றியவர். பகத்சிங்கை பற்றி 10-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவரது சமீபத்திய நூலாக ‘‘பகத்சிங்கைப் புரிந்துகொள்வது’’ வெளிவந்திருக்கிறது. பகத்சிங் குறித்த விழிப்புணர்வு பேருரைகள் நிகழ்த்துவது, முன்னணி நாளேடுகளில் கட்டுரைகள், விமர்சனங்கள் எழுதுவது என்று முனைப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

மறுகாலனியாக்கச் சுரண்டலும் அடிமைத்தனமும், சாதிவெறி, பார்ப்பன இந்து மதவெறி உள்ளிட்ட எல்லா வகையான பிற்போக்குத்தனங்களும் தலைவிரித்தாடும் இன்றைய சூழலில் பகத்சிங்கின் அரசியல் கண்ணோட்டத்தை விளக்குகிறார் சமன் லால்.

**★ ஏன் பகத்சிங்கை தங்களது ஆய்விற்கு தேர்ந்தெடுத்தீர்கள்? குறிப்பிட்ட காரணங்கள் ஏதேனும் உள்ளதா?**

*எனக்கு இருபது வயதாக இருக்கும் பொழுது மன்மதநாத் குப்தாவின்* They Lived Dangerously - Reminiscences of a Revolutionary *என்ற நூலை வாசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. மன்மதநாத் குப்தா இந்தியப் புரட்சியாளர்களுடன் விடுதலை போராட்டத்தில் பங்கெடுத்தவருள் முக்கியமானவர். 1925 ககோரி சம்பவத்தில் பங்கெடுத்த பொழுது அவர் சிறுவனாக இருந்தார். இச்சம்பவத்திற்குப் பின்னர் புரட்சிகர முன்னணியாளர்களான அஷ்பகுல்லா கான், ராம்பிரசாத் பிஸ்மில், ரோசன் சிங், ராஜேந்திர லஹிரி போன்றோர் தூக்கிலிடப்பட்டனர். மன்மதநாத்திற்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. சிறையில் இருந்து வெளிவந்த பின்னர் மன்மதநாத் குப்தா இந்தியா புரட்சியாளர்களின் வரலாற்றை மிகச் சிறப்பாக எழுதினார். நான் 1960-70 களில் ஹிந்தி பாக்கெட் புக் கிளப்பின் உறுப்பினராக இருந்த பொழுது, மன்மதநாத் குப்தாவின் ‘‘பாரத் கி கிராந்திகாரி’’யை வாசிக்க நேர்ந்தது. இப்புத்தகத்தில் இருந்து பல்வேறு புரட்சியாளர்களின் வரலாற்றை எனது தாய்மொழியான பஞ்சாபியில் மொழிபெயர்த்தேன். எனது மொழிபெயர்ப்பு பஞ்சாபின் பல்வேறு இதழ்களில் வெளிவந்தன. குறிப்பாக, கத்தர் பார்ட்டியின் ஜலந்தர் பகுதி இதழான ‘தேஷ்பகத் யாதான்’ இல் வெளிவந்தது. தேஷ்பகத் யாதானில் ஆரம்பகால மொழிபெயர்ப்புகளுடன் தான் பகத்சிங்கைப் பற்றிய எனது பணி தொடங்கியது.*

(குறிப்பு; தேஷ்பகத் யாதானின் ஆரம்பகால வெளியீடுகளை துரதிருஷ்ட வசமாக தான் தொலைத்துவிட்டதாகவும், ஜலந்தர் பகுதியிலேயே இதன் வெளியீடுகளை திரும்பப் பெறமுடியவில்லையெனவும் பேராசிரியர் குறிப்பிட்டார். 1970-களில் தேஷ்பகத் யாதான் நக்சல் எழுச்சியோடு தொடர்பு கொண்டிருந்ததன் காரணமாக ஆளும் வர்க்கம் இவ்விதழைத் தடைசெய்திருந்தது இதற்கான காரணங்களுள் ஒன்றாகும்).

**★ பகத்சிங்கைப் அக்காலத்தில் உள்ளவர்கள் பார்க்கிற பார்வைக்கும் தற்பொழுதைய தலைமுறைகள் பார்க்கிற பார்வைக்கும் மாறுபாடுகள் உள்ளதா?**

பகத் சிங் குறித்து பத்துக்கும் மேற்பட்ட ஆய்வு நூல்களை எழுதி இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பகத் சிங்கின் புரட்சிகர பாத்திரத்தை நிறுவிய பேராசிரியர் சமன் லால்.



*அன்றைய ஆளும் கட்சியான காங்கிரசின் பார்வை பகத்சிங் ஒரு தேசியவாதி; அதிலும் தீவிர தேசியவாதி என்பதாக இருந்தது. பகத்சிங்கின் புரட்சிகர சிந்தனைகளோ, மதங்களைப் பற்றிய நிலைப்பாடுகளோ ஒருபோதும் வெளியில் கொண்டுவரப்படவில்லை. குறிப்பாக, பள்ளிப்பாட புத்தகங்களிலும் பொதுவெளியிலும் பகத்சிங் ஒரு பிம்பமாக மட்டுமே முன்னிறுத்தப்பட்டார். இதன் காரணமாக பொதுமக்கள், பகத்சிங் ஒரு இலட்சியவாதி என்ற அளவில் மட்டுமே புரிந்து வைத்திருக்கின்றனர்.*

*பகத்சிங் ஒரு காத்திரமான எழுத்தாளர். அவர் கீர்த்தி இதழில் புனைபெயரில் எழுதியுள்ளார். கீர்த்தி, பஞ்சாபில் செயல்பட்ட இடதுசாரி பத்திரிகையாகும். பகத்சிங்கின் தேர்ந்த படைப்பான ‘‘நான் ஏன் நாத்திகன்?’’ போன்றவை இதில் வெளிவந்திருக்*

கின்றன. எனினும், தேசியவாதி என்ற பிம்பம் பகத்சிங்கின் இதர மதிப்பீடு களையும் கொள்கைகளையும் திட்ட மிட்டு மறைக்க பல்வேறு குழுக் களுக்குப் பயன்படுகிறது.

பஞ்சாபை விட பஞ்சாபுக்கு வெளியேதான் பகத்சிங் சரியான விதத்தில் இனங்கண்டுகொள்ளப் பட்டு புகழப்பட்டார். சான்றாக, தமிழ் நாட்டில் பெரியாரின் இயக்கம் பகத்சிங் பற்றிய புரிதலை மக்களுக்குக் கொண்டு சென்றதில் இதர மாநிலங் களைவிட முன்னோடியாக இருந்தது. ''நான் ஏன் நாத்திகன்?'' படைப்பு தமிழிலும், பகத்சிங் குறித்து குடியரசு இதழில் தலையங்கமும் வெளியிடப் பட்டன. ஆக, தமிழ்நாட்டையும் பஞ்சாபையும் ஒப்பிடுகிற பொழுது பஞ்சாபில் உணர்ச்சி ரீதியிலான பிம்பமே மேலோங்கியிருக்கிறது என்று கருதுகிறேன்.


காங்கிரசின் சரணடைவு, துரோகப் பாதைக்கு மாற்றாக, இந்திய விடுதலைக்குப் புரட்சிகரப் பாதையைக் காட்டிய தோழர் பகத்சிங்.

கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பொறுத்தவரை பகத்சிங்கின் பங் களிப்பைப் பெருமளவில் எடுத்துச் செல்லாதவர்கள் என்றே சொல்லலாம். பகத்சிங் ஒருபோதும் புரட்சியாளராக இவர்களால் முன்னிறுத்தப்பட்டதில்லை. இத்துணைக்கும் அஜய் கோஷ் போன்றவர்கள் பகத்சிங்குடன் உடனிருந்தவர்கள். இவர் களுக்குப் பகத்சிங்கைப் பற்றி நமக்கு தெரிந்ததைவிட அதிகம் தெரியும். இருப்பினும், பொதுமக் களிடம் பகத்சிங்கை எடுத்துச் செல் வதில் இவர்கள் பெரிய முனைப்பு காட்டவில்லை. பகத்சிங் ஏகாதிபத் தியத்தை எதிர்த்து சோசலிசத்திற் காகப் போராடிய புரட்சியாளன் என் பதை எடுத்துச் சென்றிருந்தால் பொதுமக்களிடம் பகத்சிங்கைப் பற்றிய விழிப்புணர்வு அதிகரித் திருக்கும். நக்சல்பாரி இயக்கமும் புரட்சியாளர்களும்தான் 1960-70 களில் பகத்சிங்கை சரியான முறை யில் மக்களிடம் எடுத்துச்சென்றனர்.

1980 வரையிலும்கூட பகத் சிங்கைக் குறித்த தொகுப்பான வெளியீடு என்று ஒன்றுகூட இல்லை. அதற்கு முன்பு சிறுசிறு வெளியீடுகள் பல்வேறு மொழி களில் வெளிவந்திருக்கின்றன. இதில் ''நான் ஏன் நாத்திகன்?'' தமிழில் வெளிவந்திருப்பினும் பிற மொழிகளில் மிகமிகக் காலம் தாழ்த்தியே வெளிக்கொண்டுவரப் பட்டன. இதில் சிவ் வர்மா, அஜய் கோஷ் போன்றவர்கள் பகத்சிங் குறித்து எழுதினாலும், பிபின்சந்திரா வின் ''நான் ஏன் நாத்திகன்?'' மொழி பெயர்ப்பு 1980-களில்தான் பல்கலைக் கழக, ஆராய்ச்சி மாணவர்களிடமும் அறிவுத்துறையினரிடமும் முன்வைக் கப்பட்டன. இதற்குப் பிறகுதான் பகத்சிங் மார்க்சிஸ்ட்டா? மதங்களைப் பற்றிய பார்வை என்ன? போன்ற தலைப்புகளில் விவாதமும் விமர்சனங் களும் தொடங்கப்பட்டன. 1970கள் வரை பகத்சிங்கை பற்றி யார் வேண்டு மானாலும் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம் என்ற நிலைதான் இருந்தது. குறிப்பாக இந்துத்துவ சக்திகள், பகத்சிங் ஆர்.எஸ்.எஸ்.க்கு நெருக்கமானவர் என்று பல கதைகளை சோடித்தனர்; இன்றும் சோடிக் கின்றனர்.

> பகத்சிங்
> ஏகாதிபத்தியத்தை எதிர்த்து சோசலிசத்திற்காகப் போராடிய புரட்சியாளன் என்பதை எடுத்துச் சென்றிருந்தால், பொதுமக்களிடம் பகத்சிங்கைப் பற்றிய விழிப்புணர்வு அதிகரித்திருக்கும். நக்சல்பாரி இயக்கமும் புரட்சியாளர்களும்தான் 1960-70களில் பகத்சிங்கை சரியான முறையில் மக்களிடம் எடுத்துச் சென்றனர்.

**★ இந்திய விடுதலைப் போராட்டத் திற்கு பகத்சிங் வழங்கிய அறிவுத்துறை பங்களிப்பு பற்றி..**

பகத்சிங் சிறையில் அடைக்கப்படுவதற்கு முன்புவரை, மக்களுக்கு பகத்சிங்கைப் பற்றி அவ்வளவாகத் தெரியாது. அதற்குமுன் மக்கள், இந்தியாவை பாரதமாதா என்று போற்றிக் கொண்டிருந்தனர். சேலை அணிவிக்கப்பட்ட பாரதமாதா சிலையெல்லாம் கூட இருந்தது. இத்தகைய சூழ்நிலையில் 18-12-1928 இல் சாண்டர்ஸ் கொல்லப்பட்ட பொழுது லாகூரின் சுவரெங்கும் ஒட்டப்பட்ட சிவப்புச்சுவரொட் டிகள் மக்களின் கவனத்தைப் பர வலாக ஈர்த்தன. பகத்சிங், நாட் டின் அடையாளமாகக் கருதப்பட் டார். வெள்ளையர்களின் பாராளு மன்றத்தில் குண்டு வீசப்பட்ட பிறகு, அதை விளக்கி வெளி யிடப்பட்ட ''செவிடர்களைக் கேட்க வைப்பதற்கு'' எனும் தலைப்பிலான பிரசுரம் மிகவும் பிரபலமான ஒன்று. அது ஏகாதி பத்தியத்திற்கு எதிராகப் போராட வேண்டும் என்ற உந்துதலை உரு வாக்கியது. வழக்கிற்காக பகத் சிங் நீதிமன்றத்திற்கு ஒவ்வொரு முறை வரும் பொழுதும் விண்ணதிரும் புரட்சிகர முழக் கங்கள் மக்களால் முன்வைக்கப் பட்டன. ஒவ்வொரு முறையும் பாட்டாளி வர்க்க சர்வதேசிய கீதம் பாடப்பட்டது.

நீதிமன்றத்தில் நிகழ்த்தப் பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க 06-06-1929 உரை பகத்சிங்கின்

பங்களிப்பிற்கு மிகச்சிறந்த எடுத்துக் காட்டு. இங்குதான் அவர் ''பாராளு மன்றதாக்குதல், தனிபட்ட நபர்மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல் அன்று; அது ஏகாதிபத்திய நிறுவனத்தின்மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதல்'' என்பதைத் தெளிவுபடுத்தினார். புரட்சி குறித்த கண்ணோட்டத்தையும், இந்திய விடுதலையையும் உரத்துக் கூறிய பகத்சிங்கின் வார்த்தைகள் மிக முக்கியமானவை.

ஆனால், பகத்சிங்கின் இத்தகைய பங்களிப்புகள் பொதுமக்கள் மத்தியில் இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கின்றன. பொதுவுடைமைக் கட்சிகள் (போலி கம்யூனிஸ்டுகள் - மொ-ர்) பகத்சிங்கின் இத்தகைய பங்களிப்பை அங்கீகரிக்கவும் இல்லை; மக்களிடம் எடுத்துச் செல்லவும் இல்லை. ஒருவேளை இவையெல்லாம் மக்களிடம் எடுத்துச் செல்லப்பட்டிருந்தால் மக்கள் மேலும் அரசியல்படுத்தப்பட்டிருப்பார்கள்.




பகத் சிங்கின் தேர்ந்த படைப்பான ''நான் நாத்திகன் - ஏன்?'' என்ற தமிழ் மொழி பெயர்ப்பு நூலின் முகப்பு அட்டை.

★ பகத்சிங்கின் பங்களிப்பு இருட்டடிப்பு செய்யப்பட்டிருப்பது திட்டமிடப்பட்டது என்று கருதுகிறீர்களா?

ஆம். இந்தியா என்றில்லை, எல்லா நாட்டு ஆளும் வர்க்கங்களுக்கும் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான கொள்கைகளைத்தான் விரும்புகின்றன. கல்வியமைப்பின் மூலமாக அவர்கள் இளைஞர்களை அடிமைகளாகக் கட்டுப்படுத்த விரும்புகிறார்கள். பாடப் புத்தகங்களில் பகத்சிங்கின் வாழ்வை உள்ளது உள்ளபடி சொன்னால் மக்கள் முன் அம்பலப்பட்டுபோவோம் என்பது ஆளும் வர்க்கங்களுக்கு நன்றாகவே தெரியும். அதேசமயம், அவர்களால் பகத்சிங்கின் புகழைத் தடுத்து நிறுத்த இயலாது. இதன் காரணமாகவே பகத்சிங்கை தேசியவாதி, வீரதீர மானவர் என்ற அளவுடன் நிறுத்திக் கொள்கின்றன. பகத்சிங்கின் கம்யூனிசக் கொள்கைகள் முழுவதுமாக இருட்டடிப்பு செய்யப்பட்டிருக்கின்றன.

★ பகத்சிங் எது போன்ற இந்தியாவை இலட்சியமாகக் கொண்டிருந்தார்?

இது மிகவும் தெளிவானது. சோவியத் யூனியன் போன்ற புரட்சிகர நாட்டை பகத்சிங் விரும்பினார் என்று கருதுகிறேன். பகத்சிங் 23 வயதிலேயே கொல்லப்பட்டார். அவர் வாழ்ந்த காலத்தில் தன் கண் முன்னே இருந்த தீர்வான 1917-இல் நடந்த புரட்சி போன்றதொரு சமூக மாற்றம் இந்தியாவிலும் வரவேண்டுமென்று விரும்பினார். பகத்சிங்கிற்கு லெனின் ஒரு வழிகாட்டியாகவும் ஆசானாகவும் இருந்தார். எனது எழுத்துக்களில் பகத்சிங் உயிரோடு இருந்திருந்தால் இந்தியாவின் லெனினாக வரக்கூடும் என்றே பலமுறை மதிப்பிட்டிருக்கிறேன். லெனின், மாவோ, ஹோசிமின், பிடல் காஸ்ட்ரோ, சே குவரா போன்று பகத்சிங்கும் ஒரு சிறந்த கம்யூனிச ஆளுமை ஆவார்.

★ சாதிக்குழுக்கள் கட்டபொம்மன் எங்கள் இனத்தைச் சேர்ந்தவர்; மருது சகோதரர்கள் எங்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்கிறார்கள். இதே போன்றதொரு நிலை பஞ்சாபிலும் நிலவுகிறதா?

ஆம். அடிப்படையில் இது மிகவும் இழிவான ஒன்று. இது பஞ்சாபிலும் நடைபெறுகிறது. சான்றாக உத்தம் சிங், பகத்சிங்கைப் பின்பற்றிய விடுதலைப் போராட்ட வீரர்களுள் ஒருவர். இவர் ஜெனரல் டயரைக் கொன்றதற்காக லண்டனில் கொல்லப்பட்டார். ஆனால், இவர் நினைவு கூரப்படுவது விடுதலைப் போராட்ட வீரர் என்ற அடிப்படையில் இல்லாமல், அவர் கம்போஜ் என்கிற உட்சாதிப் பிரிவின் நாயகனாக முன்வைக்கப்படுகிறார். மறுகாலனியாக்கக் கொள்கைகளால் இன்றைக்கு மக்கள் சகல துறைகளிலும் நலிவுற்று இருக்கின்றனர். இதில் இருந்து திசைதிருப்புவதற்கு, சாதி ரீதியான முன்னெடுப்புகள் ஆளும் வர்க்கங்களுக்கு மிகவும் அவசியமான ஒன்றாக இருக்கின்றது.

எங்கெல்லாம் முற்போக்கு இயக்கங்களின் தீவிரம் குறைவாக இருக்கிறதோ, அங்கெல்லாம் இதன் தாக்கம் அதிகம் இருக்கிறது

★ பி.ஜே.பி. அரசு பதவியேற்றவுடனேயே சமஸ்கிருத வாரம்

**பகத்சிங், தான் வாழ்ந்த காலத்தில் தன் கண் முன்னே இருந்த தீர்வான 1917-இல் நடந்த புரட்சி போன்றதொரு சமூக மாற்றம் இந்தியாவிலும் வர வேண்டுமென்று விரும்பினார். பகத்சிங்கிற்கு லெனின் ஒரு வழிகாட்டியாகவும் ஆசானாகவும் இருந்தார். எனது எழுத்துக்களில் பகத்சிங் உயிரோடு இருந்திருந்தால் இந்தியாவின் லெனினாக வரக்கூடும் என்றே பலமுறை மதிப்பிட்டிருக்கிறேன்.**

**கொண்டினார்கள். இந்து-இந்தி-இந்தியா எனும் கொள்கைகளை வேகமாகத் திணித்து வருகின்றனர். இதுபற்றிய தங்களது கருத்து என்ன?**

சமஸ்கிருதம் யாராலும் பேசப்படவில்லை. சமஸ்கிருதம் ஒரு வழக்காடு மொழியன்று. மாறாக, கிரேக்கமும் அரபும் இன்றளவும் வழக்காடு மொழிகளாக இருக்கின்றன. சீனம் மிகப் பழமையான மொழியாக இருப்பினும் இன்றளவும் வழக்காடு மொழியாக இருந்து வருகிறது. ஆனால் சமஸ்கிருதமோ பழமையான மொழி மட்டுமே. இன்னும் கடுமையாகச் சொல்வதானால், சமஸ்கிருதம் ஒரு செத்த மொழியாகும். இந்து வேதங்கள் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டிருந்தாலும் அது யாராலும் வாசிக்கப்படாத ஒன்றாகத்தான் இருக்கிறது. இதன் பொருட்டே சமஸ்கிருதம் திட்டமிட்டுத் திணிக்கப்பட்டு வருகின்றது. இதைத்தாண்டி சமஸ்கிருதத்தில் இருக்கிற ஒரே ஆரோக்கியமான விசயம் ஆயுர்வேதம் ஆகும். சமஸ்கிருதத்திற்கு செலவிடுவதற்குப் பதில் 100 செயல்பாட்டு மொழிகளின் மீது கவனம் செலுத்தினால், அது ஆக்கப்பூர்வமான ஒன்றாக இருக்கும்.

ஒப்பிட்டுப் பார்த்தால் ஓர் உண்மை தெரியும். நம் நாட்டில் ஏழைகளின் மொழிக்கு அரசு எந்தவித மரியாதையையும் தருவதில்லை. பணக்காரர்கள் அல்லது குறிப்பிட்ட குழுக்களின் மொழிக்கு மட்டுமே கவனம் செலுத்தப்படுகிறது. இந்த வகையில் பார்ப்பனியமே கோலோச்சி வருகிறது. பார்ப்பனமயமாதல் சமஸ்கிருதத்தின் மூலமாக முன்நகர்த்திக் கொண்டு செல்லப்படுகிறது. சமஸ்கிருதம் உண்மையில் ஓர் ஒட்டுண்ணியாகும். பிற மொழிகளுடன் ஒப்பிடும் பொழுது அது ஒட்டுண்ணியாகத்தான் இருக்கிறது. ஒட்டுண்ணிகள் எதைச் சார்ந்து வாழ்கிறதோ அவ்வுயிரிகளிடமிருந்தே சத்துக்களை உறிஞ்சிக் கொள்வதைப்போல சமஸ்கிருதமும் பிற மொழிகளை உறிஞ்சி ஒட்டுண்ணியாக இருந்திருக்கிறது. அது பல இந்திய மொழிகளைத் தின்று செரித்திருக்கிறது. தத்துவார்த்த ரீதியாக பார்ப்பனியமும் சமஸ்கிருதத்தைப் போன்றே ஒட்டுண்ணியாகும். மற்ற இந்திய மொழிகளைப் பாதுகாக்க வேண்டுமெனில், இந்த ஒட்டுண்ணிகள் களையப்பட வேண்டும்.

**★ தீண்டாமை மற்றும் சாதியைப் பற்றி பகத்சிங் கொண்டிருந்த கண்ணோட்டம் என்னவாக இருந்தது?**

பகத்சிங், தன்னுடைய கட்டுரைகளில் தீண்டாமை மற்றும் சாதியைப் பற்றி எள்ளி நகையாடவே செய்வார். குறிப்பாக, ''மேல்சாதிக்காரருடைய வீட்டின் அடுப்பங்கரைக்குள் நாய் நுழைய முடியும்; ஆனால் மனிதர்கள் போகமுடியாது'' எனக் கூறுகிறார். தாழ்த்தப்பட்டோரின் ஒடுக்குமுறைக்கெதிராக பேசும் போது ''ஓ, ஒடுக்கப்பட்டவர்களே! நீங்கள் சிங்கம் போன்றவர்கள்! விழித்தெழுங்கள்! உங்கள் உரிமைகளை நீங்களே பறித்துக் கொள்ளுங்கள்'' என்கிறார். மேலும் புரட்சியின் மூலமே சாதியை ஒழிக்க முடியும் என்பது பகத்சிங்கின் எண்ணம்.



பகத் சிங்கைத் தமது ஆளாகக் காட்ட முயலும் இந்து மதவெறிக் கும்பல்: பகத் சிங், ராஜகுரு, சுகதேவ் ஆகியோரின் நினைவுநாளையொட்டி, பஞ்சாபிலுள்ள ஹுசைனிவாலா கிராமத்தில் அமைந்துள்ள தேசிய தியாகிகள் நினைவிடத்தில் உரையாற்றும் ஏகாதிபத்திய விசுவாசி நரேந்திர மோடி.

(குறிப்பு: 1926 அல்லது 1928-இல் பிக்ரிதி பத்திரிகையில் ''தீண்டாமை பற்றி'' என்ற கட்டுரையை பகத்சிங் எழுதியுள்ளார். சாதி பற்றிய தன்னுடைய கட்டுரை ஒன்றில் அன்றைய காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும், மோடி அரசால் பாரத ரத்னா வழங்கி கவுரவிக்கப் பட்டிருப்பவருமான, இந்துத்துவ பாசிஸ்டுகளின் வழிகாட்டி, மதன் மோகன் மாளவியா தீண்டாமை குறித்து இரட்டை வேடம் போடுவதை அம்பலப்படுத்தியிருக்கிறார்.)

**★ இன்றைய நிலையில் இந்திய இளைஞர்களுக்கு பகத்சிங்கின் போராட்டமும் கொள்கைகளும் எந்தளவு பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறீர்கள்?**

உரிமைகளுக்காகப் பிச்சையெடுக்க வேண்டும் என்பதை பகத்சிங் ஒருபோதும் கோரியதில்லை. எந்த வழிமுறைகளானாலும் மக்களின் உரிமைகள் காக்கப்பட வேண்டும். அது இல்லாதபொழுது பகத்சிங் கூறியபடி உரிமைகளைப் பறித்துக் கொள்வதுதான் நம் வழிமுறையாக இருக்க முடியும்.

நாம் சிறுவயதில் இருந்தே தொடர்ச்சியாக இரண்டு பெயர்களைக் கேட்டு வருகிறோம். அது டாட்டா மற்றும் பிர்லா ஆகும். இதுதவிர, இருபது பெரிய குடும்பங்களைப் பற்றி அறிவோம். ஆனால் தற்பொழுதோ புதுப்புது பெயர்களை அறிகிறோம். அதானி, அம்பானி என்று நூற்றுக்கணக்கான புதுப்புது அதானிகளும் அம்பானிகளும் வந்துள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்ட பில்லினியர்கள் இந்தியாவில் இருப்பதாகத் தம்பட்டம் அடித்துக் கொள்கிற தேசத்தில்தான், இரண்டு லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்திருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது? இந்த ஆளும் அமைப்பு முற்றிலும் தோற்றுவிட்டதைக் காட்டுகிறது.

மக்கள் இந்த அமைப்பிற்கு எதிராகப் போராட வேண்டும். அப்படி போராடுவது இந்த அமைப்பை நொறுக்கி புதிய அமைப்பைக் கட்டமைப்பதற்குத்தானே தவிர, இந்த அமைப்பைச் சீர்திருத்துவதற்கல்ல.

– நேர்காணல்: அழகு

# அரசு:

1

# அனைவருக்கும் பொதுவானதோ, ஜனநாயகமானதோ அல்ல!

மறுகாலனியாக்கத்தின் விளைவாக அரசுக் கட்டமைப்பு, அரசாங்கம், அவற்றின் அதிகாரங்கள், தேர்தல் அரசியல் ஆகியவற்றில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் குறித்தும், அரசியலிலிருந்து மக்கள் மென்மேலும் விலக்கி வைக்கப்பட்டு அரசியலற்றவர்கள் ஆக்கப்படுவது குறித்தும் இந்த நீண்ட கட்டுரை விளக்குகிறது. ஓரளவு அரசியல் தெரிந்தவர்கள், அக்கறை உள்ளவர்கள் இதைப் படித்து புரிந்து கொள்ள முடியும் என நம்புகிறோம். இந்திய ஜனநாயகம் போலி ஜனநாயகமாக மட்டுமல்ல, ஒரு பாசிச அரசாகவும் மாறிவருகிறது என்பதை இந்தக் கட்டுரை தரவுகளோடும், ஆய்வுகளோடும் நிறுவுகிறது.

முதலாளிகளே அரசியல்வாதிகளாகவும், அரசியல்வாதிகளே முதலாளிகளாகவும் மாறும் நிலையில், கார்ப்பரேட் கொள்ளையர்களே அரசு, அரசாங்கம் இரண்டையும் தீர்மானிக்கும் நிலையிலும், இந்தியாவின் விதி ஏகாதிபத்தியங்களால் எழுதப்படும் நிலையில் ஒட்டுமொத்தமாக இன்று நாடு இருக்கும் நிலையில் அதை மாற்றும் கடமையும் நமக்கிருக்கிறது. இதன் பொருட்டு அரசியல் ரீதியில் நாம் செயல்படவேண்டிய கடமையையும் இத்தொடர் கட்டுரை கோருகிறது.

பொதுவாக, அரசியலற்ற பொதுமக்கள் மட்டுமல்ல, வர்க்கப் பார்வையற்ற அரசியல் நோக்கர்களேகூட அரசு என்பது அனைத்து மக்களுக்கும் பொதுவானதென்றும் ஜனநாயகபூர்வமானதென்றும் நம்புகிறார்கள். நமது நாட்டில் தனியார்மயம், தாராளமயம், உலகமயம், மறுகாலனியக் கொள்கைகள் புகுத்தப்பட்டதோடு சேர்த்து, அவற்றுக்கேற்ப அரசின் பாத்திரமே மாற்றியமைக்கப்பட்டுள்ளது. அது, உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்குவதற்கான ஒரு எந்திரம், ஒரு வன்முறைக் கருவி என்ற அதன் பாத்திரம் மேலும் மேலும் ஆக்டோபஸ் தன்மை கொண்டதாக்கப்பட்டு இறுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகத் தெரிகிறது. சொல்லப்படுகின்ற போலி ஜனநாயகத்தில் வழங்கப்பட்டுள்ள ஒரு சில சிவில், ஜனநாயக உரிமைகள்கூட வெட்டிச் சுருக்கப்படுகின்றன. ஊர்வலங்கள், பேரணிகள், மாநாடுகள், பொதுக்கூட்டம், ஆர்ப்பாட்டம், தெருமுனைக் கூட்டங்கள் நடத்தும் இடங்கள், மக்கள் கூடாத ஒதுக்குப்புறமான இடங்களாக வரையறுக்கப்படுகின்றன. பத்து மணிக்கு மேல் கூட்டங்கள் நடத்தப்படக் கூடாது, சுவரொட்டிகள் ஒட்டத்தடை, தொழிற்சங்க உரிமைகள் பறிக்கப்படுவது - என இதற்கு எடுத்துக்காட்டுகள் ஏராளமாக உள்ளன. இதற்கேற்ப சட்டங்களும் கடுமையாக்கப்பட்டுள்ளன. படிப்படியாக ஒரு போலீசு அரசாக, பாசிசத்தன்மை கொண்டதாக அரசு மாற்றப்பட்டு வருகின்றது.

### மக்களின் வாழ்வாதாரங்களைப் பிடுங்கி கார்ப்பரேட் முதலாளிகளிடம் ஒப்படைக்கும் தரகனாக அரசு

இரண்டாவதாக, விவசாயிகள், விவசாயம் சார்ந்த துணைத் தொழில் செய்பவர்கள், விசைத்தறி, சிறு பட்டறைகள் உட்பட சிறு தொழில் நடத்துபவர்கள், சிறு வணிகர்கள் ஆகியோரிடமிருந்து அவர்களது உற்பத்தி சாதனங்களையும் வாழ்வாதாரங்களையும் பறித்தெடுத்துக் கொண்டு (பலாத்காரமாகவோ, நிர்ப்பந்தங்கள் மூலமாகவோ, பணத்தைக் கொடுத்தோ) அவர்களைக் கூலி உழைப்பை மட்டும் நம்பி வாழும் ஏதுமற்றோராக நகர்ப்புறங்களைக் நோக்கி வீசியடிக்கும் ஒரு போக்கை அரசு அமல்படுத்தி வருகின்றது.

சட்டிஸ்கர், ஜார்கண்ட் போன்ற மிகவும் பின்தங்கிய மாநிலங்கள் முதல் பஞ்சாப், மகாராட்டிரா, குஜராத், தமிழ்நாடு போன்று வளர்ந்த மாநிலங்கள் வரை, இந்தியா முழுமையும் நடக்கும் இந்த நிகழ்ச்சிப்போக்கின் விளைவாக இந்தியா முழுமைக்கும் மக்கள் வேலைதேடிச் செல்வது அதிகரித்து

ஆஸ்திரேலியாவின் குவீன்ஸ்லாந்து பகுதியில் அமைந்துள்ள நிலக்கரிச் சுரங்கத்தைத் தனக்கு நெருக்கமான தரகு முதலாளி அதானிக்கு வாங்கிக் கொடுப்பதற்காக ஆஸ்திரேலிய பிரதமர் மற்றும் அதிகாரிகளோடு பேச்சுவார்த்தை நடத்தும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி. (கோப்புப் படம்)



வருகின்றது. வேலைதேடி வெளி நாடுகளுக்கு செல்வதும் அதிகரித்து வருகின்றது. ஐரோப்பாவில் நடந்த புராதன திரட்சியை ஒத்த இந்த நிகழ்ச்சிப்போக்கின் விளைவாக, பருத்துக் கொழுத்த பன்னாட்டுக்கம்பெனிகளும், தரகு அதிகார வர்க்க முதலாளிகளும், வீடு, வீட்டுமனைத் தொழில் அதிபர்களும் பறித்தெடுத்துக் கொள்கிறார்கள். அவர்கள் மக்களிடமிருந்து உற்பத்திச் சாதனங்கள் மற்றும் வாழ்வாதாரங்களை அப்படியே அள்ளிச் சுருட்டிக் கொள்கிறார்கள். அவர்கள் விவசாயம் மற்றும் எல்லாத் தொழில்களையும் தங்களது ஏகபோக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து கொண்டிருக்கின்றனர். இதற்கான அடியாட்படையாக, ஆலோசகராக, தாதிப்பெண்ணாக, புரோக்கராக, வேலைக்காரனாக, கருவியாக அரசு மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.



முப்போகமும் விளையக்கூடிய செழிப்பான விளைநிலங்களை கார்ப்பரேட் நிறுவனங்களுக்குப் பிடுங்கிக் கொடுக்கும் நோக்கோடு மோடி அரசு கொண்டுவந்திருக்கும் நிலம் கையகப்படுத்தும் அவசரச் சட்டத்தை எதிர்த்து விவசாயிகளும் எதிர்க்கட்சிகளும் இணைந்து டெல்லியில் நடத்திய ஆர்ப்பாட்டம்.

மேலும், இவ்வாறு விவசாயிகள் மற்றும் சிறு தொழிலதிபர்கள், வணிகர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உற்பத்திச் சாதனங்களைப் பன்னாட்டுக்கம்பெனிகளுக்கும், தரகு அதிகார வர்க்க முதலாளிகளுக்கும் வாங்கித்தரும் புரோக்கராக அரசு நிறுவனங்கள் செயல்படுகின்றன. விவசாய நிலங்கள், புறம்போக்கு நிலங்களை வாங்குவதற்கு கிராம நிர்வாக அலுவலர் (வி.ஏ.ஓ.), வருவாய் ஆய்வாளர் (ஆர்.ஐ), வட்டாட்சியர், நில அளவை ஊழியர்கள், சொத்துப் பத்திரப் பதிவு அலுவலர்கள், ஓட்டுக் கட்சி பிரமுகர்கள், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் ஆகியோர் கூட்டணி அமைத்துக் கொண்டு செயல்படுகின்றனர். அரசே இதை ஊக்குவிக்கிறது.

உணவு தானிய உற்பத்தி, பூ, பழம், காய்கறிகள் ஆகியவற்றின் உற்பத்தி, கொள்முதல், வினியோகம், விற்பனை, பதப்படுத்தப்பட்ட உணவு வகைகளைத் தயாரித்தல், விற்றல் ஆகிய தொழில்களில் ஈடுபடவும் இவற்றிற்காக கொள்முதல் நிலையங்கள், குளிரூட்டப்பட்ட கிடங்குகள் கட்டிக் கொள்ளவும், முன்பேர வர்த்தகத்தில் ஈடுபடவும் பன்னாட்டுக் கம்பெனிகளுக்கும் தரகு அதிகார நிறுவனங்களுக்கும் அரசு தாராள அனுமதி அளித்துள்ளது.

இவர்களின் சேவைக்காக, விவசாயப் பல்கலைக்கழகங்கள், விவசாய ஆராய்ச்சிக்கான இந்திய கவுன்சில் (ICAR), வேளாண் அமைச்சகங்கள், வேளாண் விரிவாக்க அலுவலகங்கள், பல்துறை வல்லுனர் குழுக்கள் ஆகியவை பணிக்கப்பட்டுள்ளன. இவையனைத்தையும் இயக்க பன்னாட்டு மற்றும் தரகு அதிகார வர்க்க முதலாளித்துவக் கம்பெனிகளின் தலைமை நிர்வாகிகள், அரசு அதிகாரிகள், வல்லுனர்கள், அமெரிக்க - பன்னாட்டு வேளாண் உணவுக் கழக நிறுவனத் தலைவர்கள் கொண்ட உயர் மட்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு ஒவ்வொரு துறையிலும் இந்த முறையில் அரசின் பல்வேறு நிறுவனங்கள், அவர்களின் நோக்கங்கள், திட்டங்கள், பணிகள் ஆகியவை மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

### மறுகாலனியாக்க சுரண்டலின் நேரடி அடியாளாக அரசு

மூன்றாவதாக, ஐரோப்பிய புராதனத் திரட்சியை ஒத்ததொரு நிகழ்ச்சிப் போக்கின் விளைவாக, நகர்ப்புறங்களை நோக்கி விசிறியடிக்கப்படும் கோடிக்கணக்கான உழைப்பாளி மக்கள் பெரும் ரிசர்வ் பட்டாளமாகத் திரண்டு நிற்கின்றனர். இதைப் பயன்படுத்தி அவர்களை மிகக் குறைந்த கூலிக்கு (ஒரு கட்டிடத் தொழிலாளியோ அல்லது வேறு ஒரு தொழிலாளியோ தினக்கூலியாக ரூ.200, 300 கூட பெறலாம். ஆனால் அவர்களின் உழைப்பைச் சுரண்டி முதலாளிகள் அடைகின்ற இலாப விகிதத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போதும், கல்வி, மருத்துவம், இருப்பிடம் போன்ற அடிப்படைத் தேவைகளுக்கு உழைப்பாளி மக்கள் செலவிடும் தொகை அதிகரித்துக் கொண்டே போவதோடும் சேர்த்துப் பார்க்கும் போதும்தான் இது மிகக் குறைந்த கூலி என்பது தெளிவாகப் புலப்படும்) அன்றாடக் கூலிகளாகவும் ஒப்பந்தத் தொழிலாளர்களாகவும் வேலைக்கமர்த்தி 12 மணிநேரம் 14 மணிநேரம், இரண்டு ஷிப்டுகளை தொடர்ந்தாற்போல் செய்ய வைப்பது, எந்த உரிமையும் இன்றி கொத்தடிமைகள் போல நடத்துவது - என ஒட்டச் சுரண்டிக் கொழுக்கின்றனர், பன்னாட்டுக் கம்பெனி முதலாளிகளும் தரகு அதிகார வர்க்க முதலாளிகளும்.

சாதாரண தொழிலாளர்கள், அரைத்திறனாளி தொழிலாளர்கள் மட்டுமல்ல; தகவல் தொழில் நுட்பம் மற்றும் பிற பொறியியல் துறைகளில் பணியமர்த்தப்படும் பொறியாளர்கள், கணினி வல்லுனர்கள் வரை அனைவரும் இந்த வகையான தற்காலிக ஒப்பந்தப் பணியாளர்களாக கொடுமையான கொத்தடிமைச் சுரண்டலுக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளனர். தொழிற்சங்கம் அமைப்பது என்ற பேச்செடுத்தாலே

வேலையை விட்டு தூக்கியெறியப்படுகின்றனர். வெள்ளைக் காலர் தொழிலாளர்கள், வல்லுனர்கள் என்றழைக்கப்பட்ட இவர்கள்கூட இன்று வெள்ளை அடிமைகளாக ஆக்கப்பட்டுள்ளனர். இதற்கான அடியாளாக அரசு மாற்றப்பட்டிருக்கிறது.

மேலும், மத்திய-மாநில அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், பேராசிரியர்கள், பொதுத்துறை நிறுவனங்களின் தொழிலாளர்கள், ஊழியர்கள், அதிகாரிகளின் ஊதியத்தை திட்டமிட்டே சில மடங்குகள் அதிகமாக கொடுப்பது; அதையும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போவது; இதன் மூலம் பன்னாட்டுக் கம்பெனிகள், தரகு அதிகார வர்க்க முதலாளிகள் உற்பத்தி செய்யும் நுகர்பொருட்கள், வழங்கும் சேவைகள் ஆகியவற்றிற்கும் வீடு-மனை கட்டல், வாங்கல், விற்றல் அதிபர்களின் தொழிலுக்கும் தொடர்ந்து கிராக்கியை அதிகரித்து அவர்கள் கொள்ளை இலாபம் அடித்து கொழுக்க வைக்கும் கருவியாக அரசின் செயல்பாடு மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இதன் இன்னொரு பக்கம், பல்வேறு நிதி நிறுவனங்கள் தொடங்கவும் அவை தாராள முதலீடு திரட்டவும், அன்னிய முதலீடுகளை அதிகரித்தும், மேலே சொன்ன பிரிவினர்கள் நுகர்பொருட்கள், வீடுகள், மனைகள் வாங்குவதற்கும் கல்வி, மருத்துவத்திற்கும் ஏராளமான கடன்கள் வழங்கவும், அதற்கேற்ப மத்திய ரிசர்வ் வங்கி மூலம் வட்டியைக் குறைத்தும் ஏற்பாடுகள் செய்து தரும் புரோக்கராக அரசு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வட்டியில்லா கடன், குறைந்த வட்டியிலான கடன், சுலபத் தவணைகள் என்றெல்லாம் தனது முகவர்களை இந்த நிதி நிறுவனங்களும் பிறரும் அனுப்பி, இவர்களைப் பேசி மயக்கி கடன்காரர்கள் ஆக்குகிறார்கள். கடன் அட்டை வசதியும் இதற்கான சாதனமாக வினியோகிக்கப்படுகின்றது; தவணை கட்டத் தவறினால் அடியாட்களை விட்டு வசூலிக்கவும் சொல்கிறார்கள்; இவ்வாறு அரசாங்கத்தின் பணத்தை, மொத்த மக்களின் நிதியை நிதி நிறுவனங்கள் சுற்றுவழியில் சுருட்ட அரசாங்கமே ஒரு சாதனமாக மாற்றப்பட்டுள்ளது.

> விவசாய நிலங்கள், புறம்போக்கு நிலங்களை வாங்குவதற்கு கிராம நிர்வாக அலுவலர் (வி.ஏ.ஓ.), வருவாய் ஆய்வாளர் (ஆர்.ஐ.), வட்டாட்சியர், நில அளவை ஊழியர்கள், சொத்துப் பத்திரப் பதிவு அலுவலர்கள், ஓட்டுக்கட்சி பிரமுகர்கள், எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் ஆகியோர் கூட்டணி அமைத்துக் கொண்டு செயல்படுகின்றனர். அரசே இதை ஊக்குவிக்கிறது.

### கார்ப்பரேட் பகற்கொள்ளைக்கான கருவியாக அரசு

**நான்காவதாக,** அரசின் கையில் போதிய நிதியில்லை; புதிய முதலீடுகள் செய்ய நிதிப் பற்றாக்குறை உள்ளது என்ற முகாந்திரத்திலும், ‘பொதுத்துறை நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குகின்றன; புதிய தொழில் நுட்பங்கள் புகுத்தப்பட்டு தொழில்துறை நவீனமாக்கப்பட வேண்டியுள்ளது’ என்ற முகாந்திரத்திலும் கல்வி, மருத்துவம் போன்ற பல சேவைத்துறைகளிலும், பல உற்பத்தி துறைகளிலும் பருத்துக் கொழுத்த பன்னாட்டுக் கம்பெனிகளும் தரகு அதிகார வர்க்க முதலாளிகளும் புகுந்து கொள்ளை இலாபம் ஈட்ட தாராளமாக அனுமதிக்கப்படுகின்றன; பொதுத்துறை நிறுவனங்கள் அடிமாட்டு விலைக்கு அவர்களுக்கு விற்கப்படுகின்றன.

இலாபத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்கள் பல ஆண்டுகளாக பாடுபட்டு உருவாக்கி வைத்திருக்கும் அடிப்படைக் கட்டுமானங்கள், சாதனங்கள், பிற வசதிகளை தனியார்துறையினர் பயன்படுத்தவும், அந்தப் பொதுத்துறை நிறுவனங்களுக்கே போட்டியாக செயல்படவும், காலப்போக்கில் இந்த பொதுத்துறை நிறுவனங்களை ‘நட்டத்தில்’ இயங்கும் நிறுவனங்களாகவும் தனியார்துறையை விட மட்டமான சேவை வழங்கும் நிறுவனங்களாகவும் (எடுத்துக்காட்டாக பி.எஸ்.என்.எல்) மாற்றுவதையும் அரசே திட்டமிட்டு செய்கிறது. பின்னர், அந்தத் துறையையே

கார்ப்பரேட் நிறுவனங்கள் எவ்விதத் தடையும், எதிர்ப்பும் இன்றி இயற்கை வளங்களைக் கொள்ளையடிப்பதற்காகத் தமது வாழ்விடங்களிலிருந்து துரத்தப்பட்டு உள்நாட்டு அகதிகளாக ஆக்கப்பட்டுள்ள சத்தீஸ்கர் மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடியின மக்கள். (கோப்புப் படம்)



கைகழுவுவதையும் செய்கிறது. உயிர் காக்கும் மருந்துகள்தயாரிக்கின்ற, கோடிக் கணக்கான மக்களுக்கு நோய் வராமல் தடுக்கும்தடுப்பூசி மருந்துகள்தயாரிக்கும் நிறுவனங்களையும் தென்கிழக்கு ஆசியா விலேயே அரசுத்துறையில் சிறந்து விளங் கும் இந்துஸ்தான் போட்டோ பிலிம் போன்ற நிறுவனங்களையும் கூட இந்த முறையில் தனியாருக்குத்தாரைவார்க்கும் தயாளனாக அரசு மாற்றப்பட்டுள்ளது.




**வரிஏய்ப்பு மூலம் கார்ப்பரேட் முதலாளிகள் கருப்புப் பணமாக ஒரு நாளைக்கு 240 கோடி ரூபாய்களை வெளிநாடுகளுக்குக் கடத்தி வருகிறார்கள். இவ்வாறு பல ஆண்டுகளாக எடுத்துச் செல்லப்பட்டு அயல்நாட்டு வங்கிகளில் இரகசிய கணக்குகளில் வைக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தின் மதிப்பு ரூ.2 இலட்சம் கோடிகளுக்கு மேல்!**

தங்களிடம் நிதியில்லை, மூலதனம் இல்லை என்று சொல்லும் அரசே, இன்னொரு பக்கம், கார்ப்பரேட் பெரும் முதலாளிகள் (பருத்து கொழுத்த பன்னாட்டு முதலாளிகள் மற்றும் தரகு அதிகார வர்க்க முதலாளிகள்) தொழில் தொடங்க குறைந்த விலையில் விளைநிலங்களை வாங்கிக் கொடுப்பது, அரசு நிலங்களை அடிமாட்டு விலைக்கு விற்பது அல்லது நீண்டகால வாடகைக்கு விடுவது, மின்சாரம், தண்ணீர் போன்ற சேவைகளைக் குறைந்த விலையில் வழங்குவது, மானியங்கள், வரிச்சலுகைகள் அளிப்பது என்று அரசு நிதியை-நமது பணத்தை வாரிவாரி அவர்களுக்கு வழங்கிக் கொண்டுள்ளது. 2006-ஆம் ஆண்டிலிருந்து 2011-ஆம் ஆண்டு வரை இவ்வாறு மத்திய அரசு வழங்கிய வரிச்சலுகைகள் மட்டும் ரூ.22 இலட்சம் கோடிகளுக்கு மேல்! அதாவது, ஒரு நாளைக்கு 240 கோடி ரூபாய்களை தூக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இன்னொரு பக்கம் கார்ப்பரேட் முதலாளிகள் வரி ஏய்ப்பு செய்வதற்கும், அந்தப் பணத்தை வெளிநாடுகளுக்கு கள்ளத்தனமான வழிகளில் கொண்டு செல்வதற்கும் பல வசதி, வாய்ப்புகளை அரசு செய்து கொடுத்துள்ளது. எடுத்துக்காட்டாக, மொரிசியஸ் நாட்டிலும் இந்தியாவிலும் பதிவு செய்யப்பட்ட கம்பெனிகளுக்கு இரட்டை வரியிலிருந்து சலுகை என்ற பெயரில் பணத்தை வெளியே கொண்டு செல்ல அனுமதிப்பது; ஏற்றுமதி, இறக்குமதி விதிகளில் சலுகை போன்ற வழிமுறைகள் மூலம் அனுமதிப்பது; இவ்வாறு வரிஏய்ப்பு மூலம் கார்ப்பரேட் முதலாளிகள் கருப்புப் பணமாக ஒரு நாளைக்கு 240 கோடி ரூபாய்களை வெளிநாடுகளுக்குக் கடத்தி வருகிறார்கள். இவ்வாறு பல ஆண்டுகளாக எடுத்துச் செல்லப்பட்டு அயல்நாட்டு வங்கிகளில் இரகசிய கணக்குகளில் வைக்கப்பட்டுள்ள கருப்புப் பணத்தின் அளவு ரூ.2 இலட்சம் கோடிகளுக்கு மேல்! இது அரசு தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்ட விபரம்; உண்மை நிலைமை இதைவிட அதிகமாக இருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

அரசு வங்கிகளிடமிருந்து கார்ப்பரேட் முதலாளிகளுக்குக் குறைந்த வட்டியில் கடன் வழங்குவதும், வாங்கிய கடனில் ஒரு பெரும்பகுதியை முதலாளிகள் திட்டமிட்டே கட்டாமலிருப்பதும், வாராக் கடன் என்ற பெயரில் இவற்றை அரசாங்கம் கொள்கை முடிவெடுத்து தள்ளுபடி செய்வதும் நடந்து வருகின்றது. இவ்வாறு பல இலட்சம் கோடி ரூபாய்கள் கார்ப்பரேட் முதலாளிகளுக்கு அள்ளிக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இவையெல்லாம் கொள்கை முடிவெடுத்து, பொருத்தமான சட்டத்திருத்தங்கள் செய்து பகிரங்கமாக, முறையான வழிகளிலேயே அரசாங்கம் செய்து கொடுக்கின்றது. அப்படிப்பட்டதாகவே மத்திய-மாநில அரசுகளின் செயல்பாடுகள், இயங்குமுறைகள் மாற்றப்பட்டுள்ளன.

இவை மட்டுமின்றி, நாட்டின் இயற்கை வளங்கள் எல்லாம் மிகக் குறைந்த விலைக்கு கார்ப்பரேட் முதலாளிகளுக்குதாரை வார்க்கப்படுகின்றது. இரும்புத்தாது, எண்ணெய் வயல்கள், பாக்சைட், தண்ணீர், மணல், நிலம், காட்டுவளம், கடல்வளம், அலைக்கற்றை - என ஐந்து வகை இயற்கை வளங்களும் மிகக் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. மத்திய-மாநில அரசுகள் போட்டி போட்டுக் கொண்டு, கொள்கை முடிவெடுத்து, சட்டமன்றங்கள், நாடாளுமன்றம், அமைச்சரவைகளுக்குத் தெரியாமலேயே இரகசிய புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு அதனடிப்படையில் வாரிவாரி வழங்கப்படுகின்றன. இவ்வாறு கார்ப்பரேட் முதலாளிகள் நாட்டின் இயற்கை வளங்களைப் பகற்கொள்ளையடிப்பதற்கான கருவியாக அரசு மாற்றப்பட்டுள்ளது.

(தொடரும்)

# மேக்கேதாட்டு அணை:

# மீண்டும் அநீதி!

**கர்நாடகா அரசு காவிரி நதி நீரைப் பங்கிட்டுக் கொள்வதில் சட்டங்களையும் தீர்ப்புகளையும் மதிக்காமல் அடாவடித்தனமாக நடந்துகொள்ளும்போது, தமிழக விவசாயிகள் மட்டும் சட்டத்திற்கு உட்பட்டு ஏன் போராட வேண்டும்?**

**கா**விரி நதிநீர் தீர்ப்பாயத்தின் முடிவைத் தொடர்ந்து செயல்படுத்த மறுத்துவரும் கர்நாடக அரசு, இப்போது காவிரியின் குறுக்கே மேக்கேதாட்டு மற்றும் இராசிமணல் ஆகிய இடங்களில் புதிதாக அணைகள் கட்டத் தீர்மானித்துள்ளது. இவ்விரு அணைகளும் கட்டப்பட்டுவிட்டால், மேட்டூருக்கு ஒரு சொட்டுத் தண்ணீர்கூட கிடைக்காமல், விவசாயம் அழிந்து தமிழகம் பாலைவனமாக மாறிப் போகும் அபாயம் ஏற்படும்.

கடந்த நவம்பர் 2014-இல் கர்நாடக நீர்வளத் துறை அமைச்சரான எம்.பி.பாட்டீல் பெங்களூரு மக்களின் குடிநீர்த் தேவைக்காகவும், பெங்களூரு புறநகர மக்களின் மின்சாரத்திற்காகவும், கரும்பு விவசாயத்தை விரிவுபடுத்துவதற்காகவும் தமிழக எல்லையிலிருந்து ஏறத்தாழ 3 கி.மீ. தொலைவிலுள்ள மேக்கேதாட்டு (ஆடு தாண்டும் காவேரி) என்ற இடத்திலும், மைசூரின் சுற்று வட்டாரப் பகுதியிலும் அணைகள் கட்ட இருப்பதாக அறிவித்தார். மேக்கேதாட்டு அணையானது, கிருஷ்ணராஜசாகர் அணைக்கு நிகரான கொள்ளளவைக் கொண்டதாக இருக்கும் என்றும், சுமார் 2,500 ஏக்கர் வனப்பகுதியில் அமைக்கப்படவுள்ள இந்த அணையானது சமநிலை நீர்த்தேக்கமாக இருக்கும் என்றும் அவர் அறிவித்துள்ளார். இது தவிர இராசிமணல் பகுதியிலும் கர்நாடக அரசு ஒரு அணை கட்டத் திட்டமிட்டு களப்பணிகளையும் தொடங்கியுள்ளது. காவிரியின் குறுக்கே புதிய அணைகள் கட்டுவதற்காக கர்நாடக அரசு உலக அளவில் ஒப்பந்தப் புள்ளிகளைக் கேட்டு அவற்றில் மூன்று நிறுவனங்களைத் தெரிவு செய்துள்ளதாகவும் செய்திகள் வந்துள்ளன.

ஏற்கெனவே கிருஷ்ணராஜசாகர் அணை நிரம்பி அதிலிருந்து வழியும் நீரும், கிருஷ்ணராஜசாகரிலிருந்து மேக்கேதாட்டு வரையிலான சுமார் 110 கி.மீ. தொலைவுக்கு காவிரிக்கரையில் பெய்யும் மழைநீரும்தான் மேட்டூர் அணைக்குக் கிடைத்து வருகிறது. மேக்கேதாட்டு மற்றும் இராசிமணல் பகுதிகளில் அணைகள் கட்டுவதன் மூலம் இதுவரை கிடைத்துவந்த காவிரிநீரையும்கூட இனி கர்நாடகம் தடுத்து வைத்துக் கொள்ளும். இதனால் தஞ்சை டெல்டா மாவட்டங்களின் வாழ்வாதாரத்துக்கு அடிப்படையாக உள்ள காவிரி நீரானது இனி கானல் நீராக மாறிவிடும்.

மேக்கேதாட்டு பகுதியில் காவிரியின் குறுக்கே அணை கட்டும் திட்டத்துக்கு ஒப்புதல் கேட்டு கர்நாடக அரசு 2011-லிருந்து மைய அரசிடம் தொடர்ந்து மனு செய்து வந்துள்ளது. இக்காலகட்டங்களில் கர்நாடகத்தில் பா.ஜ.க. ஆட்சியும், மத்தியில் காங்கிரசு கூட்டணி ஆட்சியும் அதிகாரத்தில் இருந்துள்ளன. இப்போது கர்நாடகத்தில் காங்கிரசு ஆட்சியும் மத்தியில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியும் அதிகாரத்தில் உள்ளன. காங்கிரசு, பா.ஜ.க. ஆகிய இரு 'தேசிய' கட்சிகளுமே இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் தீவிரமாக இருப்பதையே இவை காட்டுகின்றன. போதாக்குறைக்கு, எங்கள் மாநிலத்தில் அணைகட்ட தமிழ்நாடு எதிர்ப்பு தெரிவிப்பது எந்தவகையிலும் நியாயமானதல்ல என்கிறார், கர்நாடகத்தின் முக்கிய கட்சிகளில் ஒன்றான மதச்சார்பற்ற ஜனதாதளக் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமருமான தேவேகவுடா.

கர்நாடக ஆட்சியாளர்கள் மேக்கேதாட்டு அணையின் மூலம் பெங்களூருவின் குடிநீர்தட்டுப்பாட்டைத் தீர்க்கப் போவதாகவும்,

தமிழக எல்லையிலிருந்து 3 கி.மீ. தொலைவில் பாறைகள் நடுவே காவிரி பாய்ந்தோடும் மேக்கேதாட்டு பகுதி.



விவசாயிகளின் நலனுக்காக கரும்பு விவசாயத்தை விரிவாக்கப் போவதாகவும் கூறுவது கடைந்தெடுத்த மோசடியாகும்.

உலக வங்கி - உலக வர்த்தகக் கழகத்தின் கட்டளைப்படி, தண்ணீரை வர்த்தகப் பொருளாக்கி அதற்கு விலை நிர்ணயிக்க வேண்டுமென்பதுதான் மைய அரசின் கொள்கை. தேசிய நீர்க்கொள்கையும் இதைத் தான் வலியுறுத்துகிறது. இதன்படி, உலகமய மாக்கம் தீவிரமாக நடைமுறைப்படுத்தப் பட்டதிலிருந்து பெங்களூரு நகரை குளோபல் சிட்டியாக்குவது என்ற முடிவின்படி எஜ்ஜி புரா, எல்.ஆர்.நகர், அம்பேத்கர்நகர், சாஸ்திரி நகர் போன்ற பகுதிகளிலிருந்து இலட்சக்கணக் கான ஏழைகள் கட்டாயமாக வெளியேற்றப் பட்டதோடு, பெங்களூரின் குடிநீரைத் தனி யாருக்குத் தாரைவார்ப்பதும் வேகமாக நடந்தேறி வருகிறது. 2002-இல் பெங்களூரு ஏரிகள் வளர்ச்சி ஆணையம் தொடங்கப்பட்டு ஹெப்பல ஏரியானது ஓபராய் குழுமத்தின் ஈஸ்ட் இண்டியா ஓட்டலுக்குக் குத்தகைக்கு விடப்பட்டது.



காவிரியின் குறுக்கே மேக்கேதாட்டு அணையைக் கட்டத் திட்டமிடும் கர்நாடக அரசின் அடாவடித்தனத்தை எதிர்த்து தஞ்சை டெல்டா மாவட்டங்களில் நடந்த கடையடைப்புப் போராட்டம்

பன்னாட்டு ஏகபோக நிறுவனங்களின் பிடியில் உள்ள பெங்களூருவின் குடிநீர் விநியோகத்தின் காரணமாக காவிரியின் துணை ஆறான ஆர்க்காவதியிலிருந்தும், ஏரிகள்-குளங்களிலிருந்தும் வரைமுறையின்றி நீர் உறிஞ்சப்பட்டு, ஷாப்பிங் மால்கள், தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள், பேரங்காடிகள், சுற்றுலா விடுதிகள், நட்சத்திர ஓட்டல்கள், மேட்டுக்குடியினருக்கான ஆடம்பர குடியிருப்புகள், வாட்டர்தீம் பார்க்குகள் - என தாரை வார்க்கப்பட்டு வருகிறது. பெங்களூரு நகர எல்லைக்குள் சாரக்கி அக்கிரகார ஏரி, சம்பங்கி ஏரி, கதிரேனஹள்ளி ஏரி, தர்மபூதி ஏரி, கோரமங்களா ஏரி முதலான ஏரிகள் இருந்த இடம் தெரியாமல் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டுள்ளன. பெங்களூருவின் குடிநீர் தேவையை ஏரிகள் மூலம் கணிசமாக ஈடு செய்ய வாய்ப்பிருந்த போதிலும், தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களின் கொள்ளைக்காகவும், வீட்டுமனைத் தொழிலில் ஈடுபட்டுள்ள புதுப்பணக்கார மாஃபியா கும்பலின் ஆதாயத்துக்காகவும் ஏரிகள் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டன; அல்லது, அவை வீட்டுமனைகளாக மாற்றப்பட்டன. இதனால்தான் பெங்களூரு நகரில் குடிநீர் தட்டுப்பாடும் கட்டணக் கொள்ளையும் தீவிரமாகியுள்ளது.

அடுத்து, கர்நாடகத்தில் கரும்பு விவசாயிகளின் தற்கொலை தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையில் மேக்கேதாட்டு அணைத் திட்டத்தின் மூலம் 4.5 லட்சம் ஹெக்டேர் நிலப்பரப்பில் கரும்பு விவசாயத்தை விரிவாக்கப் போவதாக அமைச்சர் எம்.பி.பாட்டீல் அறிவித்துள்ளார். கர்நாடக விவசாயிகளின் தற்கொலைச் சாவுகளுக்கு தண்ணீர் பற்றாக்குறை காரணமல்ல. கரும்புக்கு உரிய விலை கிடைக்காததாலும், உரம்-பூச்சிமருந்துகளின் விலை யேற்றத்தாலும், இலவச மின்சாரம் ரத்து செய்யப்பட்டதாலும், கொள்முதல் செய்யப்பட்ட கரும்புக்கு சர்க்கரை ஆலை முதலாளிகள் ஆண்டுக்கணக்கில் பாக்கியைத் தராமல் விவசாயிகளை வஞ்சித்து வருவதாலும்தான் கரும்பு விவசாயிகள் கடன் சுமை தாளாமல் தற்கொலை செய்து கொள்கின்றனர். தற்போது கரும்பு விவசாயத்தை விரிவுபடுத்துவதன் மூலம் சர்க்கரை மற்றும் கரும்புச் சக்கையிலிருந்து மின்சாரம் மற்றும் சாராயத்துக்கான கச்சாப்பொருள் முதலானவற்றின் மூலம் கார்ப்பரேட் முதலாளிகள் மேலும் கொழுப்பதற்குத்தான் மேக்கேதாட்டு அணைக்கட்டு திட்டமே அன்றி, அது விவசாயிகளின் நலனுக்கானதல்ல.

கார்ப்பரேட் கொள்ளைக்கான மேக்கேதாட்டு அணைத்திட்டத்தை எதிர்த்தும், காவிரியில் தமிழகத்தின் நியாயவுரிமையை வலியுறுத்தியும் பட்டுக்கோட்டை வி.வி.மு.வினர் நடத்திய முற்றுகைப் போராட்டம்



ஏற்கெனவே சுற்றுலாத் தலம் என்ற பெயரில் யானைகளின் வழித்தடங்களை ஆக்கிரமிப்பது, காட்டை அழிப்பது, கிரானைட் குவாரிகள் அமைப்பது, சட்டவிரோதமாக மரங்களை வெட்டுவது முதலானவற்றால் யானைகளும் காட்டு விலங்குகளும் வாழ்விடம் பாதிக்கப்பட்டு உணவுக்கும் குடிநீருக்குமாக அலைபாய்ந்து கிராமங்களையும் விவசாயப் பயிர்களையும் நாசமாக்குவது அதிகரித்து வருகிறது. இந்நிலையில், மேக்கேதாட்டு அணை கட்டப்படுமானால் இப்பகுதியில் வாழ்ந்துவரும் யானைகள், குரங்குகள்

முதலான விலங்கினங்களின் வாழ்விடம் பறிக்கப்பட்டு அவை எதிர்த் தாக்குதலை நடத்தும் அபாயம் ஏற்படும். மேலும், ஏறத்தாழ ஐயாயிரத்துக்கும் மேலான மரங்கள் வெட்டப்பட்டுதான் மேக்கேதாட்டு அணையையே கட்ட முடியும் என்பதால், ஒட்டுமொத்த சுற்றுச் சூழலும் கடுமையாகப் பாதிக்கப்படும்.



**தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களின் கொள்ளைக்காக ஏரிகள் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டன. அல்லது, அவை வீட்டுமனைகளாக மாற்றப்பட்டன. இதனால்தான் பெங்களூரு நகரில் குடிநீர் தட்டுப்பாடும் குடிநீர்க் கட்டணக் கொள்ளையும் தீவிரமாகியுள்ளது.**

இந்த உண்மைகளை மூடி மறைத்துவிட்டு, கூடங்குளம் அணுமின் நிலையம் செயற்படுத்தப்பட்டால் தமிழகத்தின் மின்தட்டுப்பாடு நீங்கிவிடும் என்ற மாயத் தோற்றத்தை ஜெயா கும்பலும் பார்ப்பன ஊடகங்களும் ஏற்படுத்தியதைப் போலவே, மேக்கேதாட்டு அணைக் கட்டு திட்டத்தால் பெங்களூருவின் குடிநீர் பற்றாக்குறை தீர்ந்து குடிநீர் கட்டணம் குறைந்துவிடப் போவதைப் போன்றதொரு பிரச்சாரத்தை ஊடகங்களின் துணையோடு கர்நாடக ஆட்சியாளர்கள் நடத்தி வருகின்றனர்.

மேலும், காவிரியில் நீர் கேட்டால், நாங்கள் ஒகேனக் கல்லை திருப்பிக் கேட்போம் என்று இனவெறியைக் கிளறிவிடுகின்றனர். தமிழகத்தில் கடந்த மார்ச் 28 அன்று முழு அடைப்பு நடந்த அதேநாளில், கன்னட இனவெறியர்கள் தமிழக அரசியல் தலைவர்களின் படங்களை வைத்து பாடைகட்டி ஊர்வலம் நடத்தி அவற்றைக் கொளுத்தியதோடு, தமிழகத்துக்கு எதிராகக் கன்னட இனவெறியைத் தூண்டும் வகையில் கடந்த ஏப்ரல் 18-ஆம் தேதியன்று கடையடைப்புப் போராட்டத்தையும் நடத்தியுள்ளனர். கர்நாடக காங்கிரசு முதல்வரான சித்தராமையாவும் எதிர்க்கட்சித் தலைவர்களும் கன்னட இனவெறி அமைப்புகளுக்கு நன்றியும் பாராட்டும் தெரிவிக்கின்றனர். தங்களைத் ‘தேசிய’ கட்சிகளாகக் கூறிக் கொள்ளும் காங்கிரசும் பா.ஜ.க.வும் கன்னட இனவெறி அமைப்புகளை வெளிப்படையாகவே ஆதரிக்கின்றன. இது எங்களது மாநில உரிமை என்று அவை வாதிடுகின்றன. ஆனால் தமிழகத்தில் காவிரி நீருக்கான நியாயவுரிமைக்காகப் போராடினால், அது குறுகிய இனவாதம், பிராந்தியவாதம் என்கின்றன.

காவிரி நதிநீர் தீர்ப்பாயத்தின் முடிவைச் செயல்படுத்த மறுத்து வருகிறது கர்நாடகம். இந்த விவகாரத்திலும், மேக்கேதாட்டு அணை விவகாரத்திலும் கர்நாடக காங்கிரசு, பா.ஜ.க., மதச்சார்பற்ற ஜனதாதளம் ஆகிய முக்கிய கட்சிகளின் தலைவர்கள் அரசியல் வேறுபாடுகளைக் கடந்து ஓரணியில் நிற்கின்றனர். அனைத்து மாநிலங்களின் உரிமைகளையும் சமமாக மதிப்பதாக நாடகமாடும் மோடி அரசு , தமிழகத்தின் வாழ்வுரிமையைப் பறிக்கும் மேக்கேதாட்டு அணைத் திட்டத்துக்காக பன்னாட்டு நிதி நிறுவனங்களிடம் கடன் வாங்க ஒப்புதல் அளிப்பதன் மூலம் கர்நாடகத்துக்கு ஆதரவாகவும் தமிழகத்துக்கு எதிராகவும்தான் செயல்படுகிறது.

ஏற்கெனவே காவிரியில் உரிய நீரைத் தராமல் தமிழகத்தின் நியாயவுரிமையை கர்நாடகம் தொடர்ந்து மறுத்து வருவதற்கெதிராகப் போராடி வருகிறோம். தற்போது அரைகுறையாகக் கிடைக்கும் நீரையும் கர்நாடகம் பறித்துக் கொள்ளக் கிளம்பியுள்ளது. தமிழகத்தின் உயிர்நாடியான காவிரி பிரச்சினையில் மட்டுமல்ல; முல்லைப்பெரியாறு, தமிழக மீனவர் பிரச்சினை பிரச்சினை முதலானவற்றிலும் ‘தேசிய’ கட்சிகளும் மைய அரசும் தமிழகத்தின் நலன்களுக்கு எதிராகவே உள்ளன. நாட்டு நலனுக்கானது, மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கானது என்ற பெயரில் கூடங்குளம், மீதேன் திட்டம், கெய்ல் எரிவாயுக் குழாய் பதிப்பு, நியூட்ரினோ திட்டம் -என அடுத்தடுத்து தமிழகத்தின் மீது கார்ப்பரேட் கும்பலின் கொள்ளைக்கான நாசகாரத் திட்டங்கள் திணிக்கப்படுவதும், தமிழர்களின் வாழ்வுரிமை பறிப்பும் கேள்விமுறையின்றித் தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதர மாநிலங்களில் எதிர்க்கப்படும் பேரழிவுக்கான திட்டங்கள் எல்லாம் தேசியம், தேசிய ஒருமைப்பாடு, தொழில் வளர்ச்சி என்ற பெயரில் தமிழகத்தில் திணிக்கப்படுகின்றன.

இந்நிலையில், கார்ப்பரேட் கொள்ளைக்கான நாசகாரத் திட்டங்களைத் திணிக்கும் இன்றைய ஆட்சியை எதிர்த்தும், தேசியம் பேசும் ஓட்டுக்கட்சிகளின் துரோகத்தை அம்பலப்படுத்தியும், குருட்டுத்தனமான தேசியத்தை நிராகரித்தும், தமிழகத்தின் நியாயவுரிமையை நிலைநாட்டும் வகையில் போர்க்குணமிக்க மக்கள் போராட்டங்களைக் கட்டியமைக்க வேண்டும். தமிழகத்தின் நியாயவுரிமையை மறுக்கும் மைய அரசுக்கு எதிராக, தமிழகத்தில் எந்தவொரு அதிகாரத்தையும் அது செயல்படுத்த முடியாதபடி, அவற்றின் அதிகார அமைப்புகளும் அலுவலகங்களும் செயல்படாவண்ணம் தொடர் முற்றுகைப் போராட்டங்கள் மூலம் நிர்ப்பந்தித்தும், மைய அரசுக்கு வரி கொடுக்க மறுத்தும் பெருந்திரளான மக்கள் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்லவும் வேண்டும். அத்தகைய தொடர்ச்சியான விடாப்பிடியான போராட்டங்கள் மூலம்தான் வஞ்சிக்கப்படும் தமிழகத்தின் நியாயவுரிமையை நிலைநாட்ட முடியும்.

● குமார்

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி...

சொல்கிறோம் எனபேச்சுவார்த்தையை இழுத்தடித்துக் கொண்டே சென்றனர். இச்சதியை அம்பலப்படுத்தி, ம.உ.பா. மையத்தின் தோழர் ஆனந்த், ம.க.இ.க.தோழர் ஜீவா இருவரும் மக்களிடையே எழுச்சிமிகு உரையாற்றினார்கள். விருத்தாச்சலம் - கார்மாங்குடி ஆற்றுமணல் கொள்ளைக்கு எதிராக நடந்த போராட்ட அனுபவத்தை விளக்கி, மணல் கொள்ளையர்கள்- அதிகாரிகளின் கள்ளக்கூட்டை அம்பலப் படுத்தி பேசினர். தோழர்களின் உணர்ச்சிபூர்வமான பேச்சும், விண்ணைப் பிளந்த முழக்கங்களும் இப்பகுதிவாழ் மக்களை ஆவேசம் கொள்ள வைத்தது.

அதைத் தொடர்ந்து ‘‘ கல்லணை நிலைத்து நிற்கவும், திருச்சி-தஞ்சை டெல்டா பகுதியில் விவசாயம் நடக்கவும்கூகூர், அன்பில் -மங்கம்மாள்புரத்தின் ஆற்றுப் பகுதியில் ஒரு பிடி மணலைக்கூட எடுக்க அனுமதிக்க முடியாது. அவனுங்க கிட்ட என்ன பேச்சுவார்த்தை? தாசில்தார் கைப்பட எழுதிக் கொடுத்ததை அவன் அமல்படுத்த மாட்டான்னா, நாம அமல்படுத்துவோம். எவன் வந்தாலும் வரட்டும் பாத்துக்கலாம்’’ என்று, போலீசின் தடுப்பரண்களை மீறி கடப்பாறை, கம்புகளுடன் ஆற்றுக்குள் இறங்கி, கொட்டகைக்குள் பதுங்கியிருந்த அடியாட்களை உழைக்கும் மக்கள் விரட்டியடித்தனர். ஆற்றின் நடுவே இருந்த கொட்டகையை பிய்த்தெறிந்து, போர் பம்ப் மற்றும் சின்டெக்ஸ் தண்ணீர் டேங்க்கையும் அடித்து நொறுக்கி தரைமட்டமாக்கினர். கிராம மக்களின் போர்க்குணத்தின் முன் போலீசும் அதிகார வர்க்கமும் மண்டியிட்டது. மக்கள் சக்தியின் மகத்துவத்தை ருசித்த உழைக்கும் மக்களின் உற்சாகம் கரைபுரண்டோடியது.

உழைக்கும் மக்களே அதிகாரத்தை ஏந்திச் சுழற்றும் வகையில் மக்கள் அதிகார மன்றங்களை கிராமம்தோறும் கட்டியமைப்பது மட்டுமே இதற்கு ஒரே தீர்வு என்பதைப் படிப்பினையாக உணர்த்திய இப்போராட்டத்தின் முதற் கட்ட வெற்றியானது இந்த வட்டார மெங்கும் எதிரொலித்து, உழைக்கும் மக்களிடம் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

- பு.ஜ. செய்தியாளர், திருச்சி.



# “வனவிலங்கு சரணாலயத் திட்டத்தைத் தடுத்து நிறுத்துவோம்!”

## – கொடைக்கானல் வட்டார மக்களின் போர்க்கோலம்!

மலைகளின் இளவரசி என போற்றப்படும் கொடைக்கானலை நினைத்தாலே, சில்லென வீசும் காற்றும், கண்ணைக்கவரும் வெண்பனி சூழ்ந்த இயற்கைக் காட்சிகளும் நம் கண்முன்னே விரியும். ஆனால், முன்னாள் தமிழக முதல்வரான ஜெயலலிதா, தமிழகத்தின் 12-வது வனவிலங்கு சரணாலயமாக கொடைக்கானல் மாற்றப்படும் என்று செப்.2013-இல் அரசாணை வெளியிட்டு, தனது பினாமி ஆட்சியின் மூலம் காலங்காலமாக இப்பகுதியில் வாழ்ந்துவரும் பழங்குடி மக்களின் வாழ்வுரிமையைப் பறித்து அவர்களைக் கட்டாயமாக வெளியேற்றக் கிளம்பியுள்ளார்.

சுற்றுலாத்தலமாகவும் காபி, மிளகு, ஏலக்காய், ஆரஞ்சு, பலா, கேரட், பீட்ரூட், செவ்வாழை, தேன், கிராம்பு உள்ளிட்ட ஏராளமான உணவுப் பொருட்களை வழங்கும் அமுதசுரபியாகவும், ஏறத்தாழ 6 இலட்சம் மக்களின் வாழ்வாதாரமாகவும் விளங்கும் இந்த மலைப்பகுதியில்தான், திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்களின் கொடைக்கானல், பழனி மற்றும் பெரியகுளம் வட்டப் பகுதிகளை உள்ளடக்கி காடுகள், குடியிருப்புகள், விளைநிலங்கள் உள்ளிட்டு சுமார் 608.95 ச.கி.மீ. பரப்பளப்பளவில் இந்த வனவிலங்கு சரணாலயம் அமையவுள்ளது.

2006-இல் போடப்பட்ட வன உரிமைச் சட்டத்தின் விதிகளுக்கு எதிராக பழங்குடி மக்களின் வாழ்வுரிமையைப் பறிக்கும் ஜெயா அரசை எதிர்த்து ‘‘வன உரிமையை மீட்டெடுக்கும் பழங்குடியினர் கூட்டமைப்பு’’ சார்பில் கடந்த மார்ச் 30 அன்று கொடைக்கானலில் பேரணியும் ஆர்ப்பாட்டமும் நடந்தது. பழங்குடியினர் கூட்டமைப்புத் தலைவர் முருகேசன் தலைமையில் விண்ணதிரும் முழக்கங்களுடன் தொடங்கிய இப்பேரணியில், பழங்குடியினர் மட்டுமின்றி, அனைத்து தரப்பு உழைக்கும் மக்களும் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த சமூக ஆர்வலர்களும், மக்கள் உரிமை பாதுகாப்பு மையம், மக்கள் கலை இலக்கியக் கழகம், விவசாயிகள் விடுதலை முன்னணி ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த தோழர்களும், வழக்குரைஞர்களும் பெருந்திரளாக கலந்துகொண்டனர். ம.க.இ.க. மையக்கலைக்குழுவின் பறையோசை ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்ற பேரணியை கடைசிவரை உற்சாகத்துடன் வழிநடத்திச் சென்றது. பின்னர், கொடைக்கானல் கோட்டாட்சியர் அலுவலகம் முன்பாக கோரங்கொம்பு பழங்குடியினர் கூட்டமைப்பைச் சேர்ந்த வி.சின்னாண்டி தலைமையில் நடந்த ஆர்ப்பாட்டத்தில், நீலமலை வழக்குரைஞர் கே.விஜயன், மதுரை உயர் நீதிமன்ற வழக்குரைஞரும் மக்கள் உரிமை பாதுகாப்பு மையத்தின் மதுரை கிளையின் துணைச் செயலாளருமான வாஞ்சிநாதன், திருவள்ளூர் மாவட்டம் தமிழக ஆதிவாசி சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச்செயலாளர் குணசேகரன், மச்சூர் ரவிச்சந்திரன், ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் குமாராசாமி, கொடைக்கானல் மக்கள் சிவில் உரிமைக் கழகத்தைச் சேர்ந்த ஜெசிந்தா, உசிலை வட்டார வி.வி.மு. செயலாளர் குருசாமி ஆகியோர் எழுச்சிமிகு கண்டன உரையாற்றினர். இந்த ஆர்ப்பார்ட்டத்தைத் தொடர்ந்து, கொடைக்கானல் பகுதிவாழ் உழைக்கும் மக்கள் அடுத்த கட்ட போராட்டத்துக்கு ஆயத்தமாகி வருகின்றனர்.

-பு.ஜ.செய்தியாளர், கொடைக்கானல்.

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No.42648/85
REGISTERED No.TN/CC(S)Dn/190/15-17. Licensed to Post without pre-payment under WPP No.TN/PMG/CCR/WPP-562/15-17.

# "ஆளும் அருகதையற்ற அரசுக் கட்டமைப்பை வீழ்த்துவோம்! மக்கள் அதிகாரத்தை நிறுவுவோம்!!"

## மே நாள் சூளுரை!




நரேந்திர மோடி அரசு கொண்டுவந்துள்ள நிலம் கையகப் படுத்தும் அவசரச் சட்டத்திற்கு எதிராக நடந்துவரும் விவசாயிகளின் போராட்டம் தொடங்கி காவிரியில் தமிழகத்தின் நியாய வுரிமையைக் கோரி தமிழக விவசாயிகளும் மக்களும் நடத்திவரும் போராட்டம் வரையிலும்; பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு தாக்குதலுக்கு எதிரான போராட்டங்கள் தொடங்கி, ஆற்று மணல் கொள்ளைக்கு எதிரான போராட்டம் வரையிலும்; இன்னும் இலஞ்சம், ஊழல், அதிகார முறைகேடுகளுக்கு எதிராக, டாஸ்மாக் கடைகளுக்கு எதிராக - என மக்கள் தமது வாழ்வாதாரத்திற்காகவும், உரிமைகளுக்காகவும் நடத்தி வரும் எண்ணிலடங்கா போராட்டங்கள் அனைத்தும், "நமது நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகக் கட்டமைப்பானது நெருக்கடிகள் முற்றி அழுகிவிட்டது; அரசும் ஆளும் வர்க்கங்களும் ஆளும் தகுதியை இழந்துவிட்டன; இனி, தனித்தனி சிக்கல்களுக்கு தனித்தனி தீர்வுகளையும் கோரிக்கைகளையும் முன்வைத்து தனித்தனி இயக்கங்கள் நடத்தி தீர்வு காண முடியாததாகிவிட்டது; இந்தக் கட்டுமானங்கள் எவையொன்றையும் சீர்திருத்தி மாற்றியமைக்கவும் முடியாதபடி திவாலாகி, தோற்றுப்போய், எதிர்நிலைச் சக்திகளாகிவிட்டன" - என்பதைத்தான் துலுக்கமாக எடுத்துக் காட்டுகின்றன.

இதன் காரணமாக இவ்வாண்டு மே நாள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் கடமையை உழைக்கும் வர்க்கத்தின் முன் வைக்கிறது. நமது பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தற்போதைய அரசியல் கட்டமைப்புக்கு வெளியே தான் உள்ளன. ஆளும் வர்க்கத்தின் அதிகாரத்துக்குச் சவால் விட்டு, தனது சொந்த அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்வதற்கான போராட்டங்களைத் தொடுக்குமாறு உழைக்கும் மக்களைக் கோருகிறது என்பதை உணர்த்தி, "ஆளும் அருகதையற்ற அரசுக் கட்டமைப்பை வீழ்த்துவோம்! மக்கள் அதிகாரத்தை நிறுவுவோம்!" - என்ற முழக்கங்களை முன்வைத்து ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு; ஆகிய புரட்சிகர அமைப்புகள் தாங்கள் செயல்படும் பகுதிகளில் மே நாள் பேரணி - ஆர்ப்பாட்டங்களை நடத்தின. ●